# இயேசுவே வாரும்

**காலேப் யோசுவா** **ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்.வெளி.22.20 9444701953, 9444709980**
**32,ஜெமி எத்திராஜ் நகர், மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com**
**எரையமங்கலம் ரோடு, வலைத்தளம்: www.yesuvaevaarum.com**
**மப்பேடு, பேரம்பாக்கம் (வழி) முகநூல்: www.facebook.com/yesuvaevaarum**
**திருவள்ளூர் மாவட்டம் - 631402**

## ஆத்தும மீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது. சங்.49:9
(The Redemption of Soul is Precisious. Psa.49:8)
## ஆத்தும மீட்பு மிகவும் விலையேறப்பெற்றதாயிருக்கிறது.

**தேவத்துவத்தில் திரித்துவ உபதேசத்தில் உள்ள சபைகளின் தலைவர்கள், போதகர்கள், விசுவாசிகள் தங்கள் ஆத்தும இரட்சிப்பை அடைந்துள்ளார்களா? இல்லை, இல்லவேயில்லை என்பதே வேதவாக்கியங்களுக்கடுத்த என் கருத்து. ஏனென்றால் திரித்துவ உபதேசம் அப்.பவுல் பிரசங்கிக்காத வேறொரு சுவிசேஷம் (கலா.4:8) ஆதலால் தேவன் தம்முடைய கோபத்திற்கு வழிதிறந்து, அவர்கள் ஆத்துமாவை மரணத்திற்கு விலக்கிக் காக்கவில்லை. (சங்.78:50)**
**ஆத்தும இரட்சிப்பு கர்த்தருடையது.(சங்.3:8)**
**அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார் : இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். (அப்.17: 30) திரித்துவ உபதேசத்தில் உள்ள அனைவருக்கும் கட்டளையிடுகிறார்.**

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா, கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பிரியமானவர்களுக்கு எழுதுகிறதாவது : பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. சமீப நாட்கள் ஒன்றில் காஞ்சிபுரத்திலிருந்து ஒரு சகோதரர் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தான் ஒரு பெந்தெகொஸ்தே சபை பாஸ்டர் என்றும், **இயேசுவே வாரும்** சமீப வெளியீட்டை ஒரு நபரிடமிருந்து பெற்று அதை தியானித்ததாகவும், அதில் அநேக ஆவிக்குரிய கருத்துக்களை கண்டதால் இதர வெளியீடுகளும் தனக்கு தேவை என கூறினார். ஆதலால் என்னை நேரில் வந்து சந்தித்தார். எனது அனைத்து செய்திகளையும் ஜெராக்ஸ் நகல் எடுத்து செல்ல விரும்புவதாக கூறினார். நான் அவரது மனோவாஞ்சையைக் கண்டு ஆழ்ந்த சத்தியங்களைக் கொண்ட சுமார் 35 செய்திகளை தெரிந்தெடுத்து அவரிடம் எனது ஒரிஜினல்

காப்பிகளை கொடுத்தேன். பொதுவாக நான் யாருக்கும் எனது ஒரிஜினல்களை கொடுப்பது இல்லை. ஆனாலும் இந்த சகோதரனுடைய வாஞ்சையை கருத்தில் கொண்டு அவரிடம் ஒரிஜனல்களை கொடுத்தேன். அவர் அதை நகல் எடுக்க ரூ.700/- செலவு செய்ததாக கூறி, எனக்கும் ஒரு காணிக்கையாக ரூ.250/- கொடுத்து சென்றார். இந்த 35 புத்தகங்களில் உள்ள ஆழ்ந்த சத்தியங்களை தனது சபையில் நடக்கும் வேதபாட மற்றும் ஆராய்ச்சி கூட்டங்களில் போதிக்க போவதாகவும் கூறிச் சென்றார். தேவன் நிச்சயமாக இவரைக் கொண்டு அவரது சபையில், பகுதிகளில் சத்தியத்தை அறியும் ஒரு எழுப்புதலை விசுவாசிகள் மத்தியில் கொண்டு வருவார் என விசுவாசிக்கிறேன். நீங்களும் அவருக்காக ஜெபியுங்கள்.

3. அடுத்து 13-07-2018 அன்று மாலை 6 மணியளவில், கேரளாவிலிருந்து ஒரு பாஸ்டரிடமிருந்து, வயது 72, அழைப்பு வந்தது. அவர்தான் கடந்த மாத **இயேசுவே வாரும்** வெளியீட்டை ஒரு அறிமுகமானவரிடமிருந்து பெற்றதாகவும், அதை 13 ம் தேதி காலை 10 மணியளவில் வாசிக்க ஆரம்பித்ததாகவும், தான் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்களை அடுத்து அடுத்து படிக்க நேரிட்டதாலும், தன் இருதயத்தின் எண்ணங்களை அது பிரதிபலித்துக் கொண்டே இருந்ததினாலும், தான் அதில் ஒருமனப்பட்டுவிட்டதாகவும் புத்தகத்தை கீழே வைக்க மனதில்லாமல் தொடர்ந்து ஆர்வமிகுதியினால் படித்துக்கொண்டே வந்து மாலை 6 மணிக்கு முடித்ததாகவும், உடனே என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் கூறினார். அதன் பின் தன் ஊழியத்திற்கடுத்த காரியங்களை என்னோடு நீண்ட நேரம் பகிர்ந்துக்கொண்டார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

4. இதன் பின்பு திருச்சி, சுப்பிரமணியபுரத்திலிருந்து இரவு 10 மணிக்கு ஒரு சகோதரர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் ஊழியம் செய்து வருவதாகவும், தனது வயது 82 என்றும் கூறினார். தான் **இயேசுவே வாரும்** கடந்த இதழை வாசித்துக்கொண்டிருப்பதாகவும், தியானித்துக்கொண்டிருந்த வேளையில் என்னோடு பேச வேண்டும் என்ற ஆர்வம் உண்டானதினால் இரவு 10 மணிக்கு தொடர்பு கொள்கிறேன் என்றார். 82 வயதில், இரவு 10 மணிக்கு மேல் தனக்கு வேண்டிய ஆத்தும ஆகாரத்தை **இயேசுவே வாரும்** வெளியீட்டில் கண்டதாகவும் அதை புசித்து திருப்தி அடைந்ததாகவும் கூறினார். என் தேவனுக்கு ஸ்தோத்திர பலிகள் என் வாயிலிருந்து புறப்பட்டு சென்றன.

5. இந்த நிலையில் எனக்கு அறிமுகமான ஒரு சகோதரன் தான் ஒரு நம்பர் தருவதாகவும், சிவகாசியில் இருக்கும் அதற்குரிய நபரை நான் தொடர்பு கொண்டு, அவரது விலாசத்தை கேட்டு அறிந்து அவருக்கு **இயேசுவே வாரும்** வெளியீடுகளை அனுப்பி வைக்க கேட்டுக்கொண்டார். நான் அவரோடு தொடர்பு கொண்டேன். அவரது விலாசத்தை பெற்றேன். **இயேசுவே வாரும்** சமீப வெளியீடுகள் சிலவற்றை அனுப்பி வைத்தேன். சில நாட்கள் கழித்து அவர் என்னை தொடர்பு கொண்டார். நான் முதலில் அவரை தொடர்பு கொண்ட போது என் பெயர் யோசுவா என்று சொன்னதினால்தான், அவரது விலாசத்தை எனக்கு கொடுத்ததாகவும், காலேப் யோசுவா என்று கூறியிருந்தால் தனது விலாசத்தை கொடுத்திருக்க மாட்டேன், எனென்றால் என்னைப்பற்றி **இயேசுவே வாரும்** வெளியீடு மூலமாக அவர் நன்கு அறிந்திருப்பதாக கூறினார். நான் பிறர்மீது குற்றம் சாட்டும் ஒரு நபர் என என்னை கடிந்துக்கொண்டார். கவனியுங்கள். சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கு செவிகொடாமல், அவர்களை கண்டிப்பாய் கடிந்துக்கொள் (தீத்.1:14) என்று தானே பவுல், தீத்துக்கு அறிவுரை கூறினான். எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்துக்கொண்டு புத்தி சொல் என்று தானே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறான். ஆதலால் ஊழியம் குற்றம் கண்டுபிடிப்பது அல்ல. தவறு செய்கிறவர்களை கண்டித்து, எழுதுவதில் தவறு ஒன்றும் இல்லை. மேலும் அது வேதபூர்வமானது என்று எண்ணுகிறேன்.

6. இது தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு, தங்கள் சொந்த அபிப்பிராயங்களையும், வியாக்கியானங்களையும் கொடுக்கிற காலமாய் இருக்கிறது. ஆதலால் அவர்கள் தவறுக்குள்ளாகிறார்கள். மக்களை குழப்பத்திற்குள்ளாக்குகிறார்கள், திசைத்திருப்புகிறார்கள். ஆதலால் தவறுகளை கண்டிக்க வேண்டியதாய் இருக்கிறது. அது குறை கூறுதல் அல்ல. தவறுக்கு விரோதமாக பிரசங்கிக்க வேண்டியதுள்ளது. இந்நாட்களில் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி என்றுக்கூறி, ஆங்காங்கு இயங்கி வரும் சபைகளுக்கு விரோதமாக, அதன் ஊழியக்காரர்களுக்கு விரோதமாக அதனுடைய போதகர்களுக்கு விரோதமாக விசுவாசிகளுக்கு விரோதமாக நான் கூக்குரலிட வேண்டியதாய் உள்ளது. தவறுகள் / குறைகள் என்று தோன்றும் அனைத்திற்கும் விரோதமாக, தேவன் நிமித்தம் நான்

பொல்லாங்கானவைகளுக்கு, பாவத்திற்கு, தவறுக்கு விரோதமாக கூக்குரலிட வேண்டியதாய் உள்ளது.

7. பாருங்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய எனக்கு : லவோதிக்கேயா சபைக்காலத்து செய்தியில் எந்த விதமான பொறுப்பும் இல்லை, எனக்கு அனைத்துமே தேவைப்படும் நேரங்களில் சந்திக்கப்படுகின்றன. எனக்கு அனைத்தும் கிடைக்கிறது. எல்லாரும் என்மீது அன்பு கொண்டுள்ளார்கள், எனக்கு விரோதமாக யாரும் கிடையாது. நான் யாரிடமும் எதுகுறித்தும் தர்க்கிக்காமல் அனைவரோடும் ஒப்புரவாகி அனைவருக்கும் ஒரு பிரியமான பாத்திரமாக நடந்து கொள்கிறேன், யாரிடமும் கருத்து வேறுபாடுகள் கிடையாதபடி நடந்து கொள்கிறேன் என்று என்னை நானே தேற்றிக்கொள்வேனாகில், அது என்ன? நான் உணவு தட்டுகளை துடைக்கும் ஒரு கந்தை துணியாகத்தான் இருப்பேன். இவ்வாறாக சகோ. பிரன்ஹாம் கூறுகிறார். சகோ. பிரன்ஹாம் மேலும் தன்னைக் குறித்து கூறும் போது I am known to be a critic. I am not critical, only anything that is wrong. We should criticise wrong (The way of a true prophet, page.11 para.2) என் கரத்தில் உள்ள இந்த செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பில் ஆங்கில செய்தியில் உள்ள முதல் 10 பக்கங்கள் கிடையாது. நான் இங்கு குறிப்பிட்ட பகுதி 11வது பக்க தொடக்கத்தில் உள்ளது. மேலும் சகோதரர் கூறுவதை கவனியுங்கள். Let me stand here, Lord against everything that's called wrong, everything that's looks wrong. I don't care what anyone says, let me stand. (**Straight is the way,** page.27,28 para.177. இந்த செய்தி தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை என நினைக்கிறேன்.

8. வஞ்சக ஆவியினால் வழிநடத்தப்படும் சிவகாசி சகோதரரே நீங்கள் ஏழாம் சபைக்கால தூதன் என்று விசுவாசிப்பவர் "சபை முழுவதும் சரியாயிருக்கும் வரைக்கும் கிறிஸ்து வர முடியாது. அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் முடிவில் வந்துவிட்டோம் என நம்புகிறேன்" என ஆகஸ்ட் 15, 1965 ல் தனது செய்தி "இதை அறியாமலிருக்கிறாய்" பக்கம் 70, பத்தி 4ல் கூறுகிறார். ஆனால் செய்தியில் இருக்கிறேன் எனக்கூறி செய்தியையே புரட்டும் நீங்கள் கிறிஸ்து 1963 ல் வந்துவிட்டார் என்கிறீர்கள். மேலும் இயேசு வந்தபின், இயேசுவே வாரும் என்று அழைக்கிறீரே என என்னை கிண்டலடிக்கிறீர், உம்முடைய சிந்தனையில் மனந்திரும்புதல் தேவை.

9. 12th செப்டம்பர் இரவு எனக்கு வாட்ஸ்ஆப்பில் ஒரு தகவல் வந்தது. அதில் ஒரு பெண் பிரசங்கியார் வேதாகமபாடம் (Bible Study) எடுக்கப்போகிறார்கள் என்று விளம்பரம் வெளியிட்டிருந்தார்கள். ஒரு பெண் வேதாகமபாடம் (Bible Study) எடுப்பதா? இப்படிபட்ட அயோக்கியதனம், வேதமுரண்பாடுகள் அனைத்தும் இந்த திரித்துவ உபதேசங்களில் உள்ளவர்கள் மத்தியில் தான் நடக்கிறது. ஏனென்றால் திரித்துவ சபையே ஒரு முரண்பாட்டின் வித்துதானே. ஆதலால் அவர்கள் அக்கிரமங்களை நடப்பிக்கிறார்கள். இதுவும் ஒரு பெரிய வெட்கக்கேடு. ஏனென்றால் இவர்கள் மத்தியில் தான் பெண் பிரசங்கிகள் உண்டு. பெண் பாஸ்டர்கள் உண்டு, பெண் பிஷப்புக்கள் உண்டு. ஆனால் வேதவாக்கியங்களில் எங்கும் இல்லை. இவை அனைத்தும் தேவனுடைய வார்த்தையை தலைகீழ் புரட்டுவதாகும். ஆகையால் இவர்களின் காரியங்கள் அனைத்தும் பிசாசினுடையதே.

10. இதன்பின், சிவகாசி சகோதரர் என்னிடம் நீங்கள் "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" என எழுதியுள்ளீர்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு பிப்ரவரி 28, 1963 ல் வந்துவிட்டாரே! வந்துவிட்டவரை, வாரும் என அழைப்பது ஏன் என்றார். அப்பொழுது தான் சிவகாசி நபர் பிசாசின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து கிறிஸ்து பிரன்ஹாம் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற, வேறொரு சுவிசேஷத்தை சார்ந்துள்ளவர் என புரிந்துக்கொண்டேன். இந்த பிரன்ஹாம் கிறிஸ்து மரமண்டைகள் என்றுமே தேவனுடைய வார்த்தையை தியானிப்பது இல்லை. இவர்களுக்கு பிரன்ஹாம் செய்தி புத்தகமே எல்லாம். ஆனாலும் அதையும் சரியாக தியானிக்காமல், அதில் அறைகுறை வேக்காடுகளாக இருந்துக்கொண்டு தங்கள் மனதில் தோன்றியதையே போதித்துக்கொண்டு வருகிறார்கள். கவனியுங்கள் ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் என அப்.யோவான் எழுதுகிறான். இதோ, சீக்கிரமாய் வருகிறேன் (வெளி.22:7) மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். (வெளி.22:20) இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. (வெளி.22:12) என்று கூறியவரை அப்.யோவான், ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் என அழைக்கிறான். அதாவது நியாயத்தீர்ப்புக்கு சீக்கிரமாய் வாரும் என அழைக்கிறான். அதே அறைகூவலைதான் நான் எழுதியுள்ளேன். இந்த அதிகப்பிரசங்கி அதை சரியாக புரிந்துக்கொள்ளவில்லை. பிப்ரவரி 28, 1963 அன்று ஏழு தூதர்களால் உண்டான மேகவளையம்

கர்த்தருடைய வருகை இல்லை என்பதை எத்தனையோ முறை வேதவாக்கியங்களைக் கொண்டு, தீர்க்கதரிசியின் செய்திகளை கொண்டு விளக்கியுள்ளேன். கேட்டவர்கள், அவிசுவாசத்தோடு கேட்டதினால், படித்ததினால் அது அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. சிவகாசி நபருக்கும் பிரயோஜனப்படவில்லை.

11. இதோடு என்னை விட்டாரா என்றால், இல்லை. என்னுடைய அழைப்புக்குறித்து கேள்விகள் கேட்கத் தொடங்கினார். நான் என்னுடைய அழைப்புக்குறித்து ஒவ்வொரு **இயேசுவே வாரும்** வெளியீட்டில் முதல் பக்கத்தில் எழுதி வருகிறேன். நான் என்னுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதி செய்துள்ளேன். பாருங்கள் 1978 முதல் தேவன் எனக்கு துணையாக இருப்பதால் தனிப்பட்ட ஒரு மனிதனாக இந்த கடினமான ஊழியத்தை செய்து வருகிறேன். இந்த ஊழியத்தில் உள்ள அனைத்து பணிகளையும் நானே செய்து வருகிறேன். பொருளாதார தேவைகளை எனது பிள்ளைகள் கவனித்துக்கொள்கிறார்கள். கர்த்தர் அதற்கென்றே அவர்களை ஆசீர்வதித்து வருகிறார். என் தேவன் என் உள்ளத்தில் கொண்டுவரும் தூண்டுதலைக் கொண்டும் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளை தியானித்தும் எனது நிருபங்களை / செய்திகளை எழுதி வருகிறேன். இதன் பின் இந்த சகோதரன் எனக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவருடைய போதனைகள் உண்டு. நான் இன்னும் அதை படிக்க வில்லை.

12. இப்பொழுது நீங்கள் உங்கள் ஊழியத்தை கடைசி கால செய்தி ஊழியம், இடிமுழக்க செய்தி ஊழியம், மணவாட்டி ஊழியம், வாட்ஸ்ஆப் ஊழியம், பேஸ்புக் ஊழியம், யூ டியூப் ஊழியம், டுவிட்டர் ஊழியம் என பற்பல பெயர்களால் உங்கள் மனம்போன போக்கில் அழைத்துக்கொள்கிறீர்கள். விசுவாசிகளாக சிலரைக் கொண்டு கூடி வரும் உங்கள் சபையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கூடாரம், மணவாட்டி கூடாரம், மணவாட்டி சபை, முடிவுகால சுவிசேஷ சபை, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு, ஏல்பெத்தேல், இயேசு கிறிஸ்து சபை, மறுரூபபடுத்தும் கூடாரம், கிறிஸ்து பிரன்காமின் சபை, தீர்க்கதரிசி பிரன்ஹாம் கூடாரம், கடைசி கால சபை, கடைசி கால செய்தி சபை, இயேவின் கூடாரம், கர்த்தராகிய இயேசுவின் சபை, உயிருள்ள இயேசு கிறிஸ்துவின் சபை, கடைசி கால செய்தி கூடாரம் போன்ற இன்னும் அநேக பெயர்களால் உங்கள் ஊழியத் தலைப்புக்கும், சபைக்கும் சம்பந்தமில்லாத பெயர்களால் அழைத்துக்கொள்கிறீர்கள், தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறீர்கள். ஆனால் இவைகளின் போதகர்களுடைய இலட்சனங்களை இங்கு எழுத விரும்புகிறேன்.

(அ) இவர்களில் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவர்கள் உண்டு. ஆனால் அது கூடாது. (மத்.6:24) ஒன்று உலக பிரகாரமான ஒரு வேலை. இப்பிரபஞ்சத்தின் அதிபதிக்கு. பின் ஆவிக்குரிய ஊழியம் என கூறிக்கொண்டு சபை பாஸ்டர் ஊழியம்.

(ஆ) திருமணம் ஆகாத பிரம்மச்சாரியாக இருந்துக் கொண்டு பாஸ்டர் ஊழியம். ஊழியக்காரன் தன் குடும்பத்தையும், தன் பிள்ளைகளையும் நல்ல முறையில் கவனித்து வருகிறவனாக இருக்க வேண்டும். ஆனால் இந்த தகுதி இவர்களிடம் இல்லை. (1தீமோ.3:4,5)

(இ) இவர்களில் சிலர் இரு மனைவிகளை உடையவராக இருந்துக்கொண்டு ஊழியம் செய்கிறார்கள். ஒன்று ஒரே வீட்டில் இரு மனைவிகள், மற்றபடி ஒரு பெரிய குடும்பம், ஒரு சிறிய குடும்பம் என இரு குடும்பங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். அல்லது முதல் மனைவியை தள்ளிவிட்டு அவள் உயிரோடு இருக்கும் போது இரண்டாவது மனைவியாக ஒருத்தியை சேர்த்துக்கொள்கிறார்கள். இவன் எல்லாம் ஒரு ஊழியக்காரனா? (1தீமோ.3:2)

(ஈ) கர்த்தருக்குரிய தசம பாகத்தை இதர ஊழியங்களுக்கு பகிர்ந்து கொடுக்காது தானே அனுபவித்துக்கொள்ளும் பொருளாசை உடையவர்கள். இவன் ஒரு விக்கிரகாராதனைக்காரன் அல்லவா?

(உ) ஒருபக்கம் மல்டி லேவல் மார்க்கெட்டிங்க்கு ஆட்கள் சேர்ப்பு, மறுபக்கம் சபை என கூறிக்கொண்டு அதற்கு ஆட்கள் சேர்ப்பு. இவன் ஒரு மாய்மாலக்காரன்தானே?

(ஊ) ஒரு மேய்ப்பன் பல மந்தைகள், பல இடங்களில் கிளை மந்தைகள். பல கிளைகளிலிருந்தும் வருமானம்.

(எ) தனக்கென்று ஒரு உபதேசம் இல்லாமல் தெருத்தெருவாக, ஊர் ஊராக சுற்றித்திரியும் பாஸ்டர், சுவிசேஷகன். ஒருவன் தனக்கென்று ஒரு உபதேசத்தை உடையவனாக இல்லாவிட்டால் அவன் ஊழியக்காரனே கிடையாது. அவன் ஒரு பச்சோந்தியே.

(ஏ) பல கோட்பாடுகளை உடைய சபைகளுக்கு சென்று எல்லாருக்கும் எல்லாமுமானேன் என்றுக்கூறி பண வேட்டை ஆடும் கபடஸ்தன்.

(ஐ) மனைவியை பொது வேலை ஸ்தலங்களுக்கு அனுப்பி,(தீத்.2:4,5) படிக்கும் பிள்ளைகளையும் பகுதி நேர வேலைக்காக அனுப்பி, அவர்களின் வருமானத்தை கொண்டு, தனக்கும் ஒரு வருமானத்திற்காக நாடி, ஓடி பந்தாவாக ஊர் சுற்றி திரியும் ஒரு ஊழியக்காரன் தேவனுடைய அழைப்பை பெற்றவனா? இல்லவேயில்லை.

(ஒ) வெளிநாட்டு ஊழியர்களுக்கு ஏஜெண்டுகளாக இருந்துக்கொண்டு அவர்களது செய்திகளை பிரசங்கித்து, மொழிப்பெயர்த்து, வெளியிட்டு வரும் பாஸ்டர் ஒருவன் கூலிக்கு மாரடிக்கிறவன் தானே.
(ஓ)ஐந்துவகை ஊழியத்தில் தானே அனைத்து ஊழியத்திற்கும் உரியவன் (எபே.4:13) என இருமாப்பு கொண்டுள்ள வளசரவாக்கம் பாஸ்டர் யார்? இவர் தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறாரேயன்றி, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைபக்திவிருத்திக்காக அல்ல.
(ஔ) தனக்கென்று ஒரு பெரிய ஆராதனை கூடாரம். தான் ஒரு பெரிய பாஸ்டர் என ஆணவம், இந்நிலையில் தன் சபை விசுவாசிகளுக்கு திருமண மண்டபங்களுக்கு சென்று திருமணம் நடத்தி வைக்கும், தெருத்தெருவாக, ஊர்ஊராகச் சென்று பாஸ்டர் என்ற பெயரில் ஊர்வலம் வரும் பெரவலூர் பாஸ்டர் தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறவர் தானே. அவரது பாஸ்டர் ஊழியமே ஒரு கேள்விக்குறியாக இருக்கிறதே? ஒரு மந்தைக்கு ஒரு மேய்ப்பன் அல்லவா? அவன் தன் மந்தையைத்தான் மேய்க்க வேண்டுமேயன்றி, ஊர்ஊராகச் செல்வது அவரது பணி ஆகாதே.
(க) சபைபக்திவிருத்திகடுத்த ஊழியம், பாஸ்டர் என தன்னை அழைத்துக்கொண்டு ஏழாம் சபைக்கால தூதனை கிறிஸ்து – தேவன் என அழைக்கும் பிரன்ஹாம் கிறிஸ்து கூட்டத்தார் உலகம் அனைத்தையும் மோசம் போக்கும் பிசாசு தானே? A Christ யை The Christ ஆக்குகிறவன் வேறொரு சுவிசேஷத்தை கொண்டுவரும் கள்ளகபடமுள்ள வேலையாள் தானே.
(கா ) தனது மனைவியை கர்ப்பத்தடை செய்துக்கொள்ள அனுமதித்து தன்னுடைய அந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்த கர்ப்பத்தடை செய்வது சரிதான் என பிரசங்கிக்கும் ஒருவன் தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமானவன் தானே. கர்ப்பத்தடை செய்த ஒரு ஸ்திரீயை பரிசுத்த வேதாகமத்தில் எங்கேயாவது இந்த மடையன் காட்ட முடியுமா? நாம் பலுகி பெருக சிருஷ்டிக்கப்பட்டவர்கள் தானே.
(கி) திருமணம் செய்து குடும்பம் இல்லாத நிலையில் ஒருவன் பாஸ்டர் ஆகலாமா? குடும்ப அனுபவம் இல்லாதவன் தேவனுடைய சபையை எப்படி நடத்த முடியும்? சந்தானமற்றவன் தன் நாட்களில் வாழ்வடையாதவன் தானே. (எரே.22:30, உபா.7:14 லேவி.20:20,21)
(கீ) இவ்வாறாக நான் நிறைய எழுதிக்கொண்டே போகலாம். மேற்கண்ட தகுதியின்மையை கொண்ட நபர்கள் சபைபக்திவிருத்திக்கடுத்த ஊழியம் என்ற பெயரில் சபை நடத்துவதும், பிரசங்கிப்பதும் அயோக்கியதனம் தானே. இந்நாட்களில் இக்கடைசி காலத்திற்குரிய செய்தி, பிரன்ஹாம் பிரன்ஹாம் என்று கூறித்திரியும் ஊழியர்கள், பாஸ்டர்களில் அதிகமான பேர் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களாகத்தானே இருக்கிறார்கள். மேற்கண்ட பண்புகள் தானே உங்கள் பாஸ்டர்களிடம் காணப்படுகிறது. ஆதலால் இப்படிப்பட்ட கள்ளகபடமுள்ள வேலையாட்களை அடையாளம் கண்டு அவர்களை விட்டு விலகுங்கள். உங்களை காத்துக்கொள்ளுங்கள், மற்றபடி அவர்களோடு நீங்களும் மடிவீர்கள் என்று எச்சரிப்பது தானே ஐந்து வகை ஊழியத்தில் உள்ள ஊழியர்களின் கடமை.

13. சமீபத்தில் எனக்கு சில புத்தகங்கள் கிடைத்தன. அதன் விவரம் அறிய வந்தபோது, சென்னை, வில்லியம் பிரன்ஹாம் குட் நியூஸ் சொசைட்டி, ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு என்ற ஆங்கில செய்தியை தமிழில் மொழிப்பெயர்த்து வெப்சைட்டில் போட்டு அதை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து படித்து கொள்ளுங்கள் என்றுகூறி வெளியிட்டுள்ளார்கள். புத்தகமாக பிரிண்ட் பண்ணி வெளியிட போதுமான பண வசதி இந்நாட்களில் இல்லை என்பதினால் இவ்வாறாக கேட்டுக்கொண்டார்களாம். மணவாட்டி ஊழியம் சகோ.ஜீவஜெயம் என்பவர் இந்த செய்தியை பதிவிறக்கம் செய்து, வில்லியம் பிரன்ஹாம் குட் நியூஸ் சொசைட்டி என்ற இடத்தில் தனது மணவாட்டி ஊழியம் விலாசத்தை மாத்திரமே போட்டு தெரிந்தவர்களுக்கு விநியோகம் செய்கிறார் என கேள்விபட்டேன். அதற்கு ஆதரவாக அவர் விலாசத்தை உடைய புத்தகத்தை எனக்கு அனுப்பி வைத்திருந்தனர். முதலாவது இது ஒரு கிரிமினல் குற்றம். ஒருவர் மொழிபெயர்த்து வெளியிட்ட செய்தியை அந்த வெளியீட்டாருடைய விலாசத்தை அழித்து அந்த இடத்தில் சகோ.ஜீவஜெயம் மணவாட்டி ஊழியம் விலாசத்தை போடுவது பெரிய ஏமாற்று வேலை தானே. ஏனென்றால் இவர் வில்லியம் பிரன்ஹாம் குட் நியூஸ் சொசைட்டியிடம் எந்தவிதமான அனுமதியும் இதற்கென்று பெறவில்லையென WBGNS யிடம் இருந்து அறியவந்தேன். அதாவது இந்த வெளியீட்டைக் கொண்டு, தானே அதை செய்ததாக கூறி பண வேட்டை செய்வதற்காகவே இப்படிப்பட்ட தில்லுமுல்லுகளை செய்துள்ளார். நீங்கள் இப்படிப்பட்ட கள்ளகபடமுள்ள வேலையாட்களுக்கு மொழிப்பெயர்ப்புக்கென பணங்கள் கொடுத்து அவர்களுடைய தில்லுமுல்லு வேலைகளை உற்சாகப் படுத்துகிறீர்கள். ஆக நீங்கள் இருவருமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள் தான். மணவாட்டி ஊழியம் மணவாட்டி ஊழியம்

என்று சூரியனுக்கு கீழே செய்யப்படுகிற காரியங்கள் எல்லாம் கவனித்து பார்த்தேன்; இதோ எல்லாம் மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாய் இருக்கிறது.

14. அடுத்து பிரியமானவர்களே என்னிடம் பல ஆயிரம் கிறிஸ்துவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களின் விலாசம் உள்ளது. இவர்கள் அனைவருக்கும் **இயேசுவே வாரும்** வெளியீடுகளை அனுப்புவதற்கு போதுமான பொருளாதார வசதி எனக்கு இல்லை. ஆதலால் தெரிந்துக்கொண்ட சில ஆயிரங்கள் விலாசதாரருக்கு மாத்திரமே வெளியீடுகளை அனுப்பி வருகிறேன். எனக்கு ஏதோ ஒரு காரணத்தால், திருப்பி அனுப்பப்படும் இதழ்களில் உள்ள முந்திய விலாசத்தை மறைத்து, தபால் துறை முத்திரைகளை அழித்து, மற்ற ஒரு நபருக்கு மீண்டும் தபால் தலைகளை ஒட்டி அனுப்பி வைக்கிறேன். இதனால் நான் வெளியிடும் இதழ்களில் எனக்கென்று ஒரு காப்பி தவிர வேறு எதுவும் மீதம் இருப்பது கிடையாது. ஆதலால் தயவு செய்து உங்களுக்கு பலவந்தமாக அனுப்பப்பட்டு வரும் இந்த ஆவிக்குரிய மன்னாவை கொண்ட நிருபத்தை படிக்க விருப்பமில்லை என்றால் அதை மற்றொரு அறிமுகமானவர்களுக்கு கொடுங்கள். அதுவும் விரும்பமில்லை என்றால் அதை அப்படியே எனக்கு திருப்பி அனுப்பி விடுங்கள். உங்கள் விலாசத்தை நான் எனது பட்டியலிலிருந்து நீக்கி விடுவேன். ஆனால் நீங்கள் உங்கள் விலாசத்தை அல்லது கடைசிபக்கத்தை கிழித்தெறிந்து விட்டு எனக்கு திருப்பி அனுப்புகிறீர்கள். ஆதலால் திரும்ப அது மற்றவர்களுக்கு அனுப்ப முடியாமல் போய்விடுகிறது. அதோடு மட்டுமல்ல அது உங்களுக்கு மீண்டும் பழையபடி வரும். உங்கள் நடத்தைகள் நீங்கள் யார் என்பதை பிரதிபலிக்கிறது. அவர்களுடைய கிரியைகளினால் அவர்களை அறிவீர்கள் என தேவனுடைய வார்த்தை கூறுகிறது. உங்களுக்கு **இயேசுவே வாரும்** நிருபத்தை அனுப்பி வைத்ததற்காக வெட்கப்படுகிறேன். ஆனால் அது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

15. எனக்கு பொதுவாக வாட்ஸ் ஆப், யூ டியூப், டூவிட்டர் உபயோகிக்கும் பழக்கம் இல்லை. அவைகளில் நான் நாட்டம் கொள்வதும் இல்லை. சில வேளைகளில் என் பிள்ளைகள் பார்த்து விட்டு செய்தியில் உள்ளவர்களில் யாராவது எதேனும் வெளியிட்டிருந்தால் அதை கொண்டு வந்து என்னிடம் காண்பிப்பார்கள். அப்பொழுது அதை நான் பார்ப்பேன். அப்படி பார்த்தவைகளில் இரண்டு சம்பவங்கள் எனக்கு மிக்க துக்கமாக இருந்தது. சிலர் தங்கள் பெயருக்காகவும், புகழுக்காகவும், பிரபலமாகிவிடலாம் என்ற நப்பாசையினாலும், உதவிகள் கிடைக்காதா என்ற எதிர்பார்ப்பினாலும் தங்கள் மனம் போல தகாதவைகளை வெளியிட்டு தாங்கள் யார் என்பதை நிலை நிறுத்தி வருகிறார்கள். அதில் மறைந்த டாக்டர். டி.ஜி.எஸ். தினகரன் அவர்களின் மருமகளின் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அன்னாரின் குடும்பம் சத்தியத்தை அறிந்து, பின்




ஸ்தாபன சபை, அதன் விசுவாசிகள் ஆதரவும். பணஉதவிகளும் கிடைக்காதே என்பதின் நிமித்தமாக அவர்கள் அறிந்த சத்தியத்தை புறம்பாக்கி, அதை அறிக்கை பண்ணாது, அதை மறுதலித்து, சத்தியத்தை தங்கள் முதுகுக்கு பின் எறிந்த ஒரு குடும்பம். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையையும், காணிக்கைகளையும், நன்கொடைகளையும், தங்கள் லௌகிக ஆடம்பர வாழ்க்கைக்காக அதிகமாக விரும்பினார்கள். அந்த குடும்பத்தில் உள்ள ஒரு சகோதரி இவாஞ்சலின் கூறியதாக ஒன்றை சகோதரர் வெளியிட்டுள்ளார். அதாவது : “வில்லியம் பிரன்ஹாம் உண்மையான ஊழியர். பிரன்ஹாம் ஜெபிக்கும் அறையில் கர்த்தருடைய தூதன் இறங்கி வந்து காரியங்களை வெளிப்படுத்துவார்” என அந்த அம்மையார் தங்களது **நல்ல நண்பன்** இதழில் 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் எழுதியுள்ளதாக வெளியிட்டுள்ளார். இந்த விளம்பரத்தின் பின்புறத்தில் சகோ.பால் தினகரன், மறைந்த அவரது தந்தை சகோ.டி.ஜி.எஸ். தினகரன் படம் உள்ளது. முகப்பின் இடதுபுறம் சகோதரி படமும், வலதுபுறம் சகோ.பிரன்ஹாம் படமும் உள்ளது. இதை வெளியிட்டவர் சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது என கூறி பிரசுரித்துள்ளார். இந்த அம்மையார் சகோ. பிரன்ஹாம் ஊழியம் குறித்து கொடுத்த சாட்சி யாருக்கு தேவை? மேலும் இத்துடன் நின்றுவிடாது Jesus Calls என பெரிதான கொட்டை எழுத்திலும், அத்துடன் You come back to the word of God என

எழுதி அதன் அடியில் வில்லியம் மரியம் பிரன்ஹாம் என தன் படத்துடன் சகோ.கே.ராஜா எழுதியுள்ளார். இது என்ன ஒரு பெரிய மாய்மாலம்? மேற்கண்டவாறு சகோ.பிரன்ஹாம் கூறியுள்ளாரா? பிரசங்கித்துள்ளாரா? சகோ.பிரன்ஹாம் பிரசங்கிக்காததை பிரசங்கித்ததாக கூறி பிரசுரிக்கும் நோக்கம் தான் என்ன? மர்மம் தான் என்ன? பூமிக்கு கீழே செய்யப்படுகிற காரியங்களை சங்கீதக்காரன் பார்த்தான், இதோ எல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது. இந்த விளம்பரத்தினால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடையும் என சகோதரன் நினைக்கிறாரா?

16. இதோடு மாத்திரம் நின்றாரா என்றால், இல்லை. இந்த சகோதரன் டாக்டர்.கலைஞர், முன்னாள் தமிழக முதல்வர் மறைந்த அனுதாபத்தை வெளியிட கண்களில் கண்ணீர் வருவதாக சித்தரித்து ஒரு படம் போட்டு அதன் கீழ் **“ஒப்பற்ற, நிகரற்ற, வரலாற்று நாயகன் கலைஞருக்கு கண்ணீர் அஞ்சலி”** என விளம்பரம் செய்துள்ளார். இது என்ன? கர்த்தாவே, மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகள் எல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்ஜியமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கின்றீர் (1நாளா.29:11) இவரே ஜனங்களுக்கடுத்த தலைவர். (எசா.55:4) இவரே ஜாதிகளின் தலைவர் (எரே.31:7) பிரியமானவர்களே இவரே நமக்கு ஒப்பற்ற, நிகரற்ற, வரலாற்று நாயகர். இவர் தான் நமது தலைவர். அப்படியிருக்கும் போது நமக்கு இப்பிரபஞ்சத்திற்குரிய வேறொரு தலைவர் நமக்கு தேவையா? இவர் உலகத்திற்குரியவராக இருப்பதால் உலகத்திற்குரியவைகளை உலகத்திற்குரியவர்களுக்காக பேசுகிறார், எழுதுகிறார். உலகமும் அவருக்கு செவி கொடுக்கும், கொடுக்கிறது. இயேசு கிறிஸ்துவே அல்பா, ஒமேகா. அதாவது இயேசுவே ஆதியும் அந்தமும். ஆதியில் தேவன் வானத்தையும் பூமியும் படைத்தார். முடிவில் ஆமென் இயேசுவே வாரும் என ஆதி – அந்தம் வரை உள்ள வரலாறு யாவும் இயேசு கிறிஸ்துவுக்கடுத்ததே. உலகம் மற்றும் அதன் வரலாறு யாவும் இயேசுவைக்கொண்டு தொடங்கி இயேசுவைக்கொண்டே முடிகிறது. ஆக இயேசுவே வரலாற்று நாயகன். இப்படியிருக்க எப்படி ஒரு மனத்திரும்பாத பாவி வரலாற்று நாயகனாக முடியும்? மேலும் நீங்கள் உங்களை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்திக்கு அழைக்கப்பட்ட ஒரு ஊழியக்காரன் என்று அழைத்துக்கொண்டு (சில சமயம் பாஸ்டர், சில சமயம் சுவிசேஷகன்) உலகப்பிரகாரமாக பல தாரங்களை கொண்டு ஒரு இல்லற வாழ்க்கை வாழ்ந்து அரசியலிலும் சினிமா துறையிலும் பெயரும் புகழும் பெற்று, பல ஊழல்களில் சம்பந்தப்பட்டு பணமும் சம்பாதித்த ஒரு மனந்திரும்பாத ஆத்துமாவுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துவது என்ன? உலகம் அவரை போற்றட்டும். ஆனால் ஒரு ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் நிதானித்துப் பார்க்க வேண்டாமா? மேற்குரிய உங்களது இரண்டு வாட்ஸ்ஆப் செய்திகளின் மூலம் உங்கள் அழைப்பையே ஒரு கேள்விக்குறியாக்கி விட்டீர்கள். இது குறித்து சகோதரனிடம் பேசினேன். சகோதரர் இவரது செயல்பாட்டை மழுப்புவதாகவே இருந்தது. மனஸ்தாப்பட்டதாக தெரியவில்லை.



(இது அவர் வெளியிட்ட உண்மையான படம் இல்லை. அது எப்படியோ எனது கைப்பேசியில் இருந்து மறைந்து விட்டது. ஆதலால் அவர் வெளியிட்டது போன்ற ஒன்றை வெளியிட்டுள்ளேன்)

17. சமீப நாட்களில் நான் ஒரு வீடியோ காட்சியை எனது வாட்ஸ்ஆப்பில் கண்டேன். அது சகோ.ஜெபக்குமார் அவர்களால் 25-08-2018 அன்று அவரது கைப்பேசி எண்.9488303059 கீழ் வெளியிடப்பட்டிருந்தது. அதன் தலைப்பு “டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் சகோதரன் பிரன்காமை பரலோகத்தில் சந்தித்தார்” என இருந்தது. மேலும் இந்த வீடியோவில் சகோ.டி.ஜி.எஸ் தினகரன் அவர்கள் தாம் பரலோகத்தை தரிசித்ததாகவும், அவர் இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசியாகிய வில்லியம் பிரன்காமை தாம் சந்தித்ததாக கூறுகிறார் எனக்கூறி பின் சகோ.டி.ஜி.எஸ். தினகரனிடம் ஒருவர் பேட்டி எடுப்பதாகவும் அதில், சகோ.டி.ஜி.எஸ். சகோ. பிரன்காமை பற்றி

புகழ்வதை குறித்து வெளியிட்டுள்ளார். இது உண்மைதானா என கண்டறிய சகோ.ஜெபக்குமாருக்கு போன் செய்தேன். அவர் நான் அந்த வீடியோ காட்சியை அழித்து விட்டேன் என ஒரே வார்த்தையில் பதில் கூறி அழைப்பை முடித்துவிட்டார். குற்ற நெஞ்சம் குறுகுறுத்ததால் அவருக்கு என்னோடு பேச மனமில்லை. ஆனாலும் அந்த வீடியோ வாஸ்ட்ஆப் சம்பாசனையை இங்கு வெளியிடுகிறேன்.

**சகோ.டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் சகோ. பிரன்காமை பரலோகத்தில் சந்தித்தல்**

இந்த வீடியோவில் சகோ.டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் தாம் பரலோகத்தை தரிசித்ததாகவும்,




அங்கே இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசியாகிய வில்லியம் பிரன்ஹாம் அவர்களை தான் சந்தித்ததாகவும் கூறுகிறார். இப்பொழுது சகோ.டி.ஜி.எஸ். ஒரு நபருக்கு பேட்டி கொடுக்கிறார். கீழே அவருடைய பேட்டி கொடுக்கப்பட்டுள்ளது.“எனவே அப்படிபட்ட நேரங்களில் கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்கள் என்னோடு பேசும்படி செய்தார். பெரும்பாலான அப்போஸ்தலர்களும், பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகள் ஒவ்வொருவரும் என்னை தெரியப்படுத்தும் வார்த்தைகளை மாத்திரமே கூறினார்கள். அவர்கள் எல்லா நேரமும் “கவலைபடாதே” என்றும் “விட்டுவிடாதே” என்றும் “இந்த குறிப்பிட்ட ஊழியத்திற்காகவே கர்த்தர் உன்னை தெரிந்துக் கொண்டுள்ளார். இதை செய். அவர் உன்னை வழிநடத்துவார்” என்றனர். நான் ஒருமுறை சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்களை சந்தித்தேன். அவர் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட ஒரு மனிதர். அவர் வழக்கமாக என்னிடம் தேவன் அவரை எப்படி உபயோகித்தார் என்று கூறுவார். அச்சமயம் என்னுடைய ஊழியத்தின் திருப்புமுனையாக இருந்தது. நான் ஜனங்களுக்காக விசுவாசத்தோடு ஜெபித்தபோது அந்த ஜனங்களுடைய பெயர்களையும், சில சமயங்களில் எங்கே அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்றும், மேலும் அதைக்குறித்த விவரங்களையும், அந்த பெரிய கூட்டத்தில் அவர்கள் எங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் கர்த்தர் என்னிடம் காண்பிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். அது இந்திய கிறிஸ்துவ வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத ஒரு காரியமாக இருந்தது. எனக்கும் கூட அது புதிதாகவே இருந்தது. இவ்வாறு அதைகுறித்து பயந்த நேரங்களில் கர்த்தர் வல்லமை பிரன்ஹாம் என்று அழைக்கப்பட்ட அந்த மனிதரை அழைத்து வந்தார். அவர் (சகோ.பிரன்ஹாம்) என்னை தைரியப்படுத்தி சகோதரனே பயப்பட வேண்டாம். அது இவ்விதமாக மாத்திரம் வரும் அப்படியே கூறுங்கள் அதை கூறுங்கள் அதை கூறுங்கள் என்றார். நான் அநேக வேளைகளில் அவரை கண்டேன். அதற்கு பிறகு மாத்திரமே, நான் அவருடைய புத்தகங்களையும் அவரின் ஜீவிய சரீதையையும் வாசித்தேன். ஓ, அவருடைய ஜீவியம் அற்புதமான ஒரு ஜீவியமாக இருந்தது. அவர் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர். அவருடைய அற்புதமான ஜீவியத்தோடு என்னை ஒப்பிடவே முடியாது. மேலும் விவரங்களுக்கு www.branham.org என எழுதியிருந்தது. ஆனால் WBGNS இதற்கும் தங்களுக்கும் சம்பந்தமேயில்லை என்றுகூறி அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

இந்த வீடியோ காட்சியில் டி.ஜி.எஸ். ஒரு சகோதரனுக்கு பேட்டியை ஆங்கிலத்தில் கொடுத்துக்கொண்டிருக்கிறார். அதை தமிழில் சகோ.ஜெபக்குமார் மொழிப்பெயர்த்து வெளியிட்டுள்ளார் என தெரிகிறது. ஆனால் இந்த பேட்டியில் உண்மையே இல்லை என தெளிவாகிறது. இதுகுறித்து விவரங்கள் அறிய டி.ஜி.எஸ் அலுவலகத்திற்கு குறுஞ்செய்தி அனுப்பினேன். பதில் ஏதும் இல்லை. சகோ. ஜெபக்குமார் மொழிப்பெயர்ப்புகள் குறித்து பலமுறை எழுதியுள்ளேன். யாரும் கண்டுக்கொள்வது இல்லை. இவரும், இவரை போன்றவர்களும் கடைசி கால செய்தியை சீரழிக்கவும், விசுவாசிகளை குழப்பத்திற்குள்ளாக்கவுமே சாத்தானால் பயன்படுத்தப்படும் பாத்திரங்களாக இருக்கிறார்கள். இவர்களால் ஒருவருக்கொருவர் ஆதாயம் உண்டு. அந்த ஆதாயத்திற்காக ஒருவரை ஒருவர் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இப்பொழுது தமிழ்நாட்டில் சகோ.ஜெபக்குமார் மொழிப்பெயர்ப்பில் தன்னை பிரபலமாக்கிக்கொண்டார். ஏனென்றால் இவர்தான் அநேகருக்காக மொழிப்பெயர்ப்பு செய்கின்றார். இவரது மொழிப்பெயர்ப்பு சரியில்லை என அநேக முறை நான் ஆதாரங்களுடன் எழுதியுள்ளேன். அது அனைவருக்கும் செவிடன் காதில்

சங்கு ஊதின சம்பவமாகி விட்டது. சத்தியத்திற்கு செவி கொடுப்பார் இல்லை. ஏனெனில் இவர்களது தமிழ் மொழிப்பெயர்ப்பு மற்றும் புத்தக வெளியீடு அனைத்தும் ஒரு தொழிலாக மாறிவிட்டது. இளம் விசுவாசிகள் / அவிசுவாசிகள் / சத்தியத்தை அறியும் அறிவு இல்லாதவர்கள் மாத்திரமே. ஓஹோ ஓஹோ என்று கூறிக்கொள்வார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுபவர்கள் அனைவரும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள், ஒளியன் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள். இவர்களால் உண்மையான விசுவாசிகளுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. சபை பக்திவிருத்தி அடையப்போவதுமில்லை.





சில ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூரு பிரபலமான பாஸ்டர் ஜான் அருளப்பா அவர்கள் சகோ.பிரன்காமின் படம் முந்திய அமெரிக்க அதிபர் ஒபாமா அவர்கள் அறையில் தொங்குவதாக ஒரு படத்தை வெளியிட்டு புரளியை கிளப்பினார். விசுவாசிகளை மோசம் போக்கினார். இடது பக்கம் உள்ள படம்தான் ஜனாதிபதி ஒபாமா அலுவலகத்தில் தொங்கியது. வலது பக்கம் உள்ள படம் பாஸ்டர். ஜான் அருளப்பா அவர்களால் மாற்றியமைக்கப்பட்டது.

18. ஆக இந்நாட்களில் இந்த வாட்ஸ்ஆப் மற்றும் பேஸ்புக் மூலம் செய்தியானது கறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஈடுபடுகிறவர்கள் பெரும்பாலும் இதை தங்கள் ஊழயத்தின் பாதையில் ஒரு ஆதாயத்திற்காக ஏற்படுத்திக் கொண்டார்கள். நீங்கள் இவர்களை ஆதரிப்பது யோசபாத், ஆகாபை ஆதரித்தபோது கர்த்தர் யோசபாத்தை நோக்கி : துன்மார்கனுக்கு துணை நின்று கர்த்தரை பகைக்கிறவர்களை நீ நேசிக்கலாமா என்றது போலாகும். அதே ரீதியில் உங்களை எச்சரிக்க வேண்டியது என் பணி. அதை ஏற்றுக்கொள்வது நிராகரிப்பது உங்களுக்கடுத்தது. எனக்கு ஒருவர் நண்பராக இருந்தாலும் சரி, நான் அவர்களுக்கு வேண்டாதவனாக இருந்தாலும் சரி, எனக்கு இருவரும் ஒன்றுதான். நான் இருவரையும் நேசிக்கிறேன், அன்பு செலுத்துகிறேன். பகை என்பது எனது உள்ளத்தில் அவர்களுக்கு எதிராக, கடுகளவு கூட கிடையாது. ஆதலால் தான் இங்கு எனக்கு அருமையான சகோதரர்களை வேதவாக்கியங்களைக் கொண்டு அவர்களுடைய தவறுகளை கடிந்துக்கொள்கிறேன். எதற்கு? அவர்கள் சென்று கொண்டிருக்கும் பாதை சரியில்லை என்று என் தேவன் என் உள்ளத்தில் ஒரு எண்ணத்தைக் கொண்டு வந்ததால், அவர்கள் மனதில் ஒரு மாற்றத்தை கொண்டு வரவே. நீங்கள் இப்படிப்பட்ட தகவல்களை உங்கள் வாட்ஸ்ஆப் மூலம் பகிர்ந்துக்கொள்வதால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எந்த விதத்தில் பக்தி விருத்தி அடையும்? உங்களால் இதற்கு பதில் கூற முடியுமா? இந்த உலக பிரகாரமான அரசாங்கமே வாட்ஸ்ஆப் மற்றும் பேஸ்புக் மூலமாக பள்ளிப்பிள்ளைகளுக்கு பாடம் நடத்தாதீர்கள் என கட்டுப்பாடு விதித்திருக்கிறது. ஆனால் நீங்களோ உங்கள் சுய விளம்பரத்திற்காக வாட்ஸ்ஆப் மற்றும் பேஸ் புக்குகளை உபயோகப்படுத்துகிறீர்களேயன்றி சபை பக்திவிருத்திக்கு அல்ல என்பதே என் கருத்து. கிறிஸ்துவின் சுவிசேஷம் வாயின் வார்த்தைகள் மூலமாகவும், நிருபங்கள் வாயிலாகவும் தான் எடுத்துச்செல்லப்பட்டது. சுவிசேஷத்தை பிரசங்கிக்க ஒருவன் அனுப்பப்பட வேண்டும். அவன் பரிசுத்த ஆவியினால் பிரசங்கிக்க வேண்டும். அதை வாசிக்கிறவனும் கேட்கிறவனும் எழுதியிருக்கிறதை கைக்கொள்கிறவர்களும் பாக்கியவான்கள். இதுதான் வேதபூர்வமானது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இளம் பெண் என்னிடம் ஐயா, உங்கள் குரூப்பை சாந்தவர்கள் வாட்ஸ்ஆப் மற்றும் பேஸ்புக் மூலம் ஒருவரையொருவர் அநாகரீகமான வார்த்தைகளினால் திட்டிக்கொள்கிறதையும் தனிப்பட்ட ஒரு நபரின் குடும்ப வாழ்க்கையை ஒருவருக்கொருவர் தாறுமாறாக பேசுவதை எல்லாம் பார்த்து உங்கள் குருவின் (இங்கு இவர்கள் சகோ.பிரன்காமை குறிப்பிடுகிறார்கள்) மேல் எனக்கு மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விட்டது. இவர்களெல்லாம் ஊழியக்காரர்களா அல்லது தெருபொருக்கிகளா என்று கேட்டார்கள். நான் வெட்கத்தோடு தலைகுனிந்தேன். முடிவில் அம்மா, இவர்கள் அனைவரும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள். ஒரிஜினலை கறைப்படுத்த தோன்றிய டூப்ளிகேட்டுக்கள், புரிகிறதா? இவர்களால் நீங்கள் இடறுகிறீர்கள் என்று கூறி முடித்தேன். முடிவாக எனக்கு ஆப்பிரிக்கா சகோ.காக்குவ் பிலிப்பு, ஸ்ரீலங்கா சகோ.ஜோர்ஜ் எலியேசர், இந்தியா, கேரளா சகோ. மார்ஷல், கோவை சகோ.ராஜா, நாகர்கோவில் சகோ.ஜெபக்குமார், பெங்களூரு சகோ. ஜான் அருளப்பா

மீது எள் அளவுக்கூட வெறுப்போ கசப்போ, விரோதமோ கிடையாது. நான் இவர்கள் அனைவரையும் மிகவும் நேசிக்கிறேன். அதே வேளையில் அவர்களுடைய தவறான உபதேசங்களுக்கு, நடபடிகளுக்கு எதிர்த்து நிற்கிறேன். எதிர்த்து நிற்க வேண்டியது எனது பணியாக இருக்கிறது. நான் என் பணியில் என்னை அழைத்தவருக்கு, ஏற்படுத்தியவருக்கு, உண்மையும் உத்தமுமாக இருக்க விரும்புகிறேன். அவர் என் பேனாவை எடுத்து ஒன்றைக் குறித்து எழுது என்று என் உள்ளத்தில் ஒரு தூண்டுதலை கொண்டுவரும் பொழுது அதை எழுதுகிறேன். எழுதாமல் இருக்க என்னால் கூடாது, முடியாது. அவ்வளவு தான் எனக்கு தெரியும். அதற்குமேல் நான் ஒன்றும் அறியேன்.

19. ஆகஸ்ட் 18 ஆம் தேதி சகோ. ஜோர்ஜ் எலியேசரிடமிருந்து நான் அவரைக் குறித்து எழுதியதிற்கு மிக்க மனத்தாழ்மையுடன் ஒரு சிறு பதில் தந்திருந்தார். ஆனாலும் அவர் தன்னுடைய பழைய பல்லவியைத்தான் பாடிக்கொண்டிருந்தார். மீண்டும் எனக்கு ஒரு புத்தகம் **“மோசேயிலிருந்து இயேசு”** பதிப்பு 11, வருடம் 2018 அனுப்பியிருந்தார். அதன் சாராம்சம் : (1). இவர் அப். பேதுருவைக்குறித்து “அப்போஸ்தலனும், தலைமை மேய்ப்பனுமாகிய பேதுரு” என முதல் பக்கத்தில் எழுதியிருக்கிறார். ஆனால் நமக்கு ஒரு பிரதான மேய்ப்பன், பெரிய மேய்ப்பன் உண்டு. அவர் இயேசு கிறிஸ்து ஆகும். பிரதான மேய்ப்பர் (Chief Shepherd) வெளிப்படும் போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தை பெறுவீர்கள். (1பேது.5:4) ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (எபி.13:20) Lord Jesus, that great shepherd of the sheep என உள்ளது. (2). அடுத்து **இவர் மத்.17:1-9 வசன அடக்கத்தைக் குறித்து கீழ்கண்டவாறு எழுதிகிறார். காட்சியில் மோசேயும், எலியாவும் எங்கிருந்து வந்தார்கள்? அவர்கள் அதாவது மோசேயும் எலியாவும் இயேசு என்ற நபருக்குள் இருந்துவந்து, மறுபடியும் அவருக்குள்ளே மறைந்தார்களாம்.** இயேசு தேவன். மோசேயும் எலியாவும் அவருடைய தேவத்துவத்தில் பூரண சம்பந்தம் உள்ளவர்களாம். அவர்கள் தேவனிடமிருந்து வேறுபிரிக்க முடியாதவர்களாகவே இருக்கிறார்களாம் (பக்கம்.2) இவர் தேவத்துவத்தில் இயேசுவோடு மோசேயையும், எலியாவையும் இணைக்கிறார். திரித்துவ கோட்பாட்டினர் தேவத்துவத்தில் இயேசுவோடு பிதா என்பவரையும், குமாரன் என்பவரையும் சேர்க்கிறார்கள். ஆனால் இவரோ மோசேயையும் எலியாவையும் சேர்க்கிறார். இவரது வெளிப்பாடு எப்படி போய்க்கொண்டிருக்கிறது என்பதை கவனித்தீர்களா? இது நிச்சயமாக பிசாசினிடமிருந்து வரும் வெளிப்பாடேயன்றி வேறல்ல. இப்பொழுது கவனியுங்கள். ஏன் இங்கு மோசேயும், எலியாவும் காணப்பட்டார்கள்? எலியா, கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் உயிருள்ள பரிசுத்தவான்களுக்கு அடையாளமாக இருக்கிறான். மோசே, மரித்த பரிசுத்தவான்களுக்கு அடையாளமாக இருக்கிறான். பேதுரு, யாக்கோபு, யோவான் மீதமுள்ள இஸ்ரவேலருக்கு அடையாளமாக இருக்கிறார்கள் என சகோ. பிரன்ஹாம் தனது செய்தி **விளங்காத சத்தம்** பத்தி.386-39 கூறுகிறார். மேற்கண்ட காட்சி ஒரு தரிசனமே. (3). தனது வெளியீட்டின் 3வது பக்கத்தில் ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களில் அவன் எக்காளம் ஊதும் போதும் **தேவரகசியங்கள்** யாவும் நிறைவேறி வெளிப்படுத்தப்படும் என்கிறார். வேதவாக்கியமோ **தேவரகசியம்** நிறைவேறும் என ஒருமையில் கூறுகிறது. ஆனால் சகோ.எலியேசரோ தேவரகசியங்கள் நிறைவேறும் என பன்மையில் கூறுகிறார். இது வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டுவதாகும். இப்படி கூட்டுகிறவர்களுக்கு தண்டனையாவது இந்த புஸ்தகத்தில் எழுதி இருக்கிற வாதைகளை தேவன் அவர்கள் மேல் கூட்டுவார் என நாம் வேதவாக்கியங்களில் தியானிக்கிறோம்.

20. தனக்கு கேடுவரத்தக்கதாக இந்த பொல்லாங்கன் வேதவாக்கியங்களை எப்படி புரட்டுகிறான் என்பதை கவனியுங்கள். நிச்சயமாக இந்த ஜோர்ஜ் எலியேசர் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த சாத்தானே. மேலும் இவர் தன்னுடைய வெளியீட்டில் கூறியுள்ளதை கவனியுங்கள். தனது புத்தகத்தின் 14வது பக்கத்தில் கீழ்கண்டவாறு எழுதுகிறார். அதாவது வேதாகமத்தைக் கொண்டு வெளிப்பாட்டை பெறமுடியாது. வெளிப்பாட்டைக் கொண்டு தான் வேதாகமத்தை அறிய முடியும். நான் கிறிஸ்தவனான போது எனது கையில் வேதாகமம் இருக்க வில்லை. முதலாவது நான் பெற்றுக்கொண்ட செய்தி புத்தகம் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு.** இதை வாசித்த பின்னரே நான் வேதாகமத்தை வாசிக்க தொடங்கினேன் என்கிறார். ஒரு வெளிப்பாடு தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டதாய் இருந்தால் அது வெளிப்பாடே அல்ல. (**முதலாம் முத்திரை**, பக்கம்.206, பத்தி.39 WBGNS வெளியீடு) பாருங்கள். எந்தவொரு வெளிப்பாடும் தேவனுடைய வார்த்தையிலிருந்தே வரவேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாக ஒரு வெளிப்பாடு இருக்க முடியாது. அடுத்து “நான் உங்களுக்கு ஒன்றைக் கூறப் போகிறேன். இதை கவனமாக கேளுங்கள். இதுவே தேவனைப் பற்றிய முழுமையான தெய்வீக வெளிப்பாடாய் இருக்கிறது. அவரது சித்தம், கிறிஸ்துவின் வருகை இன்னும் அனைத்து காரியங்களும் இந்த

புத்தகத்திலே முழுமையாக இருக்கிறது. ஏதாவது உங்களை விட்டு விலகச் செய்யுமென், அவ்விதமாக தவறாக வழிவிலகச் செய்யும் திசைக்காட்டியை தூக்கி எரிந்து விடுங்கள்" (**முற்றிலுமானவர்**, பக்கம்.48, பத்தி.137) பிரியமானவர்களே இங்கு நன்கு கவனியுங்கள். தேவனைப்பற்றிய முழுமையான தெய்வீக வெளிப்பாடு, அவருடைய சித்தம், அவருடைய வருகை அனைத்தும் இந்த புத்தகத்திலே (பரிசுத்த வேதாகமத்திலே) முழுமையாக இருக்கிறது. ஆதலால் தவறாக வழிவிலகச் செய்யும் ஜோர்ஜ் எலியேசர் என்ற திசைக்காட்டியை தூக்கி எரியுங்கள். **பரிசுத்த வேதாகமத்தில் இருந்துதான் வெளிப்பாடுகள் வரவேண்டுமேயன்றி, வெளிப்பாடுகளினால் பரிசுத்த வேதாகமம் இல்லை. மேலும் கவனியுங்கள் முழு வேதாகமே தேவனுடைய வெளிப்படுத்தல் ஆகும்.** (**யார் இந்த மெல்கிசேதேக்**, பக்கம்.12, பத்தி.37) ஆக சகோ.பிரன்ஹாமே முழுவேதாகமே தேவனுடைய வெளிப்படுத்தல் ஆகும் என கூறும் போது, அவருடைய செய்திகளைக் கொண்டே மக்களை திசைத்திருப்பும் இவர் யார். ஏவாளை திசைத்திருப்பிய சாத்தானே. இன்னும் கூறுகிறேன் கவனியுங்கள். " அறிவிக்கப்பட்ட ரகசியம் தேவனுடைய வார்த்தைக்கு அப்பாற்பட்டதாய் இராது. ஏனென்றால் வார்த்தையுடன் நாம் எதையும் கூட்டவும், குறைக்கவும் கூடாது. அது எப்பொழும் தேவனுடைய வார்த்தையாகவே அமைந்திருக்க வேண்டும். (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்**, பக்கம்.24, தொடக்கப்பத்தி) ஆக பிரியமானவர்களே வெளிப்பாடு தேவனுடைய வார்த்தையிலிருந்து தான் வர வேண்டும். ஒருவனுடைய வெளிப்பாடுகளை கொண்டு தேவனுடைய வார்த்தை அல்ல. தேவனுடைய வார்த்தைக்கு மாறான எந்த ஒரு மனிதனுடைய வெளிப்பாடும், வெளிப்பாடு அல்ல. ஒரு மனிதனுடைய அல்லது பலருடைய வெளிப்பாடுகளைக் கொண்டு பரிசுத்த வேதாகமம் நமக்கு எழுதப்படவில்லை. ஆதலால் முதலில் தேவனுடைய வார்த்தை, அதிலிருந்து ஒருவனுக்கு தேவனுடைய வெளிப்பாடு. அதாவது வார்த்தையிலிருந்து வெளிப்பாடு ஒருவனுக்கு வரவேண்டும். இன்னும் ஒரு ஆதாரம் "அது தேவனுடைய வார்த்தையை பற்றியதான வெளிப்பாட்டில் இருக்கிறது. அது தேவனை பற்றிய வார்த்தையின் வெளிப்பாடாய் இருக்கிறது. " (**ஆவியை பகுத்தறிதல்,** பக்கம்.40, பத்தி.24) கவனியுங்கள். எதுவுமே தேவனைப்பற்றிய வார்த்தையின் வெளிப்பாடாக அமைய வேண்டும். வெளிப்பாடுகளைக் கொண்ட தேவனுடைய வார்த்தை ஆகாது. இது ஏவாளை தன்னுடைய தந்திரத்தினால் வஞ்சித்த சாத்தானின் வஞ்சகம். கடைசியாக மற்றொரு ஆதாரம் There you are with three different places in this Scripture, tied them together with the revelation, see? Q & A 173, Para.72. கவனியுங்கள் பரிசுத்த வேதாகமத்தில் 3 இடங்களில் உள்ள காரியங்கள் வெளிப்பாடோடு இணைப்பட்டதாக இருக்கிறது. ஆக வேதாகமத்தோடுதான் உங்கள் வெளிப்பாடு இணையவேண்டுமெயன்றி உங்கள் வெளிப்பாடோடு வேதாகமம் இணையாது. மேலும் அனைத்துமே வெளிப்படுத்தலுடன் இணைந்துள்ளது. (**இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?** பக்கம்.58, பத்தி.183) கவனித்தீர்களா வேதம் வெளிப்படுத்தலுடன் இணைந்துள்ளது. மாறாக ஒருவனுடைய வெளிப்படுத்தலுடன் வேதம் இணையவில்லை. ஆக எந்தவொரு வெளிப்பாடும் வேதவாக்கியங்களிலிருந்தே வர வேண்டும். வேதவாக்கியங்களோடு நீங்கள் ஒன்றை கூட்டவும், குறைக்கவும் கூடாது. ஆக ஜோர்ஜ் எலியேசர் தேவனுடைய வார்த்தையில் கூறப்பட்டுள்ள வாதைகளுக்கு பாத்திரவானாய் இருக்கிறார். கிறிஸ்து பிரன்ஹாம் உபதேசமே வேறொரு சுவிசேஷம், பிசாசினுடையது. ஓடு, ஓடு, கிறிஸ்து பிரன்ஹாம் உபதேசத்தைவிட்டு ஓடு. சமீபத்தில் கோவையில் ஒரு திருமணத்தில் கிறிஸ்து பிரன்ஹாம் உபதேசத்தாரின் தலைவனையும், அவரது சகாக்களையும் முகமுகமாக சந்திக்க நேர்ந்தது. ஒருவரையொருவர் கட்டித்தழுவிக் கொண்டோம். அது பழைய நட்பின் நிமித்தமாகவேயன்றி, உபதேசத்தின் அடிப்படையில் இல்லை.

21. இந்த மனுஷன் தான் குருடனாக இருப்பதோடு மாத்திரமல்ல, மற்றவர்களையும் குருடானாக்க முயற்சிக்கிறான். 1963-ல் வெளிப்படுத்தலில் கூறப்பட்டுள்ள ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டதாம். இந்த முத்திரைகள் எப்பொழுது திறக்கப்பட்டது? வெளி 6 அதியில் ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளை உடைக்கிறார். அது என்ன? முத்திரைகள் திறக்கப்பட்டது. முத்திரைகள் திறக்கப்பட்டதால் தான் யோவான் அதன் ரகசியங்களை அடையாளங்களாக காண்கிறான். அந்த அடையாளங்களில் அடைங்கியுள்ள ரகசியம் அவனுக்கு அப்பொழுது வெளிப்படவில்லை. அது ஏழாம் சபைக்கால தூதன் எக்காளம் ஊதப்போகிற போதுதான் நிறைவேறும். ஏழாம் சபைக்கால தூதன் முத்தரிக்கப்பட்டிருந்த ஏழு முத்திரைகளை திறக்கவில்லை. அதை ஆட்டுக்குட்டியானவரே திறந்தார். அப்பொழுது இரகசியங்கள் அடையாளமாக வெளிப்படுத்தப்பட்டன. அந்த இரகசியங்கள் ஏழாம் சபைக்கால தூதனுக்கு ஏழு தேவதூதர்களால் வெளிப்படுத்தப்பட்டு, அவர் வெளிபடுத்தப்பட்டவைகளை சபைக்கு பிரசங்கித்தார். அவ்வளவுதான் ஆக ஏழாம் சபைக்கால தூதன் முத்திரைகளை உடைக்கவோ, அதன் இரகசியங்களை அவராகவோ வெளிப்படுத்தவில்லை. ஆக முத்திரைகள் ஆட்டுக்குட்டியானவரால் உடைக்கப்பட்டு திறக்கப்பட்டது. மேலும் இவர் கூறுவதாவது 1963-ல்

திறக்கப்பட்ட புஸ்தகம் 1965-ல் மூடப்பட்டது என்கிறார். இதற்கு வேதவாக்கியங்களில் எங்கு ஆதாரம் உள்ளது. இது ஜோர்ஜ் எலியேசரின் மனோபாவனைதான். வேதவாக்கியங்களோடு ஒன்றை கூட்டுவதும், குறைப்பதும் தானே இவரது பணி. நிச்சயமாக இந்த மனுஷனும், இவரை சார்ந்தவர்களும், தேவகோபாக்கினைக்கு தப்ப முடியாது, முடியவே முடியாது.

22. அடுத்து சபைக்காலங்கள் முடிந்து விட்டது, குமாரன் வந்து தமது மணவாட்டியை மீட்டுக்கொண்டு விட்டாராம். அவர் தற்பொழுது தனது மணவாட்டியுடன் பேசிக்கொண்டிருக்கிறாராம். எப்படி பேசுகிறாராம்? குசு குசு வென்று. ரகசியமாக. இதெல்லாம் படிக்கும் பொழுது நிச்சயமாக இந்த மனுஷன் தன் சுயநினைவாற்றலை இழந்து காணப்படுகின்றான் என்றே தோன்றுகிறது. மேலும் இப்பொழுது அவர் மணவாட்டி அல்ல, ஆனால் கிறிஸ்துவின் மனைவியாகி விட்டேன் என்கிறார். இந்த ஜோர்ஜ் எலியேசர் கிறிஸ்துவின் மனைவி ஆன பின்பு, இப்பொழுது எங்கு, யாருடன் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்? திருமணம் எங்கு, எப்பொழுது நடந்தது? வேதவாக்கியங்களின், செய்தியின் அடிப்படையில், திருமணம் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ச்சிக்கு பின் பரலோகத்தில் நடைபெறும் ஒன்றாகயிருக்கிறது.

23. அடுத்து ஒரு நகைச்சுவையான வெளிப்பாட்டை கேளுங்கள். ஜோர்ஜ் எலியேசர் கூறுகிறதாவது : தேவன் மூன்றில் பரிபூரணமாய் இருக்கிறார். மூன்று காலங்களில் மூன்று தோற்றங்களிலாம். இன்று மோசே - இயேசு – பிரன்ஹாம். ஆக தேவன் அன்று பிதாகுமாரன் பரிசுத்த ஆவியில் பூரணப்பட்டார். இன்று அதே தேவன் மோசே - இயேசு – பிரன்காமில் பூரணப்படுகிறாராம். இவருக்கடுத்த காரியங்கள் எல்லாம் வேறொரு சுவிசேஷமாக இருப்பதால், பவுல் கூறியபடி இவர் சபிக்கப்பட்டவர்தான். இதில் சந்தேகமே இல்லை. தேவனை அறியாதவர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை உண்டு. அது நித்திய அழிவு. இவர் தன் துர்க்குணத்தை விட்டுமனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொண்டால் ஒரு வேளை இவருடைய இருதயத்தின் எண்ணங்கள் இவருக்கு மன்னிக்கப்படலாம்.

24. உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்பம் (வெளி.12:9) கொடிதான ஓநாயாக தேவன் தம்முடைய இரத்தத்தினாலே சம்பாதித்த சபைக்குள் (அப்.20:28,29) வாசல் வழியாய் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறி (யோ.10:1) தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களிடத்தில் காணப்படும் தேவத்துவத்துக்கேதுவான் சத்தியத்தை அறிகிற அறிவையும் விசுவாசத்தையும் (தீத்.1:3) சீர்குலைக்க வேறொரு சுவிசேஷமாகிய (கலா.1:7) தேவத்துவத்தில் திரித்துவ கோட்பாட்டை கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களின் காலத்திற்கு பிறகு கொண்டுவந்து மாறுபாடானவைகளை போதித்து மக்களை மோசம் போக்கினது. கவனியுங்கள் கி.பி.325 ல் பிரதானமான நிசியின் விசுவாச பிரமாணத்தில் (Nicene creed) பிதாவுக்கும், குமாரனுக்கும் இருக்கிற சம்பந்தத்தை விவரித்து கி.பி.381 ல் கான்ஸ்தந்தீன்புரியலில் (Constantinople) கூடின சங்கத்தார் பரிசுத்த ஆவி “பிதாவினிலும் குமாரனிலும் இருந்து புறப்படுகிறவர்” என்பதை உறுதிப்படுத்தி அந்த திரியேகத்துவத்தில் உள்ள சம்பந்தத்தை மனுஷர்களுடைய அறிவுக்கெட்டினமட்டும் விளக்கி காட்டினார்களாம். ஏறக்குறைய கி.பி. 500 ல் பிரதானமான அதனாசியு விசுவாசப் பிரமாணம் இதிலிருந்து ஏற்பட்டது. அதனாசியு என்பவர் இயற்றின விசுவாச பிரமாணம் அல்ல அது. அந்த பிரமாணத்தை இயற்றியவர் யார் என்று சரியான விபரங்கள் இல்லை. அந்த விசுவாச பிரமாணத்தில் திரியேகத்துவத்தைப்பற்றி விபரமாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்த்து, கிறிஸ்தவ சபை 6 ஆம் நூற்றாண்டு முதல் இந்த திரித்துவ விசுவாச பிரமாணத்தை அங்கீகரித்தது, பிறப்பித்தது என்பதை ஒரு வேதஅகராதி மூலம் அறியவந்தேன். இப்பொழுது கவனித்தீர்களா? இந்த திரித்துவ உபதேசம் எவ்வாறு முளைத்தது என்று? பாருங்கள் திரித்துவ உபதேசம் மனுஷர்களால் ஏற்படுத்தப்பட்டது. திரித்துவ உபதேசம் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் கூறப்படவில்லை. ஏனென்றால் இந்த திரித்துவ உபதேசம் பிசாசினுடையதே, லௌகிக ஞானத்திற்கடுத்தது, இது பரத்திலிருந்து வராத ஒரு உபதேசம். திரித்துவ உபதேசம் சத்தியத்திற்கு வேத உபதேசங்களுக்கு மாறானது. இது ஒரு தவறான பிழையான உபதேசம். இயேசு (குமாரன்) மூவரில் ஒருவர் அல்ல. இவரே மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாய் இருக்கிறார். முடிவாக பரிசுத்த வேதாகமத்தில் தேவத்துவத்தில் திரித்துவம் என்ற உபதேசம் எழுதப்படவில்லை, உபதேசிக்கப்படவில்லை. இது மகாவேசியாகிய கத்தோலிக்க சபையில் பிறந்தது, மரமாக வளர்ந்துள்ளது. ஏனென்றால் புருஷன் உள்ளவளை பார்க்கிலும், அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகள் என்று கூறியிருக்கிறபடி கத்தோலிக்க சபையில் அதன் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகம். (கலா.4:27, ஏசா.54:1)

25. இந்த அதனாசியு என்பவரின் விசுவாச பிரமாணம் (Athanasian creed) என்ன? அதை இங்கு சுருக்கமாக தருகிறேன்.
(அ) ஏக தேவனை திரித்துவமாகவும், திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டும்.
(ஆ) பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர்.
(இ) பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் ஒரே தேவத்தன்மையும், சம மகிமையும், சம நித்திய மகத்துவமும் உண்டு.
(ஈ) பிதா சிருஷ்டிக்கப்படாதவர், குமாரன் சிருஷ்டிக்கப்படாதவர், பரிசுத்த ஆவியும் சிருஷ்டிக்கப்படாதவர்.
(உ) பிதா நித்தியர், குமாரன் நித்தியர், பரிசுத்த ஆவி நித்தியர்.
(ஊ) பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவி தேவன். ஆகிலும் மூன்று தேவர்கள் அல்ல, ஒரே தேவன்.
(எ) பிதா கர்த்தர், குமாரன் கர்த்தர், பரிசுத்த ஆவியும் கர்த்தர், ஆகிலும் மூன்று கர்த்தாக்கள் இல்லை ஒரே கர்த்தர்.
(ஏ) பிதா ஒருவராலும் உண்டாக்கப்பட்டவரும் அல்ல, சிருஷ்டிக்கப்பட்டவரும் அல்ல, ஜெநிபிக்கப்பட்டவரும் அல்ல.
(ஐ) குமாரன் பிதாவினாலே இருக்கிறவர், உண்டாக்கப்பட்டவரும் அல்ல, சிருஷ்டிக்கப்பட்டவரும் அல்ல, ஆனால் ஜெநிபிக்கப்பட்டவர்.
(ஒ) பரிசுத்த ஆவி பிதாவினாலும், குமாரனாலும் இருக்கிறவர். உண்டாக்கப்பட்டவரும் அல்ல, சிருஷ்டிக்கப்பட்டவரும் அல்ல, ஜெநிபிக்கப்பட்டவரும் அல்ல. புறப்படுகிறவர்.
எச்சரிப்பு. இதை ஒருவர் உண்மையாய் விசுவாசிக்காவிட்டால், இரட்சிப்படைய மாட்டான்.

26. இப்பொழுது சபையானது பரிசுத்த ஆவியைக் கொண்டும், அதே வேளையில் அந்திக் கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டும், அதாவது சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கும், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக / மாறாக செயல்படும் ஆவியைக் கொண்டும் வழிநடத்தப்படலானது. நமக்கு புகழ் வாய்ந்த கருத்துக்கள் / உபதேசங்கள் / போதனைகள் தேவையில்லை. மாறாக நமக்கு சத்தியம் தான் அவசியம். அது தான் நித்தியம். அதை நீங்கள் எங்கே காணலாம்? பரிசுத்த வேதாகமத்தில், தேவனுடைய வார்த்தையில். அதனாசியு விசுவாச பிரமாணத்தில் அல்ல.

27. என்னை பொருத்த அளவில் ஒரே தேவன் என்ற சத்தியத்தை நாம் பரிசுத்த வேதாகமத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் காண்கிறோம். அடுத்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை யோவான் தன் நிருபத்திலும் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட அதாவது இயேசு கிறிஸ்துவை பற்றி வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசன புத்தகத்திலும் காண்கிறோம். தேவத்துவத்துக்கடுத்த காரியங்களை யாரோ ஒருவர் அதுவும் விலாசம் இல்லாத ஒருவர் எழுதிய தகவல்களை விட தேவனுடைய தீர்க்கதரிசியும், இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனுமாகிய யோவான் எழுதினது மிக்க நம்பத்தக்கதானதாகும். நாம் அப்போஸ்தலர்களின் உபதேசத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறோம். அதற்கு இயேசு கிறிஸ்து மூலைக்கல். (எபே.2:20)
(1) இதோ, இவரே நம்முடைய **தேவன்** : இவருக்காக காத்திருந்தோம். இவர் நம்மை இரட்சிப்பார் : இவரே **கர்த்தர்,** இவருக்காக காத்திருந்தோம் : இவருடைய இரட்சிப்பினால் களிக்கூர்ந்து மகிழுவோம். (ஏசா.25:9) இந்த தேவன், கர்த்தர் யார்? இவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்லவா.
(2) கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலை. (ஏசா.26:4) கர்த்தராகிய யேகோவா எனக்கு இரட்சிப்புமானவர். (ஏசா.12:2) இந்த கன்மலை யார்? அவர் கிறிஸ்து (1கொரி.10:4)
(3) மரணத்தை ஜெயமாக விழுங்குகிற கர்த்தராகிய தேவன். (ஏசா.25:8) இவர் யார்? இயேசு கிறிஸ்து. (2தீமோ.1:10, வெளி.1:18)
(4) என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? என்னை யாருக்கு நிகராக்குவீர்கள்? (ஏசா.40:25) யாரோடும் ஒப்பிடக்கூடாதவர். இவருக்கு நிகர் வேறுயாரும் கிடையாது. அதாவது இரண்டாவது மூன்றாவது நபராக யாரும் கிடையாது. அவர் ஒருவரே. அவருக்கு நிகரானவர் யாரும் இல்லை.
(5) பூமியின் கடையாந்திரங்களை சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் (ஏசா.40:28) அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. He was in the world. The world was made by him. Jn1:10. இவர் யார்? இயேசு கிறிஸ்து தானே. இவரைத்தானே “வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தாவே என்று ஆபிரகாம் அழைக்கிறான். ” (ஆதி.14:25) இவனைத்தானே இயேசுவும் “உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசையாய் இருந்தான். என்னைக் கண்டு களிக்கூர்ந்தான்” என யோ.8:56 ல் கூறுகிறார்.

(6) நான் கர்த்தர், இது என் நாமம், என் மகிமையை வேறு ஒருவனுக்கும் என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன். ஏசா.42:5 கவனியுங்கள் கர்த்தர் தமது மகிமையை யாருக்கும் கொடுப்பதில்லை. மகிமைக்குரிய பாத்திரவான் அவர் ஒருவரே. இப்படியிருக்க மூன்று கர்த்தர்கள், அவர்களுக்கென்று தனித்தனி மகிமை எங்கே? மகிமையை பகிர்ந்துக் கொள்ளுதல் எங்கே?

(7) நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர். (ஏசா.43:3) இரட்சகர் யார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (லூக்.2:11) இவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர் அல்லவா. (1கொரி.15:47) இயேசு தானே வானத்திலிருந்து இறங்கி வந்தவர். (யோ.6:38) இவர் பரலோகத்திலிருந்து இறங்கினவர் அல்லவா? (யோ.3:13) பின்பு தான் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகவில்லையா? (யோ.6:62) ஆக பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்திற்கு ஏறினவரும் இயேசு ஒருவர் தானே. (யோ.3:13, எபே.4:9,10) ஆக உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன். அவரைத்தவிர ஒருவரும் இல்லை. (உபா.4:39) வானத்திற்கு ஏறி இறங்கினவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்லவா? அவர் குமாரனுடைய நாமம் என்ன? (நீதி.30:4) நானும் (குமாரன்) பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். I am my father are one. (யோ.10:30) நான் தனித்திறேன். பிதா என்னுடனே கூட இருக்கிறார். (யோ.16:32) குமாரனைக் கண்டவன் பிதாவை கண்டான். (யோ.16:9) தேவத்துவத்திற்கடுத்த காரியங்கள் இப்படியிருக்க பிதாவை எங்கிருந்து காண்பிப்பது. நான் பிதாவில், பிதா என்னில், ஒருவரில் ஒருவர். ஒருவரில் மூவர் அல்ல. மூவரில் ஒருவர் அல்ல. தியானியுங்கள். யோ.14:10,11

(8) எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை. எனக்குபின் இருப்பதும் இல்லை. (ஏசா.43:10) கவனியுங்கள். ஒரே தேவன் உண்டு. அவருக்கு முன் ஒரு தேவன் இல்லை. அவருக்கு பின் மற்றொரு தேவன் இல்லை. அப்படியானால் மூன்று தேவர்களுக்கு எங்கே இடம்? அதனாசியு விசுவாச பிரமாணத்தில் மாத்திரமே.

(9) நானே கர்த்தர் : என்னையல்லாமல் இரட்சகர் இல்லை. (ஏசா.43:11) கர்த்தராகிய கிறிஸ்து இரட்சகர். (லூக்.2:11) மகா தேவனும் இரட்சகருமானவர் இயேசு கிறிஸ்து. (தீத்.2:13) உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தது முதல் உன் தேவனாகிய கர்த்தராய் இருக்கிறேன். ஆகையால் நீ என்னையன்றி (எங்களையன்றி அல்ல) வேறு தேவனை அறியவேண்டாம். என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை. (இரட்சகரிலும் மூவர் இல்லை) கிறிஸ்துவே இரட்சகர். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (லூக்.1:11, ஓசி.13:4)

(10) நான் முந்தினவரும் நான் பிந்தினவருமாய் இருக்கிறேன். என்னைத்தவிர தேவன் இல்லை என சேனைகளின் கர்த்தர் கூறுகிறார். (ஏசா.44:6) இவர் யார்? இயேசு கிறிஸ்து. வெளி.1:11, 22:13) I am the first, I am the last. Beside me there is no God. அதாவது எனக்கு இடதுபுறமும், வலது புறமும், எனக்கு முன்னும் பின்னும் வேறொரு தேவன் கிடையாது. அப்படியானால் திரித்துவத்திற்கு இடம் எங்கே? பிசாசினிடத்தில் மாத்திரமே உண்டு. அதை எங்கே காணலாம்? அதனாசியு விசுவாச பிரமாணத்தில் மற்றும் திரித்துவ ஸ்தாபன சபைகளில் மாத்திரமே.

(11) என்னைத் தவிர தேவன் உண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே? ஒருவனையும் அறியேன். (ஏசா.44:8) இங்கு கவனியுங்கள். ஒரே தேவன். அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. அவரே கன்மலை. அந்த கன்மலை கிறிஸ்துவே. (1கொரி.10:4) கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனேயன்றி கன்மலை யார்? (சங்.18:31) கர்த்தர் ஜீவன் உள்ளவர். என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக. என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக. (சங்.18:46) பாருங்கள், இவையாவும் கிறிஸ்துவையே குறிக்கிறது. அவர் யார்? அவர் இயேசு. (அப்.5:42)

(12) நான் ஒருவராய் வானங்களை விரித்து, நானே பூமியை பரப்பினவர். (ஏசா.44:24) **குமாரனை நோக்கி :** கர்த்தாவே நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். (எபி.1:10) வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகள். (எபி.1:10) **கர்த்தரை நோக்கி :** இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே பூமியின் இராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர். நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். (2ராஜா.19:15) அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. (யோ.1:10) He was in the world. The World was made by him. Jn.1:10) அவர் யார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

(13) நானே கர்த்தர். வேறோருவருமில்லை. என்னைத்தவிர தேவன் இல்லை. என்னைத்தவிர ஒருவருமில்லை. என்னைத் தவிர ஒருவரும் இல்லை என்பதை சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும் படிக்கு நீ என்னை அறியாதிருந்தும், நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன். நானே கர்த்தர், வேறோருவருமில்லை. (ஏசா.45:6) ஆதி அப்போஸ்தலர்களின் உபதேசம் என்ன? இயேசு கிறிஸ்துவே கர்த்தர். (2கொரி.4:5) இயேசுவே கிறிஸ்து. (அப்.5:42, 17:3) **இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரேயன்றி வேறொன்றையும் அறியாதிருக்க தீர்மானித்திருக்கிறேன்.(1கொரி.2:2) இயேசு**

**கிறிஸ்துவை தவிர நாம் வேறோருவரையும் அறிய தேவையில்லை. தேவத்துவத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர நாம் வேறுயாரையும் அறியத்தேவையில்லை. இவரே கர்த்தர். கர்த்தரே தேவன். (சங்.100:3, உபா.9:10, யோசுவா.24:18, யாத்.29:46, 3:4 மற்றும் எசே.34:31, 24)**

(14) இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டிருக்கிற தேவனாய் இருக்கிறீர். (ஏசா.45:15) இஸ்ரவேலின் இரட்சகர் யார்? அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். அவர் இயேசு. (மத்.1:21) பாருங்கள். இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே. (எரே.3:23) இவர் யார்? அவர் இயேசு. இஸ்ரவேல் என்றென்றைக்கும் உமது ஜனமாயிருப்பதற்கு அவர்களை நிலைப்படுத்தி, கர்த்தராகிய நீர் தாமே அவர்களுக்கு தேவனானீர். (1நாளா.17:22) யார் இதை கூறியது? தாவீது. இஸ்ரவேலை நித்திய இரட்சிப்பினால் இரட்சித்தவர் யார்? அவர் கர்த்தர். (ஏசா.45:27) கர்த்தர் யார்? அவர் இயேசு கிறிஸ்து.

(15) வானங்களை சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாய் இருக்க சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காக செய்து, படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது : நானே கர்த்தர். வேறொருவர் இல்லை. (ஏசா.45:18) பாருங்கள் ஒரே கர்த்தர். வேறொருவர் இல்லை. மூன்று கர்த்தர்களுக்கு தேவத்துவத்தில் இடம் இல்லை. அவ்வாறு மூன்று தேவர்களுக்கும் இடமில்லை. ஒரே தேவன், ஒரே கர்த்தர், கர்த்தரே தேவன்.

(16) நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறு தேவன் இல்லை. என்னைத்தவிர வேறொருவருமில்லை. (ஏசா.45:21) என்னை தவிர என்பதினால் இங்கு இரண்டாவது மூன்றாவது நபர்களுக்கு இடமில்லை.

(17) நானே தேவன். வேறொருவருமில்லை. (ஏசா.45:22) நானே தேவன் என்றுரைத்துள்ளதினால் தேவன் ஒருவரே. இரண்டாவது மூன்றாவது தேவர்களுக்கும் பங்கும் இல்லை. பாத்தியமும் இல்லை.

(18) முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன். (ஏசா.45:23) இப்பொழுது கவனியுங்கள். யார் நாமத்தில் முழங்கால் முடங்கும்? இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும். பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ண வேண்டும். (பிலி.2:10,11) இயேசு கிறிஸ்துவை கர்த்தர் என்று அறிக்கை பண்ணுவதே பிதாவாகிய தேவனுக்கு மகிமை. தம்முடைய மகிமையை அவர் வேறு யாருக்கும் கொடுப்பதில்லை.

(19) யாருக்கு என்னை சாயலும் சமமுமாக்கி யாருக்கு நான் ஒப்பிடும் படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? (ஏசா.46:5) பாருங்கள். தேவன் கூறுகிறார் : என்னை யாருடைய சாயலுக்கும் சமமும் ஆக்க முடியாது, யாருடனும் என்னை ஒப்பிட முடியாது. ஏனென்றால் நான் நானே. எனக்கு சமமாக இரண்டாவது நபராக, மூன்றாவது நபராக யாரும் இல்லை. இருக்கிறவராக இருக்கிறேன், இருக்கிறேன் என்பவர். (யாத்.3:13,14)

(20) நானே தேவன் வேறொருவருமில்லை : நானே தேவன் எனக்கு சமானம் இல்லை. (ஏசா.46:9) கவனியுங்கள். தேவன் ஒருவரே. அதுதான் நமது விசுவாசம். (யாக்.2:19) உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். அவரேயன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத்.20:2,3, மாற்.12:29) ஒரே பிதா நமக்கு உண்டு. அவர் தான் தேவன். (யோ.8:41) கவனியுங்கள் இரண்டாவது தேவனுக்கும் மூன்றாவது தேவனுக்கும் இடமில்லை. தேவன் தான் நம்முடைய பிதா. நீங்கள் அவரை இயேசுவில் காண்கிறீர்கள். (யோ.14:9)

(21) என் மகிமையை நான் வேறோருவருக்கும் கொடேன். (ஏசா.48:11) பாருங்கள். தேவன் தம்முடைய மகிமையை இரண்டாவது, மூன்றாவது எனக்கூறி யாரிடமும் பகிர்ந்துக்கொள்வது இல்லை. ஏனென்றால் அவர் தமது மகிமையை யாருக்கும் கொடுப்பதும் இல்லை, மற்றொருவரோடு பகிர்ந்துக்கொள்வது இல்லை.

(22) நான் முந்தினவரும் பிந்தினவருமாமே. (ஏசா.48:12) இது இயேசு கிறிஸ்து என்பதை நாம் முன்பே பார்த்தோம்.

(23) கர்த்தரும் யாக்கோப்பின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகர், மீட்பர். (ஏசா.49:26) நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிறவர் – இயேசு கிறிஸ்து (2பேது.1:1) மகா தேவனும் இரட்சகருமாயிருக்கிறவர் – இயேசு கிறிஸ்து (தீத்.2:13) நாம் யாரால் மீட்கப்பட்டோம்? குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே. (1பேது.1:19) தேவரீர் அடிக்கபட்டீர், எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர். (வெளி.5:9, ஏசா.54:8) கர்த்தராகிய நான் இரட்சகர் என்றும், யாக்கோபின் வல்லவர் உன் மீட்பர் என்றும் அறிந்துக் கொள்வாய். (ஏசா.60:16) ஆம் நம்முடைய இரட்கரும், மீட்பரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அல்லாமல் வேறொருவருமில்லை.

(24) தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர். கர்த்தாவே நீர் எங்கள் பிதாவும், எங்கள் மீட்பருமாயிருக்கிறீர். (ஏசா.63:16) கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா. (ஏசா.64:8) அதாவது தேவனாகிய கர்த்தர் நம்முடைய மீட்பர். அவரே பிதாவாயிருக்கிறார். அவர் கர்த்தராகிய (பிதா) இயேசு (குமாரன்) கிறிஸ்துவேயன்றி (பரிசுத்தஆவி) வேறொருவருமில்லை. மூன்று நிலைப்பாடுகளுக்குரிய ஒருவர்.

28. இயேசு கிறிஸ்து தம்முடைய தெய்வீக தன்மையைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவானுக்கு வெளிப்படுத்தினதை நாம் இங்கு காண்போம்.
(1) இருக்கிறவர், இருந்தவர், வருகிறவர். (வெளி.1:4)
(2) இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். (வெளி.1:8, 11:17)
(3) நான் (இயேசு கிறிஸ்து) அல்பா, ஒமேகாவும் : ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன் என்கிறார். (வெளி. 1:8)
(4) நான் அல்பாவும், ஒமேகாவும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன். (வெளி.1:11, 2:8, 22:13)
(5) நான் முந்தினவரும், பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன். (வெளி.1:17)
(6) மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடுயிருக்கிறேன். (வெளி.1:18, 5:14) கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார். (யோ.12:34) நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர். (உபா.32:40, தானி.12:7)
(7) நான் மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன். (வெளி.1:18)
(8) இருபுறமும் கருக்குள்ள பட்டையத்தை உடையவர். (வெளி.2:12)
(9) அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களும் உள்ள தேவகுமாரன். (வெளி.2:18)
(10) உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர். (வெளி.2:23)
(11) தேவனுடைய ஏழு ஆவிகளையும், ஏழு நட்சத்திரங்களையும் உடையவர். (வெளி.3:1)
(12) பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும் தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாத படிக்கு திறக்கிறவரும், ஒருவரும் திறக்க கூடாத படிக்கு பூட்டுகிறவருமாயிருக்கிறார். (வெளி.3:7)
(13) திருடனை போல் உன் மேல் வருவேன். நான் உன் மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் என்கிறவர். (வெளி.3:3)
(14) உண்மையும் சத்தியமுள்ள சாட்சியும் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர். (வெளி.3:14)

**29. யோவான் ஆவிக்குள்ளானான். அப்பொழுது அவன் கண்டதாவது :**
(1) வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. (வெளி.4:2) இரண்டு அல்ல, மூன்று அல்ல, ஒரே சிங்காசனம். அது தேவனுடைய சிங்காசனம். (வெளி.14:5) தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் (வெளி.22:1,3)
(2) அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். (வெளி.4:2) இருவர் அல்ல, மூவர் அல்ல, மாறாக ஒருவர் மாத்திரமே.
(3) சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர், இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். (வெளி.4:8) இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி.13:8)
(4) சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர் சதாகாலங்களிலும் உயிரோடுயிருக்கிறவர். (வெளி.4:9)
(5) சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர் சகலத்தையும் சிருஷ்டித்தவர். (வெளி.4:11) அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. (யோ.1:10) திரித்துவம் இப்பிரபஞ்சத்திற்குரிய ஞானத்தினால் உண்டான போதனையாக இருப்பதினாலும் அதை விசுவாசிக்கிறவர்கள் இப்பிரபஞ்சத்திற்குரியவர்களாக இருப்பதினாலும் உலகத்தை சிருஷ்டித்தவர் நம் மத்தியில் இருந்த போது அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை.
(6) சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் ஆகும். (வெளி.7:10)
(7) எங்கள் தேவனுக்கு துதியும், மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் என்றும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. (வெளி.7:12)
(8) சிங்காசனத்தின் மத்தியில் இருக்கிறவர் ஆட்டுக்குட்டியானவர். (வெளி.7:17) இவருக்கு இடது, வலது பக்கம் யாரும் இல்லை.

(9) வானத்தையும் அதில் உள்ளவைகளையும், பூமியையும் அதில் உள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும் சதாகாலங்களிலும் உயிரோடுயிருக்கிறவர். (வெளி.10:7)
(10) பூலோகத்தின் ஆண்டவர். (வெளி.11:4)
(11) பரலோகத்தின் தேவன். (வெளி.11:13)
(12) இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன். (வெளி.11:17)
(13) உலகத் தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. (வெளி.13:8)
(14) சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிற தேவன். (வெளி.15:7)
(15) இருக்கிறவரும், இருந்தவரும், பரிசுத்தருமாகிய தேவன். (வெளி.16:5)
(16) சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர். (வெளி.16:7, 19:6)
(17) சிங்காசனத்தின் மத்தியில் உள்ள ஆட்டுக்குட்டியானவர், கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறார். (வெளி.17:14,19:16)
(18) நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர். (வெளி.18:8, 19:1, 20:12, 2தீமோ.4:1)
(19) 24 மூப்பர்களும் மற்றும் 4 ஜீவன்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனை தொழுதுக் கொண்டார்கள். (வெளி.19:4)
(20) சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும், ஆட்டுக்குட்டியானவரும். (வெளி.21:22)
(21) இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார் ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும். (வெளி.22:7, 22:20)

**30. இப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி தேவத்துவத்துக்கடுத்து எழுதிய காரியங்களையும், அப்.யோவான் இயேசு கிறிஸ்துவுக்கடுத்த வெளிப்பாடுகளை கூறியதிலிருந்து உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத்.20:2,3) இஸ்ரவேலைக் கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர், ஒருவரே கர்த்தர் (மற்.12:29) ஒரே பிதா எங்களுக்கு உண்டு. அவர் தேவன். (யோ.8:41) தேவன் ஒருவர் உண்டு என்பதே நம்முடைய விசுவாசம். (யாக்.2:29) இவையாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது என்று கண்டோம். ஆக நமக்கு ஒரே தேவன் உண்டு, அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி.13:8) இவரே நம் எல்லார் மேலும் (பிதா), எல்லாரோடும் (குமாரன்), எல்லாருக்குள்ளும் (பரிசுத்தஆவி) இருக்கிறவர். (எபே.4:6) இதுவே பரத்திலிருந்து வருகிற ஞானம். ஆகவே திரித்துவம் என்பது இப்பிரபஞ்சத்திற்குரிய லௌகிக ஞானம். திரித்துவத்தை உபதேசிப்பவர்கள் பிசாசுக்கே ஊழியம் செய்கிறார்கள்.**

31. ஆக வேதவாக்கியங்களில் காணப்படாத, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுடைய காலத்திற்கு பின் எழுந்த தேவத்துவத்தில் திரித்துவம் என்ற உபதேசம் சத்தியத்திற்கு விரோதமானது. இந்த ஞானம் பரத்திலிருந்து இறங்கி வராதது. மேலும் இது ஜென்ம சுபாவத்திற்குரியதும், பேய்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடைக்கிறது. (1யோ.5:19) பாருங்கள் திரித்துவ உபதேசம் பொல்லாங்கனால் உண்டானதால் அது உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. உலகமும் அதற்கு செவிக்கொடுக்கிறது. ஆக சத்தியம் தள்ளுபடி ஆயிற்று. ஆனாலும் தேவனை அறிந்தவன் எங்களுக்கு செவிக்கொடுக்கிறான். தேவனால் உண்டாயிராதவனோ எங்களுக்கு செவி கொடுக்கிறதில்லை.

**32. இப்பொழுது இந்த உலகம் முழுவதும் பரவியிருக்கும் திரித்துவ உபதேசத்தில் ஆயிரகணக்கான ஸ்தாபன சபைகள் உண்டு. இவைகளின் ஸ்தாபகர்கள், தலைவர்கள், அவைகளின் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், பிஷப்கள், கார்டினல்கள், இன்டர்நேஷனல் பிரசங்கிகள், M.Th, B.Th, S.TM போன்ற பட்டங்கள் பெற்ற கல்விமான்கள், ஞானிகள், அற்புத கூட்டங்கள் நடத்தும் ஊழியர்கள், வல்லமையான பிரசங்கிகள், போதகர்கள், விசுவாசிகள் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபிறப்படைந்துள்ளார்களா? பரிசுத்த ஆவியை பெற்றுள்ளார்களா? தங்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட்டுள்ளார்களா? கிறிஸ்துவின் சரீரமாகிய அந்த காணக்கூடாத சபையில் அவயவமாக இருக்கிறார்களா? என்று என்னிடம் கேட்டால் இல்லவே இல்லை என்பதே எனது வேதப்பூர்வமான பதில். வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு கேள்வி இருந்தால், அதற்கு வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு பதிலும் இருக்க வேண்டும்.**

33. கர்த்தருடைய மாபெரும் கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர் எனக்கு கொடுத்த பலத்தினாலும் அவ்வப்போது **இயேசுவே வாரும்** வெளியீடு மூலம் பல ஆயிரம் பேர்களை சந்தித்து வருகிறேன். என்னுடைய வெளியீடுகளை பெறுகிற சிலர் மரியாதையின் நிமித்தமாக

தங்களது வெளியீடுகளையும் எனக்கு அனுப்பி வைப்பார்கள். அவர்களுக்கு எனது நன்றி. சிலர் என்னுடைய வெளியீடுகளை திரும்பி எனக்கு அனுப்பி வைத்து, அதே நேரத்தில் தங்களது வெளியீடுகளை எனக்கு அனுப்பி தருவார்கள். அவர்களுக்கும் எனது நன்றி. என்னை பொறுத்தவரையில் எனக்கு வரும் யாருடைய வெளியீடுகளையும் நான் எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்புவது கிடையாது. பொதுவாக எனக்கு வரும் வெளியீடுகளை நான் படிப்பதும் உண்டு, தியானிப்பதும் உண்டு. ஏனென்றால் சிலவற்றில் எனக்கு வேண்டிய தகவல்கள் இருக்கும், ஆகாரம் இருக்கும். அப்பொழுது காரியங்கள் இப்படியா இருக்கிறது என அறிந்துக்கொள்வேன். அவைகளை ஆராய்ந்து பார்ப்பேன். அந்த அடிப்படையில் தான் நான் ஆராய்ந்து பார்த்த ஒன்று குறித்து அதற்கு எனது ஆய்வை இங்கு எழுதுகிறேன்.

34. எனக்கு கிடைத்த வெளியீடு ஒன்றில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தது. அந்த வெளியீட்டின் பின்பகுதியில் கேள்வி பகுதிகள் வரும். அதை நான் தியானிப்பது உண்டு. இப்பொழுது அங்கு காணப்பட்ட கேள்வி பதிலை கொடுத்து அதற்கு எனது ஆய்வுகளை எழுதுகிறேன். **கேள்வி : ஒரு முறை ஞானஸ்நானம் எடுத்தா, இரண்டாம் முறை ஞானஸ்நானம் எடுக்கலாமா? இதற்கு ஆசிரியர் பதில் : மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நாமத்தினால் தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்துவிட்டால் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்க தேவையில்லை. தண்ணீர் ஞானஸ்நானம் ஒன்றுதான் என பதில் அளித்துள்ளார்.** ஆனால் இப்படி ஒரு வசனம் தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களில் எங்காவது உண்டா? இது தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டுவது, சேர்ப்பது இல்லையா? ஒன்றை குறைத்து குறைத்த இடத்தில் ஒன்றை கூட்டுவது இல்லையா? இந்த வெளியீட்டின் ஆசிரியர் தன் ஜென்ம சுபாவத்திற்குரிய, லௌகிக ஞானத்தைக் கொண்டு பதில் எழுதியிருப்பதை என்னில் உள்ள ஆவியில் உணர்ந்தேன். இப்படிப்பட்ட உபதேசங்களினால் மக்கள் திசைதிருப்பபடுகிறார்கள் / வஞ்சிக்கப்படுகிறார்கள். **இந்த கேள்வி பதிலில் அநேக மாறுபாடான கருத்துக்களை போதித்து இவர்களுடைய போதகத்திற்கு இசைபவர்களை தங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்குகிறார்கள். இவர் எழுதிய பதிலை பார்க்கும் போது பரிசுத்த வேதாகமத்தில் அப்படி ஒன்று இல்லை. ஆனால் அங்கு காணப்படுவது என்ன? நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். என்று அப்.2:38 ல் எழுதப்பட்டிருக்கிறதை கண்டேன். நான் வேதவாக்கியங்களில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இவர் எழுதியிருப்பது போன்று எங்கும் காணப்படவில்லை. அப்படியானால் வேதத்திற்கு புறம்பான ஒன்று பிசாசினிடமிருந்துதான் வர வேண்டும்.**

35. எனது ஊழியத்தின் பாதையில் அநேக கள்ளகபடமுள்ள வேலையாட்கள் பிரசங்கித்திருப்பதை கேட்டிருக்கிறேன். ஒரு முறை எனது சொந்த ஊராகிய திருவைகுண்டத்தில் ஒரு சபையில் “பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பிரசங்கிப்பதை கேட்டேன். அவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என்பதை விட்டுவிட்டார், அதே வேளையில் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றும் கூறவில்லை.” மேலும் எனது ஊழியத்தின் பாதையில் பல ஆண்டுகளுக்கு முன்பு நான் மும்பையில் இருந்த போது நடந்த ஒரு சம்பவத்தை சுருக்கமாக கீழே எழுதுகிறேன். இதற்கு முன்பும் ஒருமுறை இந்த சம்பவம் குறித்து எழுதியதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. மும்பையில் தாராவீ என்ற பகுதியில் தமிழர்கள் அதிகம். இங்கு உள்ள ஒரு தமிழ் சபையின் வருடாந்திர கன்வென்ஷன். கன்வென்ஷன் பிரசங்கியாக ஒரு வெளிநாட்டினர் அழைக்கப்பட்டிருந்தார். மொழிப்பெயர்ப்பாளராக மறைந்த நெல்லை ஜெபராஜ் இருந்தார்கள். பிரசங்கியார் தனது செய்தி வேளையில் நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் உங்கள் பாவமன்னிப்புக்கென்று, இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பிரசங்கித்தார். ஆனால் மறைந்த சகோ.நெல்லை ஜெபராஜ் பிதா குமாரன் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என மொழிப்பெயர்த்தார். ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல அனைத்து வேளைகளிலும் அவ்வாறாகவே மொழிப்பெயர்த்தார். கூட்டத்தின் மத்தியில் இருந்த நான் உங்கள் மொழிப்பெயர்ப்பு தவறு அதை திருத்திக் கொள்ளுங்கள் அல்லது மொழிப்பெயர்ப்பை நீங்கள் செய்யாதீர்கள் என்று குரல் கொடுக்க, கூட்டத்தில் கலகலப்பு ஏற்பட்டது. நான் மேடைக்கு அழைக்கப்பட்டேன். நான் ஜனங்கள் மத்தியிலிருந்து அவ்வாறு கூக்குரலிட்டது தவறு என்று வாதாடினார்கள். நானோ சகோ. நெல்லை ஜெபராஜ் இதை அறிந்து தானே மொழிப்பெயர்த்தார், அதை கேட்ட ஜனங்கள் யாவரும் சத்தியத்தை அறிந்துக்கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டார்களே, இப்பொழுது அவர்களது மொழிப்பெயர்ப்பு தவறு என்பதை ஜனங்கள் உணர்ந்து கொண்டார்கள் அல்லவா என என் வாதத்தை முன் வைத்தேன். என்னை தாக்க முயன்றார்கள். அந்த வேளையில் தேவன் ஒரு இரட்சகனை அனுப்பினார். அந்த பகுதியில்

அவர் பிரபலமானவர், மேடைக்கு வந்து, அவர்களை எச்சரித்து என்னை தப்புவித்தார். இவர் ஒரு காலக்கட்டத்தில் என்னுடன் பணிபுரிந்தவராகயிருந்தார்.

36. மேலும் இந்த பத்திரிக்கை ஆசிரியர் தனது ஜூலை வெளியீடு பக்கம் 2ல் பக்தியுள்ள சந்ததியை உருவாக்க திருமணம் முடிப்பது, ஞானஸ்நானம் கொடுப்பது, **பரிசுத்த ஆவியை பெற வைப்பது** தன்னுடைய ஊழியத்தின் ஒரு பாகம் என எழுதுகிறார். ஒருவனை பரிசுத்த ஆவியை பெற வைப்பது இவருடைய பணியாயிருக்கிறது என்கிறார். ஒருவன் பரிசுத்த ஆவியை பெற இவர் அவனுக்காக ஜெபிப்பாரா, அல்லது ஏதாவது ஒரு பயிற்சி பெந்தெகோஸ்தே சபைகளில் கொடுப்பது போன்று கொடுப்பாரா? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாத இவர் எப்படி பரிசுத்த ஆவிக்காக மற்றொருவருக்கு ஜெபிக்க முடியும்? அவர்கள் மீது தம் கரத்தை வைக்க முடியும். இவருக்கடுத்த காரியங்கள் யாவும் மாயையும் மனதிற்கு சஞ்சலுமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியைக்குறித்து சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினால்தானே பெற வேண்டியவராயிருக்கிறோம். (கலா.3:14) தேவன் தமக்கு கீழ்படிகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுக்கிறார். (அப்.5:32) நம்மை கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணி, நம்மை முத்தரித்து நம்முடைய இருதயத்தில் ஆவி என்னும் அச்சாரத்தை கொடுத்தவர் தேவனே. (2கொரி.11:21,22) கவனியுங்கள் ஒருவன் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் அவனுக்குள் முத்திரை போடப்படுகிறான். (எபே.1:13) பாருங்கள் பரிசுத்த ஆவி ஒரு வாக்குதத்தம். நீங்கள் அந்த வாக்குதத்தத்திற்கு உரியவர்களாக காணப்படுகிறீர்களானால் அதை பெற்றுக்கொள்வீர்கள். அந்த வாக்குதத்தத்திற்கு உரியவர்வளாக காணப்படாவிட்டால் பெற முடியாது. மேலும் கவனியுங்கள். மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காக நம்மை ஆயத்தம் பண்ணினவர் தேவனே. அவரே நமக்கு ஆவி என்னும் அச்சாரத்தை தருகிறார். (2கொரி.5:4,5) **முடிவாக நாம் பரிசுத்த ஆவியை பெற அப்.2:38 ஒன்றுதான் டாக்டரின் மருந்து சீட்டு, அதை கடைப்பிடிக்கும் போது நாம் பரிசுத்த ஆவியை பெற மற்றொருவருடைய தயவை நாட, அவருடைய சகாயம் நமக்கு தேவையில்லை.** ஆக விசுவாச வல்லமை ஆசிரியருடைய ஆலோசனை பிசாசின் வழிநடத்தலாகும்.

37. இப்பொழுது நான் குறிப்பிட்ட வெளியீட்டை சார்ந்த போதகர் ஒருவர் என்னிடம் ஒரு நாள் கைபேசியின் வாயிலாக தொடர்பு கொண்டு என்னுடைய சமயம் எடுத்து, என்னை சந்திக்க வந்தார். அநேக ஆவிக்குரிய காரியங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார். அப்பொழுது கூட அவரிடம் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து வேதவாக்கியங்களில் எங்காவது ஓரிடத்திலாவது ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்களா என ஆதாரம் காட்ட முடியுமா என கேட்டேன். வேதவாக்கியங்களில் இல்லாத ஒன்றைத்தான் நீங்கள் கடைப்பிடித்து வருகிறீர்கள் என கூறினேன். அவரால் சரியான பதில் கொடுக்க முடியவில்லை. எங்களது சம்பாஷனையின் ஒரு காலக்கட்டத்தில் சகோ.பிரன்காமை குறித்து பேசினேன். உடனே அய்யோ! அவர் ஒரு கள்ளதீர்க்கதரிசி, தன்னை **கிறிஸ்து** என அழைத்தார். நீங்கள் அவரை பின்பற்றுகிறீர்களா என கேட்டார். அப்பொழுது நான் அவர் தன்னை கிறிஸ்து என்று கூறியதை நீங்கள் அவருடைய செய்திகளில் படித்தீர்களா அல்லது யாராவது ஒருவர் சொல்ல அதைக்கேட்டு விசுவாசித்தீர்களா என்று கேட்க, அவர் பிறர் சொல்ல கேட்டுத்தான் அதை விசுவாசித்தேன் என்றார். உடனே அவருக்கு சகோ.பிரன்ஹாம் செய்தியிலிருந்து அவர் தான் கிறிஸ்து அல்ல என்றும், தன்னை கிறிஸ்து என அழைப்பவர்களை கண்டனம் பண்ணுவதையும் சுட்டிக் காட்டினேன். அவர் அதை அவிசுவாசத்தோடு கேட்டதினால் இருதய கடினத்தோடு திரும்பி சென்றார். மனதில் உள்ள கருத்துக்களை மாற்றிக்கொள்ளவில்லை. சகோ.பிரன்ஹாம் கூறாத ஒன்றை அவர் கூறியதாக சொல்லி ஊழியர்கள் பிரசங்கிக்கிறார்கள். மக்கள் அதை விசுவாசிக்கிறார்கள். அதே போன்றுதான் ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுக்கப்படாவிட்டாலும் அவர்கள் அதையே விசுவாசிக்கிறார்கள். திரித்துவ ஸ்தாபன சபைகளில் சத்தியம் தள்ளுபடியாகி விட்டது.

38. இங்கு மற்றொரு சம்பவம் என் குடும்பத்தில் நடந்தது எனக்கு ஞாபகம் வருகிறது. எனது மகளுக்கு வரன் ஒன்று பார்த்தேன். நான் என்னை ஊழியக்காரன் என்று அவர்களுக்கு அறிமுகப்படுத்தியபோது என்னிடம் அநேக ஆவிக்குரிய காரியங்கள் குறித்து பேசினார்கள். அந்த வேளையில் நானோ சகோ. பிரன்ஹாம் குறித்து பேசிய போது அவர்கள் ஒன்றும் கண்டுகொள்ளவில்லை. பெண் பார்க்கும் படலத்தின் நாள் குறிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் வரவில்லை. தகவல் அறிய நான் அவர்களை தொடர்பு கொண்ட போது நான் ஒரு

கள்ளத்தீர்க்கதரிசியை பின்பற்றுகிறவன், அவர் தன்னை கிறிஸ்து என்று அழைக்கிறார், அவர் பெயரை கேட்பதே அவர்களுக்கு அலர்ஜியாக இருக்கிறது என்றார்கள். நான் அவர்கள் கருத்து, எண்ணம் தவறு, அதில் மாற்றம் தேவை என்று எடுத்துக்கூறியும் அவர்களும் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால் நான் எடுத்துக்கூறியது அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. ஆக இந்த கிறிஸ்து பிரன்ஹாம் உபதேசத்தில் உள்ள பேலியாளின் மக்களால் தேவனுடைய நாமம், இக்காலத்திற்குரிய செய்தி தூஷிக்கப்பட்டே வருகிறது. இவர்கள் ஏற்ற ஆக்கினையை ஏற்ற வேளையில் அடைவார்கள். அது நிச்சயம்.

**39. பாவம் / அவிசுவாசம்.** ஒரே மனுஷனாலே (ஆதாம்) பாவமும், அந்த மனுஷன் செய்த பாவத்தினாலே / அவனுடைய அவிசுவாசத்தினாலே மரணமும் இந்த உலகில் பிரவேசித்தது. (ரோ.5:12-14) ஆதாம், ஏவாள் பாவம் செய்யும் முன்பு மரணத்திற்கு பாத்திரவான்கள் அல்ல. ஆனால் ஆதாமும் ஏவாளும் மரணத்தைக்குறித்து முன்பே அறிந்திருந்தனர். (ஆதி.2:17, 3:3) சாத்தான் ஏவாளிடம் தேவனுடைய வார்த்தை மீது அவிசுவாசத்தை கொண்டு வந்தான். (ஆதி.3:4,5) இன்று திரித்துவ ஸ்தாபன சபைகள் தேவனுடைய வார்த்தையின் மீது (அப்.2:38, 2:47, 4:12, 10:43 மற்றும் லூக்.24:47) அவிசுவாசத்தைக் கொண்டு வந்துள்ளன. ஆதாம் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசத்தினால் மீறினான். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போனான். (ரோ.5:18,19) ஆதாம் பாவத்திற்குட்பட்டான். பாவம் என்பது என்ன? விசுவாசத்தினாலே வராத யாவும் பாவம். (ரோ.14:23) எதன் மீது அவிசுவாசம்? தேவனுடைய வார்த்தையின் மீது அவிசுவாசம். பாவத்தின் வஞ்சனையினால் அவர்கள் இருதயம் கறைப்பட்டது. (எபி.3:13) ஆக பாவம் மரணத்தை பிறப்பித்தது. (யாக்.1:15) பாவத்தின் சம்பளம் மரணம். (ரோ.6:23) **சாத்தானும் ஏவாளும் கூட்டு சேர்ந்து மனுகுலத்தின் மீது சரீர மரணத்தைக் கொண்டு வந்தார்கள். இன்று சாத்தானும் திரித்துவ சபைகளும் ஒன்று சேர்ந்து மனுகுலத்தில் சரீர மரணத்தை கொண்டு வந்துள்ளார்கள். மனுகுலத்தின் சரீர மரணத்திற்கு ஏவாள் தான் தாய். ஆதாம், தகப்பன் அல்ல.** கவனியுங்கள் : ஏவாள் தேவனுடைய வார்த்தையின் பெரும்பகுதியை விசுவாசித்தாள். ஆனால் ஒரு சிறிய பகுதியின் மீது அவிசுவாசம் கொண்டாள். அதுபோன்று தான் இன்று திரித்துவ ஸ்தாபன சபைகளும். ஒருவனுடைய விசுவாசத்தை திசைதிருப்புவதே சாத்தானின் வேலை. அதேபோன்று ஒரே தேவன், அவருடயை நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வேத உபதேசத்தை திசை திருப்புவதே திரித்துவ ஸ்தாபன சபைகளின் வேலை.

**40. சாத்தான் யார்?** இவனுக்கு கொடுக்கப்பட்ட பெயர் லூசிபர். காப்பாற்றுகிறதற்கென அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் எசே.28:14 இவன் ஞானத்தில் நிறைந்தவன் (எசே.28:12) இவன் பூரண அழகுள்ளவன். (எசே.28:12) சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி இவனில் அநியாயம் கண்டுப்பிடிக்கப்பட்டது மட்டும் தன் வழிகளில் குறையின்றி இருந்தான். (எசே.28:15) பாவத்திற்கு பிறப்பிடம் இவனே. ஏனென்றால் இவன் ஆதிமுதல் பாவம் செய்கிறவனாய் இருக்கின்றான். (1யோ.3:8) இவன் தானியேலை பார்க்கிலும் ஞானவான். (எசே.28:3) இரகசியமானதொன்றும் இவனுக்கு மறைபொருள் அல்ல. (எசே.28:3) இவன் இருதயம் மேட்டிமை கொண்டு, நான் தேவன் என்று சொல்லி தன் இருதயத்தை தேவனின் இருதயத்தைப் போல் ஆக்கினான். (எசே.28:2) இவனைக்குறித்து தான் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாய். ஜாதிகளை ஈனப்படுத்தினவனே நீ தரையில் விழவெட்டப்பட்டாய் என எசா.14:12 ல் வாசிக்கிறோம். பாவம் பூமியில் தொடங்கவில்லை. அது பரலோகத்தில்தான் தொடங்கினது. பிசாசாகிய லூசிபர் பூமியில் விழுவதற்கு முன்பு கீழ்படியாமையின் காரணமாக ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டான். அவன் தேவனைவிட மேலான ஒரு நிலையை விரும்பினான். அதுதான் தொல்லை தொடங்க காரணமாயிருந்தது. பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். (எசே.18:4,20) சாத்தான் நிச்சயமாக மரித்து முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். சாத்தானுக்கு இரட்சிப்பு கிடையாது. சாத்தான் பாவம் செய்தான். அவனே பாவத்தை தோன்றச் செய்தான். அவன் ஒரு ஆவி. அவன் தன் ஆத்துமாவில் பாவம் செய்தான். இவன்தான் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தான். ((எசே.28:13) ஏவாளை வஞ்சித்தவனும் இவனே. அவள் மூலமாகத்தான் தன் சந்ததியை பூமியிலே கொண்டுவந்தான். ஆம், காயின் சாத்தானின் சந்ததி. சாத்தானும், அவனுடன் சேர்ந்த அவன் பரிவாரமும் வானத்திற்கும் பூமிக்கும் இடையில் வான மண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவிகளின் சேனை என எபே.6:12 ல் தியானிக்கலாம். இவன் ஆகாயத்து அதிகார பிரபு என்றும் எபே.2:2 ல் அழைக்கப்படுகிறான். **ஏவாள் சாத்தான் உறவினால் உலகில் மரணம் பிரவேசித்தது. அழியாமை அழிவை சந்ததித்தது.** ஆக மரணத்திற்கு அதிகாரியாகிய இந்த பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கு (எபே.2:14) தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். (1தீமோ.3:16) இதுவே தேவரகசியம்.முதலாவது மனிதன் ஆவிக்குரிய சரீரத்தில் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டான். பின் மிருக சாயலாக

மண்ணினால் உருவாக்கப்பட்டான். ஆவிக்குரிய சரீரத்தில் அவன் பாவத்தில் விழமுடியாது. பாவத்தில் வீழ்வதற்காகவே அவன் மிருகத்தின் சாயலில் மண்ணால் உருவாக்கப்பட்டான். அவன் தன் ஆவியில் பாவம் செய்யவில்லை. தன் மாம்சத்தில்தான் பாவம் செய்தான். அதாவது மாம்ச இச்சை. அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருந்தது. (ஆதி.3:6) அவன் பாவம் செய்தபோது தன் சிருஷ்டிகளிடமிருந்து தன்னை மறைத்துக்கொண்டான். அவரிடமிருந்து முற்றிலுமாக பிரிக்கப்பட்டான். அவனை மீட்கவே தேவன் மனுஷசாயலானார். இழந்துப்போனவனை மீட்டார்.

41. லூசிபரின் ஆவி அதன் தன்மைகளை கொண்டு, இவன் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமானவன் ஆதலால் (1)) அந்திக்கிறிஸ்துவின் ஆவி என்றும் 1யோ.4:3 (2) உலகத்தின் ஆவி 1கொரி.2:12, 2கொரி.4:4 (3) ஆகாயத்து அதிகார பிரபுவின் ஆவி எபே.2:2 (4) வஞ்சிக்கும் ஆவி 1தீமோ.4:1 (5) தாறுமாறுகளின் ஆவி எசா.19:16 (6) பொய்யின் ஆவி 1ராஜா.22:22, யோ.8:44 (7) எரிச்சலின் ஆவி 1சமோ.18:8 (8) கனநித்திரையின் ஆவி எசா.29:10 (9) கொலை பாதக ஆவி யோ.8:44, மத்.17:15 (10) குற்றம் சாட்டும் ஆவி வெளி.12:10 (11) பயத்தின் ஆவி 2தீமோ.1:17 (12) ஊமையும் செவிடுமான ஆவி மாற்.12:25 (13) பலவீனப்படுத்தும் ஆவி. லூக்.13:11 (14) வேசித்தன ஆவி ஓசி.4:12, 5:4 (15) குறிசொல்லும் ஆவி அப்.16:16 (16) குருடும் ஊமையுமான ஆவி மத்.17:22 (17) பிசாசின் ஆவி வெளி.16:13,14 (18) அடிமைத்தனத்தின் ஆவி ரோ.8:15 என அதன் தன்மைக்கேற்றவாறு பற்பல பெயர்களினால் அழைக்கப்படுகிறது. இவை அனைத்தும் பற்பல தன்மைகளைக் கொண்ட ஒரே ஆவியே.

**(அ) விசுவாசத்தினால் வராத யாவும் பாவம்**. (ரோ.14:23) Whatever is not of faith is sin. ஆதாவது தேவனுடைய வார்த்தையின் மேல், வேதவாக்கியங்கள் மேல் ஆதி.1 அதி முதல் வெளி.22 அதி வரை கூறப்பட்டுள்ள வேதவாக்கிய உபதேசங்களுக்கு செவிகொடாமல், அதன்மேல் கொண்டுள்ள அவிசுவாசம் யாவும் பாவமே. **விசுவாசம் கேள்வியினாலே வரும், அதாவது தேவனுடைய வார்த்தையை கேட்பதினால், தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும். அதனாசியு விசுவாச பிரமாணத்திலிருந்து வராது. ஸ்தாபன சபைகளின் வேதபாடக புத்தகங்களிலிருந்து வராது. பிரபலமான பிரசங்கிகளின் சொற்பொழிவுகளிலிருந்து வராது. ஸ்தாபன வேதாக கல்லூரிகளில் படிக்கும் பாடங்களிலிருந்து வராது. விசுவாசம் தேவனுடைய வார்த்தைகளிலிருந்து மட்டுமே வரும்.** நீங்கள் தேவனுடைய வார்த்தையை கேட்க வேண்டும். அதிலிருந்து மாத்திரமே விசுவாசம் பிறக்கும், உதயமாகும். உதாரணமாக : தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் (Young Woman – திருமணமான ஒரு பெண்) தங்கள் புருஷனிடத்திலும் (இதிலிருந்து அவள் ஒரு திருமணம் ஆன பெண் என உறுதிப்படுத்தப்படுகிறது) தங்கள் பிள்ளைகள் இடத்திலும் (அதாவது அவள் பிள்ளைபேறுடைய ஒரு தாய் என தெரிகிறது) அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திரிக்கிறவர்களுமாக (Keepers at home) இருக்க வேண்டும். எதற்காக? வீட்டை நடத்த – To guide the household – 1தீமோ.5:14) நல்லவர்களும் புருஷருக்கு கீழ்படிகிறவர்களுமாய் இருக்க வேண்டும். (தீத்.2:4,5) இது திருமணமான பெண்களுக்கடுத்த உபதேசங்களில் ஒன்று. நீ இதன்மேல் அவிசுவாசம் கொண்டு பொது ஸ்தலங்களுக்குச் சென்று அங்கு வேலை செய்து வருவாயாகில் இதனால் தேவனுடைய வார்த்தை தூஷிக்கப்படுகிறது. உன்னுடைய செயல் வேதவாக்கியங்களின் அடிப்படையில் பாவம். உன் புருஷன் உன் குடும்பத்தை போஷிக்க திரானியற்றவன். அவன் புருஷனாக பிறந்தது அவமானம். அவன் திருமணம் செய்து ஒரு வாழ்க்கை நடத்த தகுதியற்றவன். **இதிலும் நான் ஐந்துவகை ஊழியத்தில் இருக்கிறேன், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய அடைய அழைக்கப்பட்டவன் என்று கூறிக்கொண்டு ஒருவன் தன் சரீரத்தின் பாகமாகிய தன் மனைவியை பொது ஸ்தலங்களுக்கு பணிக்கு அனுப்பி அவள் வருமாணத்தைக்கொண்டு குடும்பம் நடத்துவானாகில் அவன் முதலாவது தன் சுயசித்தத்தின்படி கிறிஸ்துவுக்கு ஒரு ஊழியம் செய்கிறான். அவன் அழைக்கப்பட்டவனே அல்ல. ஊழியம் அவனுக்கு ஒரு வெட்ககேடு.**

42. சரீர மரணம் ஒரு மனிதனுடைய முடிவு அல்ல. ஏனென்றால் ஒரு தரம் மரிப்பது, பின்பு நியாயத்தீர்ப்பு அடைவது மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிகிறது.(எபி.9:27) மரணம் ஒரு மனிதனுடைய இடத்தை மாற்றுகிறது. தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி, தான் உண்டாக்கின மனுஷனை அதிலே வைத்தார். (ஆதி.2:8) பாவத்திற்கு பின் அவன் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிடப்பட்டான். (ஆதி.3:23,24) இப்பொழுது பரதீசு எடுக்கப்பட்டுவிட்டதால் மனுஷன் இந்த பூமியை விட்டு கடந்தப்பின், பாவி ஐந்தாம் பிரமாணத்திற்கும் (அங்கு அழுகையும், பற்கடிப்பும், வேதனையும் உண்டாயிருக்கும்) பரிசுத்தவான்கள் ஆறாம் பிரமாணத்திற்கும் (இது இளைப்பாறும் இடம்) இடம் மாற்றம் செய்யப்படுகிறார்கள். மரணம் ஒரு பாவியான மனிதனை தேவனிடமிருந்து முற்றிலுமாக

பிரிக்கிறது. Death is total Separation from God. ஆனால் அப்.2:38 ன் படி தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, தங்கள் அக்கிரமங்களுக்கும் மீறுதலுக்கும் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியை பெற்றவர்கள், அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோ.11:25) இவர்களுடைய மரணம் நித்திரை போன்ற இளைப்பாறுதல். பின் நித்திரையினின்று எழும்புகிறார்கள். (1தெச.4:16) ஆதலால் பரிசுத்தவான்களுடைய சாவை நாம் மரணம் என்று கூறுவது இல்லை. மாறாக நித்திரை அடைந்தார்கள் / இளைப்பாறுகிறார்கள் என்று கூறுகிறோம். அடுத்து இவர்கள் என்னென்றைக்கும் மரியாமலும் இருப்பார்கள். (யோ.11:26) இவர்கள் உலகத்தாரைப்போன்று / ஏனைய பரிசுத்தவான்களை போன்று மரிப்பது இல்லை. (யோ.17:16) இவர்கள் மரிப்பதும் இல்லை, நித்திரையடைவதும் இல்லை. மாறாக எக்காளம் தொணிக்கும். மரித்தவர்கள் அழியாதவர்களாய் எழுந்திருப்பார்கள். உயிரோடு இருக்கும் நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இந்த சரீரம் அழியாமையையும், சாதுக்கேதுவான இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும். அப்பொழுது மரணம் ஜெயமாக விழுங்கப்படும். (1கொரி.15:51-53) இவர்கள் தான் தங்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்களுடைய ஆத்தும இரட்சிப்பானது அருமையானது, அது விலையேறப்பெற்றது. ஆக ஆத்துமாவில் இரட்சிப்படைந்தவர்களில் ஒரு சாரார் மரித்தாலும் பிழைப்பார்கள். மற்றொரு சாரார் என்னென்றைக்கும் மரியாமலும் இருப்பார்கள். இருசாராரும் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு கற்புள்ள கன்னியாக ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள். (2கொரி.11:2)

**43. பாவம் என்பது என்ன?**

ஆதியில் ஆதாம் இதைத்தான் செய்தான். அவனுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையானது நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். (ஆதி.2:17) ஏவாள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது என்று கண்டு அதன் கனியை பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். தேவனுடைய கட்டளையின் மேல் அவிசுவாசம் கொண்டு, தடை செய்யப்பட்ட கனியை புசித்தார்கள். சாவாமையுடையவர்களாய் இருந்தவர்கள் மேல் மரண தண்டனை விழுந்தது. பாருங்கள். அவிசுவாசம் – பாவம். பாவத்தின் சம்பளம் மரணம். (ரோ.6:23) பாருங்கள். அவிசுவாசம் மரணத்தைக் கொண்டு வந்தது. அதுபோல் தீத்.2:4, 5 வசனங்களுக்கு கீழ்படியாதவர்களுக்கும் அதுவே சம்பவிக்கும். இதில் தயவு எதுவும் கிடையாது. இது சத்தியத்தை அறியும் அறிவை அடந்தபின்பும் அதை மீறுதல் ஆகும். இவர்கள் அநேக அடிகளுக்கு பாத்திரவான்கள்.

**(ஆ) தீய நோக்கம் – பாவம்.** Thought of Foolishness. (நீதி.24:9) தவறான சிந்தையோடு, கெட்ட சிந்தையோடு, மாம்ச இச்சையோடு ஒரு பெண்ணை பார்ப்பது பாவம். இந்நாட்களில் இளம் மற்றும் வயதினராகிய பெண்கள் தங்கள் இடுப்பின் கீழ் லெக்கின்ஸ் என்னும் உடலோடு ஒட்டிக்கொண்டுள்ள பனியன் போன்ற துணியினால் தயார் செய்யப்பட்டுள்ள ஆடைகளை அணிகிறார்கள். இவர்கள் தான் ஆண்களின் இச்சைகளை தூண்டுகிறார்கள். பிசாசின் பார்வையில் அது மிக்க நாகரீகமாக தெரிகிறது. ஆனால் இயேசுவின் பார்வையில் ஒரு வெட்க கேடாக தெரிகிறது. இதற்கு அநேக கிறிஸ்தவ பெண்களும் அடிமைகளாய் இருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்த பெண்கள் ஆண்களை கவரும் வகையில் கவர்ச்சியான ஆடைகளை அணிந்து ஊர்வலம் வருவாளாகில் அந்த ஆணுடைய தீயநோக்க குற்றத்தில் அவளுக்குத்தான் அதிக பங்கு உண்டு. ஏனென்றால் அவளே அவளுடைய ஆடையினால் அவனுடைய இச்சைகளை தூண்டுகிறாள். அடுத்து பிறருடைய வளர்ச்சியினால் ஒருவருக்கு மற்றவர் மீது தீய நோக்கம் உண்டாகிறது. ஒருவன் உழைத்து பணம் சம்பாதிக்கிறான். அவன் மீது ஊரை சுற்றிக்கொண்டு திரியும் ஒருவனுக்கு தீய நோக்கம். அதாவது சுறுசுறுப்பான அவனுடைய வளர்ச்சியைக் கண்டு சோம்பேறிக்கு தீய நோக்கம். இதுவும் பாவம். தேவன் காயின் காணிக்கையை அங்கீகரிக்கவில்லை. அதினால் உண்டான பொறாமை என்ற தீய நோக்கத்தில் தன் சதோரனாகிய ஆபேலை அவன் கொலை செய்தான்.

**(இ) அநீதி எல்லாம் பாவம்.** Unrighteousness. (1யோ.5:17)

(1) சமீப காலத்தில் எனக்கும் தபால் துறைக்கும் மத்தியில் பிரச்சனை எழுந்தது. அது முடிந்து தீர ஆறு மாதங்களுக்கு மேலானது. எனது வெளியீடு தடை செய்யப்பட்டது. அப்பொழுது நான் அதின் தலைமையிடம் வாதம் செய்ததாவது : தாங்கள், உங்கள் சட்ட புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படி என் மேல் நடவடிக்கை எடுங்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதிகாரிகளின் எழுதப்படாத சட்டத்திட்டங்கள் / கட்டளைகளை கொண்டு எனக்கு அநீதி செய்யாதீர்கள் என்று நான் வாதித்தேன். பல மாதங்களுக்கு பின்பு எனக்கு நீதி கிடைத்தது. மீண்டும் தூத்துக்குடி டிவிஷனை சேர்ந்த நாசரேத்துக்கும் அதின் வட்டாரங்களுக்கும் சுமார் 75-100 புத்தகங்கள் செல்கின்றன. அதில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு செல்லும் புத்தகங்கள் நாசரேத்

தபால் துறை அதிகாரி தபால் தலைகள் குறைவாக ஒட்டப்பட்டுள்ளது என கூறி அதை எனக்கு திருப்பி அனுப்புகிறார். சுமார் 50-60 புத்தகங்களில் ஒட்டப்பட்டுள்ள தபால் தலைகள் நியாயமானதாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு அதே தபால் தலையுடன் செல்லும் புத்தகங்களுக்கு குறைவாக தபால் தலை ஒட்டியுள்ளேன் என்று அது எனக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இதுவும் அநீதி என்று முறையிட்டு வருகிறேன். நாசரேத் போஸ்ட் மாஸ்டரிடம் இதற்குரிய காரணங்களை கேட்டு, சுமார் 6 மாதங்களாகியும் எந்த விதமான தகவலும் கிடையாது. ஆக இதுவும் ஒரு அநீதியின் விளைவால் உண்டான பிரச்சனையாக இருந்து வருகிறது.

(2) அடுத்து எனது மகள் BPT 2010- ல் முடித்தாள். கல்லூரிக்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் கட்டி முடித்தேன். சிலவேளைகளில், அவள் பீஸ் கட்டவில்லை என்பதற்காக பரீட்சை எழுத தடைசெய்யப்பட்டதும் உண்டு. இறுதி தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டாள். கல்வியை முடித்தாள். அதன் பின் இண்டென்ஷிப் என்கிற ஒரு ஆறுமாத டிரெய்னிங்கை அவள் முடிக்க வேண்டும். அதை அவளது கல்லூரியில் உள்ள மருத்துவமனையில் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டாள். அங்கு பயிற்சிக்கான சரியான வசதிகள் இல்லாததால் அங்கு டிரெய்னிங் எடுப்பது பிரயோஜனமாக இருக்காது என்று, மகளை சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இடம் பெற்று டிரெய்னிங் எடுக்க வைத்தேன். இதனால் அவள் படித்த கல்லூரிக்கு என் மீது கடும் கோபம். இதற்கிடையில் மகளது அனைத்து மார்க் ஷீட்களும் அவளுக்கு கொடுக்கப்பட்டது. இண்டென்ஷிப் முடிந்தவுடன் அந்த சான்றிதழ்களை கல்லூரியில் கொண்டு சேர்த்தாள். அவள் தன் கல்லூரியில் இன்டென்ஷிப் டிரெய்னிங் எடுக்காவிட்டாலும், அவர்கள் அவளிடம் 30,000/- ரூபாய் இண்டென்ஷிப் பீஸ்சாக கேட்க, நான் மறுக்க, அவர்கள் அவளுடைய புரவிஷனல் சான்றிதழ் மற்றும் கான்வேகேஷன் சான்றிதழ் யுனிவர்சிட்டியிலிருந்து பெற்றுத்தர மறுத்தார்கள். இதுக்குறித்து நான் தமிழ்நாடு மருத்தவதுறை அதிகாரிகள் அனைவருக்கும் புகார் மனு அனுப்பி வைத்தேன். இதனால் மேலும் என் மீது ஆத்திரமடைந்த கல்லூரி நிர்வாகம் நான் 98,950/- ரூபாய் கல்லூரிக்கு கட்ட வேண்டிய பாக்கியாக உள்ளது, அதை கட்டினால் சான்றிதழ்களுக்காக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அதிகாரபூர்வமாக எனக்கு கடிதம் கொடுத்தார்கள். வாழ்க்கையில் அநீதிக்கு மேல் அநீதி. இந்த காரியம் இப்பொழுது முடியும் தருவாயில் கர்த்தருடைய கிருபையினால் காணப்படுகிறது. நான் சுமார் 8 ஆண்டுகள் பொறுத்துக்கொண்டிருந்தேன். ஏனென்றால் ஒரு காலக்கட்டத்தில் இந்த கல்லூரியின் சேர்மேன் டாக்டர். ராஜேந்திரன் அவர்கள் நான் ஒரு ஊழியக்காரன் என்பதினால் எனக்கு மதிப்பும், மரியாதையும் செலுத்தி என்னோடு பழகினார்கள். ஒருமுறை அவரும் நானும் கல்லூரி மருத்துவமனையின் படியில் அமர்ந்து கொண்டு சுமார் கால்மணி நேரத்திற்கு மேல் கல்லூரிக்கடுத்த, சபைகளுக்கடுத்த காரியங்களைக்குறித்து மனம்விட்டு பேசிக்கொண்டிருந்தோம். அவர் எனக்கு மிக ஒத்தாசையாகயிருந்தார். ஆனால் அவர் இறந்த பிறகு அவருடைய மனைவி கல்லூரி சேர்மேன் ஆனதிலிருந்து அனைத்தும் தலைகீழாக மாறியது. ஒரு முறை நானும் எனது மகனும் மகளுடைய சான்றிதழ் காரியமாக சென்றபோது அவரது அறையில் ஒரு சீனியர் சிட்டிசனும், ஊழியகாரனுமாகிய என்னை சுமார் அரைமணி நேரம் அவருக்கு முன்பாக நிற்க வைத்து பேசினார்கள். என்னுடைய பொறுமை அதன் எல்லைக்கோட்டை தாண்டிவிட்டதால், நான் கல்லூரி மீது மிக்க கடினமான நடவடிக்கைகள் எடுக்க துணிந்தேன். நான் கல்லூரியிடம் 28,80,000/- கேட்டு புகார் மனு அனுப்பினேன். மருத்துவக்கல்லூரி மேல்மட்டம் வரை அதன் நகலை அனுப்பினேன். அதன்பின் தான் அவர்கள் இருதயத்தில் ஒரு மனமாற்றம் ஏற்பட்டது. டாக்டர். ராஜேந்திரன் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் இந்த இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்காது. இதன்பின்தான் அவர்கள் மகளது அனைத்து சான்றிதழ்களையும் எந்தவிதமான பணமும் செலுத்தாமல் கொடுக்க முன்வந்தார்கள். அநீதியாக சம்பாதிக்க நினைத்த பணத்தை பற்றிய எண்ணத்தை மறந்தார்கள். ஆக 8 ஆண்டுகளுக்கு பிறகு அநீதி, நீதியாக மாறி வருகிறது. மகளது சான்றிதழ்கள் அனைத்தையும் அக்டோபர் முடிவுக்குள் பல்கலை கழகத்திலிருந்து பெற்றுதருவதாக வாக்களித்துள்ளார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

(3) அடுத்து பிள்ளைகளுக்கு வீடு ஒன்று கட்ட ஆரம்பித்தேன். ஒப்பந்தகாரர் ஏமாற்று வேலைகளை ஆரம்பித்தார். நான் அவருக்கு பணம் எதுவும் கொடுக்க வேண்டியது இல்லை என்ற நிலையில் அவரது பணிகளை நிறுத்தினேன். ஆத்திரம் அடைந்தார். நான் அவருக்கு 8,00,000/- ரூபாய் கொடுக்க வேண்டும் என அரசியல், போலீஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களை கொண்டு மிரட்டினார். அநீதிக்கு மேல் அநீதி. எப்பக்கமும் நெருக்கங்கள். ஆனாலும் கர்த்தருடைய கரம் என்னோடு இருந்ததால் எதிர்த்து போராடினேன். கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு வெற்றி கிடைத்தது. அநீதி நீதியாக மாறினது. ஒப்பந்தக்காரருக்கு ஐந்து பைசா கூட கொடுக்காத நிலையில் ஒரு வீட்டைக்கட்டி அதில் குடியேறினேன்.

(4) மூத்த மகனுக்கு பெண் கொண்ட இடத்திலும் அநீதி. பெண் வீட்டாரே முன்வந்து திருமணத்தில் கொடுப்பதாக வாக்கு கொடுத்த சீர்வரிசைகளை கலியாணம் முடிந்தவுடன் கொடுக்க மறுத்தார்கள். காலம் 8-9 ஆண்டுகள் கடந்து விட்டது. அவர்கள் அமைதியைகாத்துக்கொண்டு வருகிறார்கள். எப்படியோ 1000 பொய்களை சொல்லி மகள் திருமணத்தை முடித்துவிட்டார்கள். வாக்களித்ததை கேட்ககூடாது என்பதற்காக வரதட்சணை கொடுமை என்ற நாடகம் நடத்தினார்கள். வரதட்சணை கொடுமை நடவடிக்கையும் காவல்துறை மூலம் எடுத்தார்கள். அவர்கள் ஒரு பக்கத்தில் புகார் கொடுத்தார்கள். நான் புகாரை மறுத்து சுமார் 100 பக்கங்களுக்கு சாட்சிகளுடன் பதில் எழுதி அவர்களது பகுதி, என் பகுதி, மற்றும் மகன் வேலை செய்யும் பகுதியின் அனைத்து உயர் போலீஸ் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். முடிவில் சீர்வரிசையாக கொடுக்கிறேன் என்று கூறியதை கொடுத்து விடுங்கள் என்று ஆலோசனை கூறி பெண் வீட்டாரை அனுப்பி வைத்தார்கள். அதன் பின்பும் இதுவரை எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. இந்த குடும்பத்தில் நான் பெண் எடுத்ததற்கு மாப்பிளை முதற்கொண்டு நானும் எனது குடும்பத்தினரும் திருமண நாளில் வணங்கா கழுத்துள்ள பெண்வீட்டார் கைகளினால் பட்ட அடியும், கால்களினால் பெற்ற மிதியும் தான் நாங்கள் பெற்ற திருமண பரிசு. இப்படிப்பட்ட ஒரு கீழ்தரமான குடும்பத்தை நான் இதுவரை எனது ஊழியத்தின் பாதையில் கண்டதேயில்லை. இதுவும் ஒரு அநீதி தானே. ஆக காலேப் யோசுவா தன் வாழ்க்கையில் அநீதிக்கு மேல் அநீதியை அனுபவித்து வந்தாலும், அதை எதிர்த்து போராடி வெற்றியின் மேல் வெற்றியை பெற்று வருகிறார். அநீதி எல்லாம் நீதியாக மாறுகிறது. இது தேவனுடைய சுத்த கிருபையன்றி வேறில்லை. அவர் எனக்காக போரடி வருகிறார். ஆதலால் நான் அநீதிகளுக்கு அஞ்சேன்.

(ஈ) நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். (1யோ.3:4) Sin is the transgression of the Law. உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக. இதுவே ராஜரீக பிரமாணம் (யாக்.2:8) உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். (கலா.5:14) ஆவியினால் நடத்தப்படுவீர்களானால் நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டவர்கள் அல்ல. (கலா.5:18) ஏனென்றால் சத்திய ஆவியானவர் வரும்போது உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். (யோ.16:13) ஆவியின் கனி அனைத்தும் உங்களிடம் காணப்படும். (கலா.5:22-26) நீங்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்கள். (ரோ.8:14) நான் ஒரு குடும்பத்தை அறிவேன். அந்த குடும்பத்தில் உள்ள ஒரு பெண் தவறான பாதையில் சென்று தான் விரும்பின ஒரு நபரை சமுதாயம் விட்டு சமுதாயம் மாறி திருமணம் செய்து குழந்தை குட்டிகளுடன் இந்நாட்களில் பிரிந்து வாழ்கிறாள். ஆனாலும் அவள் தன் குடும்பத்தாரின் மேல் உள்ள பாசத்தால் குடும்பத்தில் உள்ள தன்னுடன் பிறந்தவர்களுக்கு துணிமணிகள் எடுத்துக் கொண்டு ஒரு காலக்கட்டத்தில் அவர்களை காணவந்தாள். தாயார் அந்த மகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த பெண் மிக்க மனகவலையுடன் திரும்பி சென்று விட்டாள். ஆனால் அந்த தாயார் தன்னைத்தானே ஒரு பெரிய பக்தியுள்ள பெண்மணி போல் காட்டிக்கொள்வார்கள். வேதவாசிப்புக்கு குறைவில்லை. ஜெபத்திற்கு குறைவில்லை. கணவன் மற்றும் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் குறைவில்லை. ஆனாலும் அந்த தாயாரிடம் ஒரு குறைவு உண்டு. பிறரை மன்னிக்கும், தன் மகளை மன்னிக்கும் அன்பில் குறைவு உண்டு. இதுகுறித்து அப்.பவுல்: அன்பு எனக்கிறாவிட்டால் நான் ஒன்றும் இல்லை. அன்பு இருமாப்பாயிராது. இந்த தாயின் இருமாப்புதான் தன் மகள் மேல் உள்ள வெறுப்புக்கு காரணம். கெட்ட குமாரனுடைய தகப்பனின் அன்பை பாருங்கள். இளைய மகன் தன் ஆஸ்திகளை எல்லாம் பங்கு போட்டு தன்னுடையதை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான். உல்லாசமாக வாழ்ந்தான். பணம் முழுவதும் செலவழிந்து போய் விட்டது. பன்றி தின்கிற தவிடு கூட அவனுக்கு ஆகாரமாக கிடைக்கவில்லை. அந்த நிலையில் மனந்திரும்பினான். தகப்பனிடம் வந்தான். தகப்பன் அவனை ஏற்றுக்கொண்டு விருந்து செய்து அவனை உபசரித்து தன்னுடன் சேர்த்துக்கொண்டான். அதுதான் அன்பு. நாம் நம்முடைய வாழ்க்கையில் நம்மிடத்தில் அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூற வேண்டும். நம்மிடத்தில் உள்ள பாவமே நாம் பிறரிடத்தில் அன்பு காட்டாதபடிக்கு நம்மை தடை செய்கிறது. பரிசுத்த ஆவி எங்கு உண்டோ அங்கு தெய்வீக அன்பு உண்டு. நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. (ரோ.5:5) நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறதினாலும் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும் படிக்கு ஆதி முதல் தேவன் உங்களை தெரிந்துக்கொண்டார். (2தெச.2:13) ஆக தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் மத்தியில் தான் அன்பு குடிகொண்டிருக்கும். அன்பு ஆவியானவருடைய கிரியை (ரோ.15:32)

**44. ஒரு மனிதனின் ஆத்தும இரட்சிப்பு தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதலின் அடிப்படையில் அமைந்துள்ளது.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என வேதவாக்கியம் கூறுகிறது. (அப்.16:31) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்று நாட்களுக்கு பின் உயிர்தெழுந்தார். அதுதான் விசுவாசம். ஆனால் இந்த விசுவாசத்தை உங்களில் தொடங்குகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (எபி.12:1) அவர்தான் விசுவாசத்தை உங்கள் இருதயத்தில் தொடக்க வேண்டும். உங்களுக்குள் விசுவாசத்தை கொண்டுவர உங்கள் முயற்சி பலன் அளிக்காது. அவரே விசுவாசத்தை கொண்டு வர வேண்டும். ஆக இரட்சிப்பு கர்த்தருடையது Salvation belongeth unto the Lord (சங்.3:8, யோனா.2:9) அப்படியானால் யார் இரட்சிக்கப்பட கூடும்? (லூக்.18:26) யார் தான் ஆத்தும இரட்சிப்பை பெறுவார்கள்? ஆத்தும இரட்சிப்பு மனுஷரால் கூடாது. ஆனால் அது தேவனால் கூடும். (லூக்.18:27) ஏனென்றால் பூமியின் நடுவில் இரட்சிப்புகளை செய்து வருகிறவர் தேவன். (சங்.74:12) God is working Salvation in midst of the earth. ஆதலால் இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு. (எபே.2:8) இது ஒருவனுக்கு தேவன் கொடுக்கும் தானம். இதில் நாம் மேன்மை பாராட்ட ஒன்றுமேயில்லை. நம்மேல் வைத்துள்ள தயவினால், இரக்கத்தினால் தேவன் ஆத்தும இரட்சிப்பை நமக்கு கொடுக்கிறார். நான் இன்னாரால் இரட்சிப்புக்குள் வழிநடத்தப்பட்டேன் அல்லது நான் இன்னாரை இரட்சிப்புக்குள் வழிநடத்தினேன் என்று அநேகர் தங்களை குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். இது தவறு. யாரும் எவருக்கும் இரட்சிப்பை கொடுக்க முடியாது. இது தேவனுடைய ஈவு, இரக்கம், தயவு Salvation is the gift of God. ஆனால் தேவனுடைய இந்த இரட்சிப்பு அவருக்கு பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறது. (சங்.85:9) இந்த இரட்சிப்பை பெற நாம் தேவனுக்கு பயபட வேண்டியது அவசியம். நீ கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் என்று நீயே உன்னைக்குறித்து சாட்சி கொடுத்தால் போதாது. தேவன் நீ கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் என்று சாட்சி கொடுக்க வேண்டும். தேவன் ஆபிரகாமை குறித்து : நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று அறிந்திருக்கிறேன் என்றார். (ஆதி.22:12) மனுஷன் மனுஷனைக்குறித்து சாட்சி கொடுத்தால் எடுபடாது, நிலைநிற்காது. ஏனென்றால் மனுஷர்கள் யாவரும் பொய்யர். (ரோ.3:4) பரிதானத்திற்காக முகஸ்துதிக்காக சாட்சி கொடுப்பவர்கள் உண்டு. ஆதலால் உங்களை குறித்து தேவனே சாட்சி கொடுக்க வேண்டும். அது நீதியுள்ள சாட்சியாக இருக்கும். ஆக தேவ கிருபை ஒருவனுக்கு இரட்சிப்பை அளிக்கிறது. (தீத்.2:11) Grace of God that bringeth Salvation. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு தேவன் நம்மை தெரிந்துக்கொண்டார். ஆக ஒருவனுடைய இரட்சிப்பு தேவனுடைய தெரிந்துக்கொள்ளுதலின் அடிப்படையில் உள்ளது. God hath chosen you to salvation. (2தெச.2:13) இதைக்குறித்துதான் இயேசு : நீங்கள் என்னை தெரிந்துக்கொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்துக்கொண்டேன் என்கிறார். (யோ.15:16) வெண்ணிற ஆடை அணிந்து கொண்டு, பரிசுத்த வேதாகமத்தை கரங்களில் எடுத்துக்கொண்டு, கழுத்தில் ஒரு சிலுவை சின்னத்தை மாட்டிக்கொண்டு, தனது பெயருக்கு முன்பின் பல பட்டங்களை போட்டுக்கொண்டு ஊர்வலம் வருவதால் அந்த நபர் இரட்சிப்பை பெற்றவன் என்று கூற முடியாது. வெண்ணிற ஆடை இரட்சிப்புக்கான அடையாளம் இல்லை. இரட்சிப்புக்கு ஆடை அல்ல, நாமம் தான் முக்கியமானது. **நமது இரட்சிப்புக்காக கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமம் இல்லை. பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்திற்குரியவர் ஒருவர் இருக்கிறார். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரலேயன்றி (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற நாமமேயல்லாமல்) வேறொரு நாமம் (பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமம்) கட்டளையிடப்படவும் இல்லை. (அப்.4:42) ஒருவனுடைய இரட்சிப்புக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமம் கட்டளையிடப்பட்டுள்ளதாக கூறுகிறவர்கள் வேதவாக்கியங்களை கற்றறியாதவர்கள். அவர்கள் வேதபுரட்டர்கள். இவர்கள் ஒருவனை சத்தியத்திலிருந்து திசைதிருப்பும் பிசாசின் கூலியாட்கள். அப்.4:12 யை நித்திய ஜீவனுக்கு என்று நியமிக்கப்பட்டவர்கள்தான் விசுவாசிப்பார்கள் (அப்.13:48). சத்திய வசனம் இரட்சிப்பின் சுவிசேஷம். (எபே.1:13) இரட்சிப்பின் சுவிசேஷம் உன்னுடைய, நீ நம்பியிருக்கும் திரித்துவ ஸ்தாபன சபைகளின் சுவிசேஷம் அல்ல.**

45. இரட்சிப்புக்கு சில ஒழுங்கு முறைகள் உண்டு. சமாதானத்தைக்கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்க ஒருவன், ஸ்தாபன சபைகளால் அல்ல, மாறாக தேவனால் அனுப்பப்பட வேண்டும். அவன் பிரசங்கிக்க வேண்டும். அவன் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும். சத்திய வசனத்தை அவன் பிரசங்கிக்க வேண்டும். அவன் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும்.

(ரோ.10:15, 1பேது1:12) உங்களுடைய சபையின் கோட்பாடுகளை வைத்துக்கொண்டு பிரசங்கிக்க முடியாது. ஒருவர் பிரசங்கித்ததின் கருத்துக்களைக் கொண்டுவந்து பிரசங்கிக்க முடியாது. அவன் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையோடு பிரசங்கிக்க வேண்டும். அப்பொழுது சத்திய ஆவி பிரசங்கியை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும். (ரோ.8:32) திரித்துவ ஸ்தாபன சபைகள், அதன் ஊழியக்காரர்கள் உங்களை ஒருக்காலும் சத்தியத்திற்குள் வழிநடத்த முடியாது. நீங்கள் உங்கள் பாவக்கட்டிலிருந்து அவர்கள் உபதேசத்தைக் கேட்டு விடுதலையாகவும் முடியாது. நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, அவர் உன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார் என்று விசுவாசி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள், அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். (மாற்.16:16, அப்.2:38)

46. முக்கியமான அடுத்த காரியத்தை கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்பை பெற வேண்டும். (அப்.10:43) பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்பட்ட நாமம் பிதா குமாரன் பரிசுத்த ஆவி அல்ல. மாறாக பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமகரனராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான். (அப்.2:38) அன்று ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களையே கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். ஆனாலும் சிலர் திருவசனத்திற்கு கீழ்படியாதிருந்து இடறுகிறார்கள். அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். (1பேது.2:8) நிச்சயமாக இவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு உண்டு. ஏனென்றால் இதை விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுகிறான். (மாற்.16:16) ஆக ஆத்தும இரட்சிப்புக்குரிய போதகம் ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி இங்கு உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆசீர்வாதமும் சாபமும் உங்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. (உபா.11:26) கற்பனைகளுக்கு, வேத உபதேசங்களுக்கு கீழ்படிதல் ஆசீர்வாதம். (உபா.11:27) அதாவது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிதல் ஆசீர்வாதம். கீழ்படியாமை சாபம். (உபா.11:28) தேவனுடைய வார்த்தையை நிராகரிப்பது தான் சாபம். திரித்துவ ஸ்தாபன சபைகள் யாவும் சாபத்திற்குள்தான் கிடக்கிறது.

47. தேவத்துவத்தில் மூவர், மூவரில் ஒருவர், ஒருவரில் மூவர் போன்றவை லௌகிக சம்பந்தமான அதனாசியு விசுவாச பிரமாணம். இது கிறிஸ்தவர்கள் மீது சாபத்தையே கொண்டு வந்துள்ள ஒரு விசுவாசப்பிரமாணம். **மனந்திரும்பி பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்ற விசுவாச முழக்கம் பிசாசுக்கடுத்ததே. அது சாபத்தைதான் கொண்டுவரும்.** கவனியுங்கள். ஆசீர்வாதத்திற்கும் சாபத்திற்கும் அதாவது இரக்கத்திற்கும் நியாயத்தீர்ப்புக்கும் இடையே ஒரு கோடு உள்ளது. அது எச்சரிப்பின் கோடு. அந்த கோட்டில் கொண்டுவந்து தான் நான் உங்களை நிறுத்தியுள்ளேன். நீங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ள, எழுதப்பட்டுள்ள எச்சரிப்பை / எச்சரிப்பின் கோட்டை தாண்டினால் உங்களுக்கு சம்பவிப்பது மரணம் தான். இதை உங்களது ஸ்தாபன சபைகள், அதில் பேர் பிரபலமானவர்கள், இண்டர்நேஷ்னல் பிரசங்கிகள் யாரும் தடுக்கவே முடியாது, முடியவே முடியாது. இதற்கு வேதவாக்கியங்களிலிருந்து ஒரு எடுத்துகாட்டை எழுத விரும்புகிறேன். ஒரு வேலைக்காரன் நான் என் எஜமானை மிகவும் நேசிக்கிறேன். எனக்கு அவனிடமிருந்து விடுதலை பெற்றுபோக மனதில்லை என்று மனப்பூர்வமாக சொல்வானானால் அவன் எஜமான். அவனை கதவின் அருகேயாவது, கதவு நிலையின் அருகேயாவது சேரப்பண்ணி அவன் காதை கம்பியினாலே குத்தக்கடவன். பின்பு அவன் என்றென்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக்கொண்டிருக்க கடவன். (யாத்.21:5,6) அதன்பின் அவனுக்கு மீட்பு கிடையாது. அவன் தன் அடிமைத்தனத்திலே மரிக்க வேண்டும். அதுபோன்று தான் உங்கள் நிலையும். ஆத்தும இரட்சிப்புக்கடுத்த காரியங்களை எழுதியுள்ளேன். உங்கள் இரட்சிப்புக்குரிய மார்க்கத்தையும் கொடுத்துள்ளேன். நீங்கள் திரித்துவ உபதேசத்தில் உங்கள் காது குத்தப்பட விரும்பினால் பின் அதிலிருந்து மீளவே முடியாது. எவரும் உங்களை சாத்தானுடைய கட்டிலிருந்து விடுதலைப் பண்ண முடியாது. ஆதலால் காலம் இருக்கும்போது இரட்சிப்பை ஆதாயப்படுத்திக்கொள்ளுங்கள். மற்றபடி ஏசாவின் நிலைதான் உங்களுக்கும் நேரிடும். நீங்கள் பாவத்திலே மாளவேண்டுமா? அல்லது இரட்சிக்கப்பட வேண்டுமா? அது உங்கள் சுயாதீனம், உங்கள் முடிவு. ஜீவன், மரணம் இரண்டும் நீங்கள் இந்த நிருபத்தை வாசிக்கும் பொழுது உங்கள் முன் உள்ளது. தெரிந்துக்கொள்ளுதல் உங்களுடையது. ஆத்தும இரட்சிப்பு மிகவும் அருமையானது, மிகவும் விலையேறப்பெற்றது. For the Redemption of Soul is precisious.

48. அப்.பவுல் மார்ஸ் மேடை சொற்பொழிவில் அத்தேனேரே மக்களைப் பார்த்து : அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போல் இருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்கும் உள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். ஒரு நாளை குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்றான். மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்து அவர்கள் கேட்டபோது சிலர் இகழ்ந்தார்கள். சிலர், நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம் என்றார்கள். (அப்.17:30-32) இங்கு நீங்கள் மனந்திரும்ப வேண்டுமென்ற கட்டளை பூமியின் ஜனங்கள் யாவருக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. அது இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஜனங்களுக்கு மாத்திரம் அல்ல, முஸ்லீம், இந்து மார்க்கத்தாருக்கு மாத்திரம் அல்ல. பூமியில் எந்த இடத்தில் இருந்தாலும் அந்த ஜனங்கள் எப்படி அழைக்கப்பட்டாலும் சரி, அனைவரும் மனந்திரும்ப வேண்டும். சென்ற காலங்களில் அவர் சகல தேசத்தாரையும், சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழியிலே நடக்கவிட்டிருந்தார். (அப்.14:16) ஆனால் இப்பொழுதுதோ சகல தேசத்தாரும் அதில் ஜனங்களும் மனந்திரும்ப வேண்டும் என்கிறார். நாம் ஒன்றைக்குறித்து அறியாதிருந்த காலத்தில் (Times of ignorance) தேவன் நாம் செய்த தவறுகளை, அக்கிரமங்களை, அநியாயங்களை கண்டுக்கொள்ளவில்லை (God overlooked) ஆனால் இப்பொழுது எங்குமுள்ள மனுஷரெல்லாரும் (All men everywere) மனந்திரும்ப வேண்டுமென்று (To repent) கட்டளையிடுகிறார். (Commanding) அன்று யூதர்கள் அறியாமையினால் ஜீவதிபதியை கொலை செய்தார்கள். (அப்.3:15-18) பவுல் அறியாமையினால் சபையை துன்பப்படுத்தினான். (1தீமோ.1:13) மனந்திரும்பின போது அழிக்கத்தேடிய விசுவாசத்தை பிரசங்கிக்கலானான். (கலா.1:28) மனந்திரும்புதலைக் குறித்து, பாவமன்னிப்பைக் குறித்து, அன்றுபோல் இன்றும் ஒரு கூட்டத்தார் இகழ்கிறார்கள், ஒரு கூட்டத்தார் இன்னொரு வேளை பார்க்கலாம் என்கிறார்கள. ஒரு கூட்டத்தார் நாங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்பை பெற்று இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என வீண் பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள். நாங்கள் பூர்வீக கிறிஸ்தவர்கள் கர்த்தர் எங்களை அதிகம் அதிகமாக இப்பிரபஞ்சத்தில் ஆசீர்வதித்திருக்கிறார், அது நாங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதற்கு அடையாளம் தானே. ஆதலால் அது போதும் என்கிறார்கள். இவ்வாறாக ஒவ்வொருவரும் தங்களுக்கு சாதகமாக ஒன்றைக்கூறி மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் உதாசினப்படுத்துகிறார்கள். ஆதலால் ஒன்றை மட்டும் இங்கு கூற விரும்புகிறேன், தேவன் பொறுமையாய் இருந்த முற்காலத்தில் நீங்கள் செய்த அக்கிரமங்களையும், மீறுதல்களையும், பாவங்களையும் பொருத்துக்கொண்டார். (ரோ.3:25) ஆனால் இப்பொழுது அப்படியல்ல. நீங்கள் மாம்ச இச்சையின்படி நடந்து மாம்சமும் மனதும் விரும்பி செய்த அனைத்திற்கும் மனந்திரும்ப வேண்டும், பாவமன்னிப்பை பெற வேண்டும் இனி காலம் செல்லாது என்று கட்டளையிடுகிறார். ஒரு பக்தன் இது குறித்து மனந்திரும்பாத 100 வயது வாழ்வைவிட மனந்திரும்பிய 100 நாள் வாழ்வே சிறந்தது என்கிறான்.

49. இப்பொழுது கவனியுங்கள் : மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிரசங்கிக்கப்பட வேண்டும். இதை யார் கூறியது? இயேசு. (லூக்.24:47) இதை இயேசுவினிடமிருந்து கேட்ட சீஷர்கள் அவருடைய கட்டளையை நிறைவேற்றினாரா? இல்லையா? நிச்சயமாக நிறைவேற்றினார்கள். என்று? பெந்தெகொஸ்தே நாளன்று – எருசலேமில். பேதுரு பெந்தேகொஸ்தே நாளன்று பதினொருவரோடும் கூட நின்று திரளான ஜனங்கள் கூடி வந்திருக்கையில், அவனது பிரசங்கத்தை கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான். (அப்.2:38) அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினம் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற்றுக்கொண்டார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்.2:37-42) ஆக இயேசு கிறிஸ்துவின் கட்டளையின் படி மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட்டது. எந்த நாமத்தினால்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால். ஏனென்றால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமகரணர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஜனங்கள் கீழ்படிந்தார்கள்.(அப்.2:41) சபை ஆரம்பமானது. (அப்.2:47) **நம் மத்தியில் காணப்படும் திரித்துவ ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபை உண்மையான பெந்தெகொஸ்தே சபை அல்ல. பெந்தெகொஸ்தே என்பது ஒரு ஸ்தாபனம் அல்ல. அது ஒரு உன்னத அனுபவம். இந்த அனுபவம் தனிப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் உரியது.** இந்த சபைக்கு தலை கிறிஸ்து. மனுஷர்கள் இந்த சபைக்கு தலைமை பொறுப்பை ஏற்க முடியாது. நம்முடைய இரட்சிப்புக்கு முதற்படி மனந்திரும்புதல். அடுத்து மறுஜென்ம முழுக்கினாலும்

பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நாம் இரட்சிக்கப்படுகிறோம் (தீத்.3:4,5) கவனியுங்கள். மறுஜென்ம முழுக்கிற்கு முன்பு மனந்திரும்புதல் தேவை. (அப்.2:32) இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறவர் இயேசு. (அப்.4:31) புறஜாதியினருக்கும், ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் அருளுகிறார். (அப்.11:18) ஆக மனந்திரும்புதல் நம்முடைய சுயமுயற்சியினால் ஆகாது. அதையும் தேவனே அருளச்செய்ய வேண்டும்.

**50. மனந்திரும்புதல் :** மனந்திரும்புதல் என்றால் என்ன? இதனுடைய கிரேக்க சொல் மெற்றனாயா Metanoia. இதன் பொருள் பின் எண்ணம். ஒருவன் தான் சென்றுவரும் வழி தன்னுடைய கோட்பாடுகள், தன்னுடைய கொள்கைகள், தன்னுடைய நடத்தைகள், தன்னுடைய கிரியைகள், தன்னுடைய எண்ணங்கள், தனது சிந்தனைகள், தனது வாழ்க்கையின் குறிக்கோள், இலட்சியம் அனைத்தும் தவறானது. வேதவாக்கியங்களுக்கு முரணானது. ஆதலால் அது பாவமானது என்று தன் உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து, அதற்காக மனஸ்தாபப்பட்டு மனங்கசந்து ஒரு பின் எண்ணத்திற்குள்ளாகிறான். இது அவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் ஒருமாற்றம். ஒருவனுக்கு தனது தவறுகளைக் குறித்து தான் செய்த அக்கிரமங்கள் குறித்து தன் பாவச்செயல்கள் குறித்து தான் செய்த மீறுதல்கள் குறித்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒரு உணர்வு ஏற்படாமல் அவன் மனந்திரும்ப முடியாது. பின் கிடைத்த அறிவினால் முன் கொண்டிருந்த கருத்தில் மாற்றம் செய்து, அதினால் ஏற்படும் பின்மாற்றம் மனந்திரும்புதல் ஆகும். பழைய வாழ்க்கையின் குறிக்கோள், போக்கு அனைத்தையும் வெறுத்து தன்னை தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல் மனந்திரும்புதலாகும். அதே நேரத்தில் நாம் ஒன்றை மறந்துவிடவும் கூடாது. அது என்னவென்றால் குற்ற உணர்வு பெற்ற அனைவரும் மனந்திரும்புவதும் கிடையாது. குற்ற உணர்வு உள்ளத்தில் உண்டு. ஆனால் மனந்திரும்புதல் இல்லை. ஆக குற்ற உணர்வு மனந்திரும்புதல் ஆகாது. இதற்கு சில எடுத்துகாட்டுகள் தருகிறேன்.
**(அ) பேலிக்ஸ் :** இவனிடத்தில் குற்ற உணர்வு இருந்தது. ஆனாலும் மனந்திரும்புதல் இல்லாமல் போய்விட்டது. இவன் யூதேயாவின் தேசாதிபதி. இவன் பவுலை அழைப்பித்து இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தைக்குறித்து பவுல் சொல்லக்கேட்டான். பவுல் நீதியையும், இச்சை அடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து பேசுகையில் இவன் நடுங்கினான், பயமடைந்தான். குற்ற உணர்வு அடைந்தான். ஆனாலும் அவன் மனந்திரும்பினானா என்றால் இல்லை. பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு மனந்திரும்புதல் அல்ல. பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு இல்லாமல் ஒருவனும் மனந்திரும்ப முடியாது. அதே நேரத்தில் குற்ற உணர்வு பெற்ற அனைவரும் மனந்திரும்பினதும் கிடையாது. பவுல் விடுதலை செய்ய அவனிடமிருந்து பேலிக்ஸ் லஞ்சம் எதிர்பார்த்தான். (அப்.24:24-27)
**(ஆ) கொர்நேலியு :** சன்மார்க்க ஜீவியம் மனந்திரும்பின வாழ்கையல்ல. இத்தாலியா பட்டிணத்திலே நூற்றுக்கு அதிபதி. இவன் தேவபக்தியுள்ளவன். தேவனுக்கு பயந்தவன். ஜனங்களுக்கு மிகுந்த தானதர்மங்களை செய்துவந்தான். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். இவனிடம் ஜெபஜீவியம், சன்மார்க்க ஜீவியம் இருந்தது. (அப்.10:2) ஆனாலும் மனந்திரும்பாத, இரட்சிக்கப்படாத ஒரு வாழ்க்கை வாழ்ந்து வந்தான். இவன் இரட்சிக்கப்படுவதுக்கேதுவான வார்த்தைகளை பேதுருவிடமிருந்து கேட்க வேண்டியவனாய் இருந்தான். (அப்.11:14) ஒருவனுடைய சன்மார்க்க ஜீவியம் மனந்திரும்பின வாழ்க்கையல்ல. சன்மார்க்க ஜீவியம் என்பது ஒருவனுடைய சுய நீதியாகும். இது நியாயப்பிரமாணத்திலிருந்து வருவதாகும். (பிலி.3:9) இதுகுறித்து நீங்கள் உபா.9:4-6 ல் தியானிக்கலாம். தங்கள் சுய நீதியினால் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. நீ உலகில் ஒரு பெரிய பதவியில் இருக்கலாம், ஊழியத்தின் பாதையில் ஒர் உயர்ந்த நிலையில் இருக்கலாம். இதெல்லாம் உன் சுய நீதியினால் உண்டானது அல்ல. மாறாக இது தேவனுடைய ஈவு. நம்முடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தைபோல் இருக்கிறது. (ஏசா.64:6) இப்பொழுது தானியேல் விண்ணப்பத்தை கவனியுங்கள் : நாங்கள் எங்கள் நீதிகளையல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களை நம்பி எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாக செலுத்துகிறோம். ஆக பிரியமானவர்களே ஒருவனுடைய சுயநீதி மனந்திரும்பினவன் என்பதை எடுத்துக்காட்டாது. நாம் நம்முடைய சுயநீதியை நிலை நிறுத்த தேடினோமானால், தேவநீதிக்கு கீழ்படியாதவர்களாய் இருப்போம். (ரோ.10:3) நான் ஆராதனைகளுக்கு ஒழுங்காக போகிறேன். நான் தசமபாக காணிக்கைகளை ஒழுங்காக கிரமமாக செலுத்துகிறேன். காலை மாலை ஜெபிக்கிறேன் என்ற பெருமைகள் எல்லாம் பரிசேயனுடைய சுயநீதி. (லூக்.18:11-13) கவனியுங்கள். தேவன் நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் நம்மை இரட்சிக்கவில்லை. (தீத்.3:5) **ஆக ஒருவனுடைய சன்மார்க்க ஜீவியம் அவன் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டான் என்பது அல்ல. இன்று நம் மத்தியில் இப்படிபட்டதான சன்மார்க்க ஜீவியத்தில் உள்ள அநேக கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படாத**

**வாழ்கை வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை இரட்சிக்கப்பட்டவர்கள் என அழைத்துக்கொள்கிறார்கள். அதுதான் வஞ்சிப்பு.**

**(இ)சத்தியத்தை அறியும் அறிவு:** வேதவாக்கியங்களில் உள்ள சத்தியத்தை அறியும் அறிவு மனந்திரும்புதல் அல்ல. நம்மில் பலர் சத்தியத்தை குறித்த அறிவு உடையவர்களாக பேசிக்கொள்கிறார்கள். சத்தியத்தின்படி நடந்துக்கொள்வதாக தங்களை தாங்களே தேற்றிக்கொள்கிறார்கள். இது ஒருவன் மனந்திரும்பின வாழ்க்கைக்கு ஆதாரம் இல்லை. ஏனென்றால் பிசாசு தேவன் ஒருவன் உண்டு என்று விசுவாசிக்கிறான். (யாக்.2:19) இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே என அறிக்கையிடுகிறான். (மாற்.1:7) நீர் தேவனுடைய குமாரனானால் தாழக்குதியும். ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைகுறித்து கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மை கைகளினால் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறதே என்றான். (மத்.4:6) கவனியுங்கள். **சாத்தானும் சத்தியத்தை நன்கு அறிந்திருந்தான். அவனுடையவர்கள் நம் மத்தியில் நன்கு சத்தியத்தை அறிந்தவர்கள், போதிக்கிறவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் அதிகம் உண்டு. இவர்களெல்லாரும் மனந்திரும்பி, பாவமன்னிப்பை பெற்று இரட்சிக்கப்பட்டவர்கள் என்று கூறமுடியாது. அப்படியிருக்குமானால் இன்று நம் மத்தியில் இரண்டு மனைவியை கொண்டவர்கள் எப்படி பாஸ்டராயிருக்க முடியும்? இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவர்கள் எப்படி பாஸ்டராயிருக்க முடியும்? எப்படி ஒரு பாஸ்டர் தன் மணைவியை பொது ஸ்தலங்களுக்கு வேலைக்கு அனுப்பி, அவளுடைய சம்பாத்தியத்தில் இவன் குடும்பம் நடத்த முடியும்? அவனுடைய சம்பாதியத்தில் தானே குடும்பத்தை போஷிக்க வேண்டும். அதுதானே தேவநியமம். ஆக இவர்கள் எல்லாரும் சத்தியத்தை அறிந்தவர்கள் தான். இல்லெயென்று கூற முடியாது. ஆனால் மனந்திரும்பின வாழ்க்கையன்றி, இரட்சிப்பின் அனுபவமின்றி, தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள்.**

**(ஈ)வரங்கள் :** வரங்களை பெற்றிருப்பது, அற்புதங்களை நடப்பிப்பது, ஒரு பெரிய சபையின் பாஸ்டராகயிருப்பது மனந்திரும்பின, இரட்சிக்கப்பட்ட வாழ்க்கையை கொண்டவர்கள் என கூற முடியாது. ரோமர்.11:29 இவ்வாறாக கூறுகிறது. (For the gifts and callings of God are without repentance) ஒருவன் மனந்திரும்பாத வாழ்க்கையில் அழைக்கப்பட்டவனாகயிருந்து வரங்களை உடையவனாகயிருப்பான். வரங்களை உடையதும், அற்புதங்களை நடப்பிப்பதும் ஒருவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் என்பதற்கு அடையாளம் அல்ல. அப்.யோவான் இயேசுவிடம் நம்மை பின்பற்றாத ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறான். அவன் நம்மை பின்பற்றாததால் அவனை தடுத்தோம் என்றான். கவனியுங்கள் **இயேசு கிறிஸ்துவை பின்பற்றாதவனும், அவருடைய நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறான். இன்றும் நம் மத்தியில் இப்படிபட்டவர்கள் அநேகர் உண்டு.** இயேசு யோவானை நோக்கி: அவனை தடுக்க வேண்டாம் என்றார், ஏனென்றால் என் நாமத்தினாலே அற்புதங்கள் செய்கிறவன் என்னைக்குறித்து எளிதில் தீங்கு சொல்ல மாட்டான். (மாற்.9:38-40) பாருங்கள் இயேசுவை சாராதவர், மனந்திரும்பின வாழ்க்கையில்லாதவர், இரட்சிக்கப்படாதவர் இயேசுவின் நாமத்தில் அற்புதங்களை நடப்பித்தார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இந்நாட்களில் நமது மத்தியில் குறைவு இல்லை. எங்கும் பரவியிருக்கிறார்கள். ஆனால் இப்படிபட்டவர்களைக்குறித்து இயேசு : கர்த்தாவே கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா. உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்தினோம் அல்லவா. உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களை செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது நான் (இயேசு) ஒருக்காலும் உங்களை அறியவில்லை ( I never knew you) அக்கிரமசெய்கைகாரர்களே என்னைவிட்டு அகன்று போங்கள் என்றே சொல்லுவேன் என்றார். (மத்.7:22-23) இதிலிருந்து நாம் கற்றுக்கொண்டது என்ன? மனந்திரும்பி பாவமன்னிப்பை பெற்று இரட்சிக்கப்படாதவர்களும் தீர்க்கதரிசனம் உரைக்கலாம். வியாதியஸ்தர்களை சுகமாக்கலாம், அற்புதங்கள் செய்யலாம். ஆனாலும் இயேசு ஒருக்காலும் அவர்களை அறியவில்லை என்பார். திரித்துவ ஸ்தாபனத்தில் அற்புதங்கள் செய்கிறவர்களின் நிலை இதுதான்.

**(உ) வேதபாண்டித்தியம், கல்வி, பதவி :** ஒருவனுடைய வேதபாண்டித்தியம், அவன் கற்ற, பெற்ற கல்வி அதனால் பெற்ற பதவிகள் அவன் மனந்திரும்பினவன் என்று கூறுவதற்கு அடையாளம் அல்ல. கவனியுங்கள். கமாலியேல் : இவன் சகல ஜனங்களாலும் கனம் பெற்ற ஒரு நியாயசாஸ்திரியாக இருந்தான். (அப்.5:34) அப்.பவுல் இவன் பாதத்தருகே வளர்ந்து வந்தான். (அப்.22:2) ஆனாலும் கமாலியேல் மனந்திரும்பாத, இரட்சிக்கப்படாத ஒரு வாழ்க்கையில்தான் இருந்தான். அவனுடைய படிப்பு, அந்தஸ்து, செல்வாக்கு அவனை மனந்திரும்புதலுக்குள் வழிநடத்த வில்லை. இன்று பல விதமான பட்டங்களை M.Th, B.Th, Rev. Dr. STM, Cardinal, Chief Pastor போன்ற பட்டங்களை தங்கள் பெயருக்கு முன் பின் போட்டுக்கொள்கிறார்கள். இதைக்கொண்டு இவர்கள் மனந்திரும்பின, இரட்சிக்கப்பட்ட வாழ்கை வாழுகிறார்கள் என்று கூற முடியாது.

இவர்கள் உலகத்தாரைப் போன்று பிழைப்புக்காக வேதாகம கல்லூரிகளில் ஒரு கல்வி கற்று, அதைக்கொண்டு கர்த்தர் கொடுத்த ஊழியம் என பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யைக்கூறி, தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள், மனந்திரும்பாத ஒரு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

**(ஊ) கற்பனைகளின்படி நடப்பது மற்றும் ஐசுவரியம் :** கற்பனைகளின்படி நடந்து, ஐசுவரியத்தில், ஆடம்பரத்தில் சுகபோகமாக வாழ்வது ஒரு மனந்திரும்பின வாழ்க்கைக்கு அடையாளம் அல்ல. பாருங்கள் வாலிபன் ஒருவன் சிறு வயது முதல் கற்பனைகளின்படி நடந்து வந்தான். இயேசு அவனிடம் : நீர் பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரர்களுக்கு கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும் என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாய் இருந்தபடியினால், துக்கம் அடைந்தவனாய் போய்விட்டான். (மத்.19:17-24) பாருங்கள் ஒருவனுடைய ஐசுவரியம் அவன் மனந்திரும்புதலுக்கு ஒரு தடையாகயிருக்கிறது. ஆம். ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிது. ஐசுவரியவான்களாக உங்கள் மத்தியில் காணப்படும் ஊழியக்காரர்கள் அனைவரும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிது, அரிது. நான் ஒரு காலக்கட்டத்தில் WBGNS சகோ. யோவேல் பரமானந்தத்திடம், சகோதரனே Be careful, ஏனென்றால் ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது இல்லை என்று வேதம் கூறுகிறது என்று சொல்லி அவரை எச்சரித்த ஞாபகம் உண்டு.

**(எ)ஞானஸ்நானம் :** ஒருவன் பெற்றுள்ள ஞானஸ்நானம் அவன் மனந்திரும்பினதற்கு அடையாளம் அல்ல. சீமோன் ஒரு மாயவித்தைக்காரன். பிலிப்பு பிரசங்கித்ததைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றான். பேதுருவிடம் பணத்தைக் கொண்டுவந்து நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியை பெரும்படியான அதிகாரம் வேண்டும் என்றான். தேவனுடைய வரத்தை பணத்தினால் சம்பாதிக்க நினைத்தான். கவனியுங்கள் இவன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாயில்லை. துர்குணம் அவனை ஆட்கொண்டிருந்தது. இன்றும் அநேகர் ஞானஸ்நானம் பெற்றாலும் அவர்களிடம் பழைய பாவ வாழ்க்கைதான் காணப்படுகிறது. முந்திய சுபாவங்கள் அவனை விட்டு விலகவில்லை. காரணம்? சரியான மனந்திரும்புதல் அவனிடம் இல்லை. மனந்திரும்புதல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வர வேண்டும். ஆதலால் தான் பேதுரு அவனிடம் மனந்திரும்பு என்று கூறினான். முதலில் அவன் சரியான வழியில் மனந்திரும்பவில்லை. (அப்.8:9-24) பொதுவாக இந்நாட்களில் வரங்களுக்காக அநேகர் உபவாசம் இருந்து ஜெபிக்கிறார்கள். வரங்களுக்காக நீங்கள் எந்தவிதமான முயற்சியும் எடுக்கத் தேவையில்லை. கவனியுங்கள். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியினுடைய அநுகிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்படுகிறது. ஆவியானவர் தமது சித்தத்தின்படியே (கவனியுங்கள் உங்கள் விருப்பு வெறுப்பின்படி அல்ல, சித்தத்தின்படியும் அல்ல) அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். (1கொரி.12:4,7,11) பொதுவாக ஊழியர்கள் வரங்களைப் பெற்று அதைக்கொண்டு பணம் சம்பாதிக்க, புகழ் சம்பாதிக்க நினைக்கிறார்கள். ஆதலால்தான் அவர்களிடம் மனந்திரும்புதல் காணப்படவில்லை. மனந்திரும்பாத நிலையில் ரோ.11:29 ன் படி இவர்களிடம் வரங்கள் கிரியை செய்கிறது.

**(ஏ)ஜெப வாழ்க்கை :** மனந்திரும்பின வாழ்க்கையில்லை. தியத்தீரா ஊராளும், இரத்தாம்பரம் விற்கிறவளும், தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் ஓய்வு நாட்களில் பட்டிணத்திற்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாக ஒரு இடத்தில் கூடி ஜெபிக்கும் கூட்டத்தை சேர்ந்தவளாயிருந்தாள். அவளிடம் நல்லதொரு ஜெபவாழ்க்கை காணப்பட்டது. ஆனாலும் அவள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுக்கவேண்டியவளாயிருந்தாள். (அப்.16:13-15) ஆக ஒருவருடைய ஜெபவாழ்க்கை அவர்களது மனந்திரும்பின வாழ்க்கை என கூறமுடியாது.

**(ஐ)பதவி :** ஜெபஆலயத்தலைவனும் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டியவனாயிருந்தான். இவன் அப்போஸ்தலனாகிய பவுலினால் ஞானஸ்நானம் பெற்றான். (அப்.18:8, 1கொரி.1:15) அன்று மாத்திரம் அல்ல இன்றும் அநேக பாஸ்டர்கள் மனந்திரும்பாத ஒரு வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டு தங்களை ஊழியக்காரனாக அழைத்துக்கொள்கிறார்கள். பொதுவாக பாஸ்டர்கள் அனைவரிடமும் பொருளாசை என்ற விக்கிரகாராதனை உள்ளது. பணத்திற்காகவே ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் ஊழியம் செய்ய வரவில்லை. ஊதியம் கொள்ளவே வந்துள்ளார்கள். வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் ஊழியம் என்ற பெயரில். அது எதற்காக? ஒரு கலெக்ஷன் பண்ணிவந்து இங்கு சுகபோகமான வாழ்க்கை வாழ்வதற்கு. ஆக இவர்கள் மனந்திரும்பாமலே கர்த்தருக்கென்று அவருடைய சித்தம் இல்லாது ஊழியம் செய்து இம்மைக்குரிய நன்மைகளுக்காக கர்த்தரைப் பற்றிக்கொண்டார்கள்.

**(ஒ) கிறிஸ்தவ குடும்பம் :** கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்த எவனும் நான் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறேன் என்று கூறமுடியாது. மனந்திரும்பாத ஒருவர், ஒரு

பெயர் கிறிஸ்தவனேயன்றி ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஒரு உண்மையான கிறிஸ்தவன் தன் வாயினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்க வேண்டும். (ரோ.15:3, 10:9) கவனியுங்கள். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும். ஆம், ஒருவன் விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்படைய வேண்டும்.

**(ஓ) தேவனுடைய ஈவு :** உண்மையான மனந்திரும்புதல் கர்த்தர் கொடுக்கும் ஈவு. நாம் எல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாகயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராய், நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. (எபே.2:1-9) கர்த்தாவே எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும் அப்பொழுது திரும்புவோம். (புல.5:21) என்னைத் திருப்பும் அப்பொழுது திருப்பப்படுவேன். நீரே என் தேவனாகிய கர்த்தர். (எரே.31:18) எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களை திருப்பிக்கொண்டு வாரும். உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களை திரும்ப உயிர்பிக்க மாட்டீரோ. கர்த்தாவே உமது கிருபையை எங்களுக்கு காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளச்செய்யும். (சங்.85:5-7) இயேசு : இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறவர். (அப்.5:31) ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல, புறஜாதிகளுக்கும் அருளிச்செய்தார். (அப்.11:18) **ஒருவனுக்கு கர்த்தருடைய ஆவியே பாவத்தைக்குறிக்கும், நீதியைக் குறிக்கும், நியாயத்தீர்ப்பை குறிக்கும் கண்டித்து உணர்த்தி மெய்யான மனந்திரும்புதலைக் கொண்டு வர வேண்டும். (ரோ.16:7-11)** முடிவாக மனந்திரும்புதல் தேவனுடைய ஈவு மற்றும் அது இயேசு கிறிஸ்து நாமத்திலே உள்ளது. (லூக்.24:47)

### 51. ஒருவனுடைய உண்மையான மனந்திரும்புதலுக்கு தேவையானது எது?

**(அ) மனஸ்தாபம் :** இது ஒருவனுடைய இரட்சிப்புக்கேதுவான, உண்மையான மனந்திரும்புதலைக் கொண்டு வருகிறது. கவனியுங்கள் : பேதுரு மனங்கசந்து அழுதான். (லூக்.22:62) பாவத்தைக் குறித்ததான மெய்யான உணர்வு அவனில் ஏற்ப்பட்டது. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சங்.32:5) நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1யோ.1:9) மெய்யான மனந்திரும்புதலுக்கு இருதயத்தில் நாம் குத்தப்பட வேண்டும். பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் இருதயத்திலே குத்தப்பட்டார்கள். அது மனஸ்தாபத்தைக் கொண்டு வந்தது. (அப்.2:37) இன்று போலிகளான பிரசங்கிமார்களின், ஊழியக்காரர்களின் பிரசங்கங்கள் யாவும், அதை கேட்கும் பொழுது ஜனங்கள் இருதயத்தில் குத்தப்படும்படியாகயில்லை. ஏனென்றால் பிரசங்கம் முழுவதும் ஆசீர்வாதங்ளைக் கொண்டதாகவே இருக்கிறது. பிரசங்கங்கள் ஜனங்களுடைய நேரப்போக்கிற்காக காணப்படுகிறது. இம்மைக்குரிய நன்மைகளை கொண்டதான வழிநடத்துதலாகவே உள்ளது. ஆயக்காரனுடைய பாவ அறிக்கையை கவனியுங்கள். அவன் தன் கண்களை வானத்திற்கு ஏறெடுக்கத்துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு, தேவனே பாவியான என்மேல் கிருபையாயிரும் என்றான். கவனியுங்கள். அவன் தன்னை பாவி என்று அறிக்கை செய்து மனஸ்தாபப்பட்டு தன்னை தாழ்த்தினான்.(லூக்.18:13,14) அதுதான் உண்மையான மனஸ்தாபம்.

**(ஆ) பாவ அறிக்கை :** தகப்பனே பரத்திற்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன். (லூக்.15:21) கெட்டக்குமாரன் துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். முடிவில் பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்கு கொடுக்கவில்லை. அப்பொழுதான் அவனுக்கு புத்தி தெளிந்தது. உண்மையான மனஸ்தாபம் உள்ளத்திலிருந்து எழுந்தது. பாவ அறிக்கை செய்தான். மனந்திரும்புதலுக்கு முன்பு பாவ அறிக்கை தேவைப்படுகிறது. பாவ அறிக்கை யாரிடத்தில்? பெந்தெகொஸ்தே பாஸ்டர்களிடத்திலா? கத்தோலிக்க சபை ஆயர்களிடத்திலா? அங்கு பெண்கள் சென்றால் பாலியல் தொல்லை செய்யப்படுகிறார்கள் என்பது இந்நாட்களில் உலகம் அறிந்த உண்மையாயிற்று. பாவ அறிக்கையானது பாலியல் தொல்லையாக மாறிவிட்டதே? இதற்கு காரணம் யார்? பாமர மக்கள் தானே! ஒரு மனிதன் இன்னொரு மனிதன்

செய்ய பாவத்தை மன்னிக்க முடியுமா? அவனே பாவியாக இருக்கும்பொழுது, உன் பாவத்தை மன்னிப்பது எப்படி? சற்று சிந்தித்து செயல்படுங்கள். மூடர்களாக இருக்காதீர்கள்.

**(இ) பாவத்தை விட்டு விலகுதல்:** ஒருவன் தான் செய்த பாவங்களை, மீறுதல்களை, அக்கிரமங்களை பாவ அறிக்கை செய்துவிட்டால் மட்டும் போதாது, முற்றிலுமாக அந்த பாவத்தைவிட்டு விலக வேண்டும். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிலகுகிறவனே இரக்கம் பெறுவான். (நீதி.28:13) என்னிடம் மாம்சத்தில் கிரியைகள் அனைத்தும் இருந்தது. அதனால் எத்தனையோ பாவங்கள் செய்து வந்தேன். இப்பொழுது அவைகளை தேவனிடத்தில் அறிக்கை செய்து விட்டுவிட்டேன். செய்த பாவங்கள் மீண்டும் என்னை தொடர்வதில்லை. அதுதான் உண்மையான மனந்திரும்புதல். இனி அந்த பாவங்கள் என்னை மேற்கொள்வது இல்லை. ஏனென்றால் அவைகளுக்கு நான் இனி அடிமையில்லை.

**(ஈ) பாவத்தை வெறுக்க வேண்டும் :** மாயவித்தைக்காரர்களாயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களை கொண்டுவந்து எல்லாருக்கும் முன்பாக சுட்டெரித்தார்கள். இவர்களுடைய மாயவித்தைக்கு ஒத்தாசையாக, உதவியாக இருந்த புஸ்தகங்கள் அனைத்தையும் தீயில் சுட்டெரித்தார்கள். அந்த அளவுக்கு பாவத்தை வெறுத்தார்கள். தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி பாவ அறிக்கையிட்டார்கள். (அப்.19:18,19) சிலர் குடிபழக்கத்தில் இருந்திருப்பார்கள். சிலர் பீடி, சிகரெட் புகைக்கும் பழக்கத்தில், சினிமா களியாட்டங்களை கண்டுகளிப்பதில் இருந்திருப்பார்கள். அவர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் அந்த பழைய பழக்கவழக்கங்களை முற்றிலும் வெறுக்கிறவர்களானார்கள். உண்மையான மனந்திரும்புதல் நம்முடைய எல்லா பழைய பொல்லாத வழிகளையும், நம்மை தீட்டுப்படுத்தின எல்லா கிரியைகளையும் நினைத்து நாம் செய்திருந்த நம்முடைய பொல்லாப்புகளின் நிமித்தமும் நமக்கு நாமே அருவருப்பாயிருப்போம். தியானியுங்கள். (எசே.20:43)

**(உ) பாவத்திற்கு பரிகாரம் செய்தல் :** உண்மையாகவே மனந்திரும்பினவன் தான் செய்த பாவத்திற்கு பரிகாரம் செய்கிறவனாயிருப்பான். உதாரணமாக சகேயு.லூக்.18:8-9. சகேயு கர்த்தரை நோக்கி : ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் ஏதாகினும் அநியாயமாய் வாக்கினதுண்டானால் நாலத்தனையாக திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்றார். அவன் தனது பணியில் கொள்ளையடித்ததை எல்லாம் நாலத்தனையாக திரும்ப செலுத்துகிறேன் என்றான். ஆனால் நம்முடைய பாஸ்டர்கள் ஊழியத்தின் பேரில் கொள்ளையடிக்கிறார்கள். கொள்ளையடித்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஊழியக்காரர்களுடைய பிழைப்புகள் எல்லாம் பகல் கொள்ளையாகத்தான் இருக்கிறது. அவர்கள் அடித்த கொள்ளையை என்றைக்கு நாலத்தனையாக கொடுப்பார்கள்? அப்பொழுதான் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அதுவரை அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. சிலர் ஏதோ ஒரு உத்தியோகத்தில் இருப்பார்கள். அதில் நன்கு கொள்ளையடித்து சம்பாதியம் பண்ணி, பின்பு ஒய்வு பெற்றவுடன், பரிசுத்த வேதாகமத்தை கரத்தில் தூக்கிக்கொண்டு ஊழியத்திற்கு சென்று விடுவார்கள். இவர்கள் தங்களுடைய பணியில் தாங்கள் கொள்ளையடித்ததை பலமடங்காக திரும்பி கொடுக்காதவரை அவர்கள் மனந்திரும்பவும் இல்லை, இரட்சிக்கப்படவும் இல்லை. பெரிய கட்டிடத்தை, கூட்டத்தைக் கொண்டுள்ள பாஸ்டர்கள் யாவரும் மனந்திரும்பவும் இல்லை. இரட்சிக்கப்படவும் இல்லை. இது 100% உண்மை. ஏனென்றால் அங்கேதான் பொய்யும், புரட்டலும், ஊழலும், தில்லுமுல்லுகள் அனைத்தும் உண்டு. உங்கள் கண்முன் உள்ள பெரியபெரிய சபைகள், ஊழியர்களை நோக்குங்கள். அவர்களில் யார் பரம யோக்கியன்? அனைவரும் நேர்மையற்ற முறையில் பணம் சம்பாதிக்கும் ஒரே குட்டையில் ஊரிய மட்டைகள் தான்.

### 52. மெய்யான மனந்திரும்புதலை பெற்றவர்கள் யார்?

**(அ) இவர்கள் இனி தங்கள் பழைய வாழ்க்கையை பிண்ணிட்டு பார்ப்பதில்லை**. கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் வானத்திலிருந்து கந்தகங்களையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்த பட்டிணங்களையும், அந்த சமபூமி அனைத்தையும், எல்லா குடிகளையும் பூமியின் பயிர்களையும் அழித்துப்போட்டார். ஆனால் லோத்தின் மனைவியோ அதற்காக பரிதாபப்பட்டு தன் ஆஸ்திகள் அழிந்து போய்விட்டதே என தான் விட்டுவந்தவைகளுக்காக கவலைப்பட்டாள். ஏதாவது மிஞ்சினதா, அல்லது எல்லாம் அழிந்ததா என நினைத்து பார்க்க பிண்ணிட்டு திரும்பினாள். உப்புத்தூண் ஆனாள். இன்றும் அநேகர் அதே நிலையில் தான் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் நிமித்தம் இழந்தவைகளுக்காக பரிதாபப்படுகிறார்கள். இழந்ததை மீட்டுக்கொள்ள விரும்புகிறார்கள். ஏனென்றால் இவர்களும் உண்மையான மனந்திரும்புதலை பெறவில்லை. பாருங்கள். ஊழியத்தின் பாதையில் கலப்பையின் மேல் தன் கையை வைத்து பிண்ணிட்டு பார்ப்பவன் எவனும், தேவனுடைய

இராஜ்ஜியத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல.(லூக்.9:62) ஏனென்றால் முடிவில் அவன் சரியாக மனந்திரும்பவில்லை. சரியான மனந்திரும்புதல் இல்லாததால்தான் இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்காமல், சபைகளுக்கு நிருபங்களின் வாயிலாக அறிவுரைகள் கூறாமல், வாட்ஸ்ஆப் ஊழியம், யூடியூப் ஊழியம், பேஸ்புக் ஊழியம் என பல தகாத முறைகேடான வழிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள்.

**(ஆ) இவர்கள் சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து திரும்பிவிட்டார்கள்.** ஆம் இவர்கள் இயேசுவை பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்திரத்தையும் பெற்று கொள்ளும் படியாக, இருளைவிட்டு ஒளியின் இடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பியுள்ளார்கள். இனி இவர்கள் பின்னோக்குவது இல்லை. (No turning back) இயேசுவின் பின்னே போக துணிந்தேன், பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான். உலகம் என் பின்னே, சிலுவை என் முன்னே, பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான். மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றபின், பின்வாங்கிப்போன அநேக அவிசுவாசிகளை நான் ஊழியத்தின் பாதையில் கண்டிருக்கிறேன்.

**(இ) இவர்கள் பாவத்திலிருந்து மாம்சத்தின் கிரியைகளிலிருந்து திரும்பிவிட்டார்கள்.** (கலா.5:19-21) ஆனால் இன்றைய பாஸ்டர்களிடம் விபச்சாரம், வேசித்தனம், விரோதங்கள், பகைகள் வைராக்கியங்கள், கோபங்கள், களியாட்டங்கள் (இன்று மேடைகளில் காலை மேலே தூக்கி தூக்கி துள்ளி குதித்து ஆடி பாடும் கிறிஸ்தவ பாடல்கள், பரவசமூட்டும் கச்சேரிகள் அனைத்தும் களியாட்டங்களே, பக்தி பாடல்கள் அல்ல. ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடி குதிப்பது என்ன? இதனால் கர்த்தருடைய நாமம் மகிமைபடுகிறா? அனைத்தும் மாம்சத்தின் கிரியைகளை வெளிப்படுத்தும் களியாட்டங்கள். நானோ ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.) பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள் போன்றவைகள் யாவும் மாம்சத்தின் கிரியைகளே. இவர்கள் மனந்திரும்பவும் இல்லை. இரட்சிக்கப்படவும் இல்லை. தேவனால் அழைக்கப்படவும் இல்லை.

**53. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) நாமத்தினாலே பிரசிங்கிக்கப்பட வேண்டும் – இயேசு (லூக்.24:47)** என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோ.11:48) பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான். (அப்.2:38) இயேசு கொடுத்த கட்டளையை அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேற்றினார்கள். ஆனால் திரித்துவ ஸ்தாபன சபைகளோ அதை நிறைவேற்ற மறுக்கிறார்கள். ஆனாலும் தங்களை கிறிஸ்தவர்கள், ஊழியர்கள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களா? அல்லது பிசாசுவின் ஊழியக்காரர்களா? என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளலாம். அவர்களுடைய கிரியைகள் அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துகின்றனவே. மனந்திரும்புதலைக்குறித்து நாம் ஏற்கெனவே தியானித்துள்ளோம். இப்பொழுது இங்கு இரட்சிப்பைக்குறித்து தியானிப்போம். இரட்சிப்பு என்பது ஒருவனுடைய ஆத்தும மீட்பு / இரட்சிப்பு. இரட்சிப்புக்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது மனந்திரும்புதல், அதனுடன் சேர்ந்த ஞானஸ்நானம். பின் அதனுடன் சேர்ந்த பாவமன்னிப்பு – இரட்சிப்பாகும். நீங்கள் மனந்திரும்ப வேண்டும். நான் மனந்திரும்பி விட்டேன். அடுத்து பாவமன்னிப்பை பெற வேண்டும். ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப்.2:38) இந்த உபதேசம் கெட்டு போய்கிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது. கெட்டுபோகிறவர்களாகிய திரித்துவ ஸ்தாபன ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு பைத்தியமாகயிருக்கிறது. ஆனால் இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. காலேப் யோசுவாவுக்கு அது தேவ பெலனாயிருக்கிறது. அந்த பெலத்தில் தானே 1978 முதல் இன்றுவரை ஓடிக்கொண்டிருக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்கிறவர். (மத்.1:21)

54. அதிகம் படித்து பட்டங்கள் பெற்ற ஒரு ஊழியக்காரர் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றால் இரட்சிப்பு பெற்றுவிட்டோம் என்கிறார். இதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரம் உண்டா என்றால், கிடையாது. இது பரத்திலிருந்து வராத அவருடைய லௌகிக ஞானம். தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்கு செவிகொடுக்கிறான். தேவனால் உண்டாயிராதவன் அவருடைய வசனங்களுக்கு செவிகொடுப்பது இல்லை. (யோ.8:17) தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை

கூட்டியும் குறைத்தும் இவர் தன்மேல் ஆக்கினையை வருவித்துக்கொண்டிருக்கிறார். மேலும் வேதவாக்கியங்களை கவனியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் யாராகயிருந்தாலும் சரி அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெற வேண்டும். (அப்.10:43) ஏனென்றால் மனந்திரும்புதலும் மற்றும் பாவமன்னிப்பும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மாத்திரமே உள்ளது என இயேசு கூறியுள்ளார். (லூக்.24:47) இந்த வசனம் ஏன் உங்கள் கடினப்பட்ட இருதயத்தில் கிரியை செய்வது இல்லை?

55. நீ ஸ்தாபன சபைகளாகிய பெந்தெகொஸ்தே சபைகளை, தென் வட இந்திய திருச்சபைகளை, அசெம்ளி ஆப் காட், கிறிஸ்துவின் சபை, தேவசபை, கத்தோலிக்கத் திருச்சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை, இந்திய அப்போஸ்தல திருச்சபை இன்னும் பல ஆயிரக்கணக்கான சபைகளையும் அதன் உபதேசங்களையும் விசுவாசித்தால், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் அது அப்பிரயோஜனமானது. அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு பிசாசானவன் வந்து அப்.2:38,10:43, 4:12 மாற்.16:16 போன்ற வசனங்களை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்து போட்டுவிட்டான்.(லூக்.8:12) ஆதலால் அந்த வசனங்களை காண அவர்களது கண்கள் குருடாக்கப்பட்டது. ஆனால் அறியாமையுள்ள காலங்களை தேவன் காணதவர் போல் இருந்தார். இப்பொழுது அப்படியல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கும் ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவேண்டும். மாற்கு இதுகுறித்து: விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் மாத்திரமே இரட்சிக்கப்படுவான். விசுவாசிக்காதவன் (அனைத்து திரித்துவ ஸ்தாபன சபை ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள்) ஆக்கினைக்குள்ளாக்கத்தீர்க்கப்படுவார்கள் என்கிறான். (மாற்.16:16) பாருங்கள். ஜெப ஆலயத்தலைவன் கிறிஸ்பு தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசம் உள்ளவனாகி, அவன் மட்டுமல்ல கொரிந்தியரில் அனைவரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.18:8) இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு, விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டார்கள். (எபே.1:13) முடிவாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வெறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தில் கீழ் எங்கும், மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. (அப்.4:12) பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பது நாமம் அல்ல. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆதலால் தான் பெந்தெகொஸ்தே அன்று அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அதை கர்த்தர் அங்கீகரித்தார். (அப்.2:38, 47) ஆதலால் பிரியமானவர்களே, மாறுபாடுள்ள இந்த திரித்துவ சந்ததியை, அவர்களின் உபதேசத்தையும் விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் திரித்துவ ஞானஸ்நானம் வேதவாக்கியங்களில் ஒரு இடத்திலாவது ஆதி அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்டதாகவும், விசுவாசிகளால் எடுக்கப்பட்டதாகவும் ஆதாரங்கள் இல்லை. வேதவாக்கியங்களில் ஆதாரம் இல்லாத ஒரு உபதேசத்தை நீங்கள் பற்றிக்கொண்டிருப்பது என்ன? ஆதலால் அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள். ஏனென்றால் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கைகளையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலி.2:12,13) திரித்துவ ஸ்தாபன சபையார் உலகத்திற்குரியவர்கள், ஆகையால் உலகத்திற்குரியவைகளை, உலகப்பிரகாரமாக, நயவசனிப்போடு பேசுகிறார்கள். உலகமும் அவர்களுக்கு செவிகொடுக்கிறது.

**56. ஆத்தும மீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது.** (சங்.49:9) ஆனால் இது ஆங்கிலத்தில் The Redemption of Soul is Precisious என உள்ளது. என்னை பொருத்த அளவில் இதன் முழுமையான பொருள் ஆத்தும மீட்பு விலையேறபெற்ற ஒன்றாயிருக்கிறது. ஒன்றுமேயில்லாத காலம் ஒன்று இருந்தது. ஒன்றையும் காண முடியாதிருந்தது. ஒன்றையும் கேட்க முடியாதிருந்தது. ஒரு அணுவும் காற்றிலே அசைய முடியாதிருந்தது. அதாவது காற்றே இல்லாதிருந்தது. இன்னும் சொல்லப்போனால் ஒன்றுமே இல்லாதிருந்தது. ஆனால் அந்த நிலையில் அங்கு முடிவில்லாமையும், நித்தியமும் மாத்திரமே இருந்தது. நித்தியம் என்றால் அதற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை. தேவன்தாமே தொடக்கமில்லாதவராகவும், முடிவில்லாமையும், நித்தியமுமாயிருந்தார். ஆம், தேவன் மாத்திரமே அங்கு இருந்தார்.

57. சிருஷ்டிப்பில் தேவன் தம்மைத்தாமே முதலாவது சிருஷ்டித்து, அதாவது எங்கும் வியாபித்திருக்கும் ஆவியாகிய தேவன், ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவராகி

சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானார். அதன்பின் அவரை ஆராதிக்க தேவதூதர்களை சிருஷ்டித்தார். அவர் ஆராதனைக்குரியவரானார். அதன்பின் பரலோகத்திலிருந்து மூன்றில் இரண்டு பங்கு தூதர்கள் பூமியிலே தள்ளப்பட்டனர். அவர்கள் பிசாசின் ஆவிகளாயினர். இதன்பின்பு சிருஷ்டிப்பு ஆரம்பமானது. பூமியானது ஒழிங்கின்மையும், வெறுமையுமானது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. இந்த சிருஷ்டிப்பில் முதலாவது வெளிச்சம் சிருஷ்டிக்கப்பட்டது. கடைசியான சிருஷ்டிப்பு மனுஷன். முதலாம் மனுஷனாகிய ஆதாம் தேவனுடைய சிருஷ்டிப்பிலே கடைசி சிருஷ்டிப்பாகயிருந்தான். மனுஷனுக்கு பிறகு ஸ்திரீ உருவாக்கப்பட்டாள். ஆக சிருஷ்டிப்பில் கடைசியானது மனுக்குலம்.

**58. மனிதன்:** இவன் ஒரு படைப்பு. தேவனால் படைக்கப்பட்ட ஒரு உயிர். இயற்கையை ஆளுகை செய்ய படைக்கப்பட்டான். (ஆதி.1:28, சங்.8:68) முதலாவது நீங்கள் ஒரு திரியேகர். பிதாகுமாரன் பரிசுத்த ஆவியை போல. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என்பவை ஒரு நபருக்கு உரிய மூன்று பட்டப்பெயர்கள். ஒருவருடைய தன்மைக்கடுத்த பெயர்கள். அவர்தான் இயேசு. நீங்கள் சரீரம், ஆவி, ஆத்துமாவாயிருக்கிறீர்கள். இந்த மூன்றும் சேர்ந்துதான் நீங்கள். இவைகளில் ஒன்று மாத்திரம் இருக்குமானால், நீங்கள் நீங்களாகவேயிருக்க மாட்டீர்கள். ஏனென்றால் இந்த மூன்றும் சேர்ந்துதான் நீங்கள். தேவனுடைய சிருஷ்டிப்பில் மனிதன் விஷேசித்தவன். தேவன் அனைத்தையும் தம்முடைய வாயின் வார்த்தைகளால் உண்டாக்கினார். ஆனால் மனுஷனையோ பூமியின் மண்ணினால் உருவாக்கினார். அவன் மண்ணிலிருந்து உருவானான். முடிவில் மண்ணுக்கே திரும்புகிறான். மனுஷனைக்குறித்து தாவீது : நான் பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டேன். நான் ஒளிப்பீடத்திலே உண்டாக்கப்பட்டேன். பூமியின் தாழ்விடங்களில் விசித்திர வினோதமாய் உண்டாக்கப்பட்டேன். (சங்.139:14,15) பாருங்கள் நாம் நம்முடைய சரீரத்தை கவனித்தால், அதிலிலுள்ள ஒவ்வொரு அவயவத்தையும் தேவன் எவ்வாறு ஞானமாய் படைத்து செயல்பட வைத்துள்ளார் என்பது வினோதமாகயிருக்கிறது அல்லவா? இப்பொழுது தேவன் எப்படிப்பட்டவர் என்று நம்மால் காணமுடியுமானால் அவர் சிருஷ்டித்த மனிதனும் எப்படிப்பட்டவன் என்பதை நாம் கண்டுக்கொள்ளலாம். கவனியுங்கள் தேவன் ஒரு ஆவி. (யோ.4:24) அப்படியானால் அவன் சிருஷ்டித்த மனுஷனும் ஒரு ஆவியான மனுஷன் தான். தேவன் நமது (இது ஆங்கிலத்தில் Let us என உள்ளது. இதற்கு நாம் தாமே என்று பொருள்) சாயலாகவும் (Image) நமது ரூபத்தின்படியேயும் (Likeness) மனுஷனை உண்டாக்குவோமாக (Make) என்றார். (ஆதி.1:26) தேவன் தம்முடைய சாயலாக (உருவத்தின்படி) மனுஷனை சிருஷ்டித்தார். (ஆதி.1:27) மனுஷன் தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்டதால் தேவனோடு உறவாடும் தன்மை கொண்டவனாயிருந்தான். இப்படிப்பட்ட தேவனோடு உறவாடும் தன்மை வெறெந்த சிருஷ்டிப்புக்கும் கிடையாது. ஏனென்றால் மனுஷனைத் தவிர வேறு எந்த சிருஷ்டிப்புக்கும் ஆத்துமா கிடையாது. இந்த உறவு மனுஷனுடைய மீறுதலினால், பாவத்தினால் சீர்கெட்டது, (ஆதி.3அதி) அதினால் அழிந்துவிடவில்லை. தேவனுடைய வார்த்தையின் மீதான அவிசுவாசம், கீழ்படியாமை தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை, உறவாடும் தன்மையை விலகச்செய்தது. மனிதன் பாவம் செய்தான். தன்னில் உள்ள ஆவியினால் அல்ல. மாறாக தன்னுடைய சரீரத்தில் உண்டான இச்சையினால், ஆசைகளினால் பாவம் செய்தான். அவன் பாவம் செய்த போது தன்னுடைய சிருஷ்கரிடமிருந்து தன்னை வேறுபிரித்துக்கொண்டான். சிருஷ்டிப்பில் அவன் சாவாமையுடையவனாயிருந்தான். மீறுதலினால் தன் மேன்மையை இழந்தான். (ஆதி.2:17, 3:3 ரோ.5:12) பாவம் உலகத்தில் பிரவேசித்தது. பாவத்தின் சம்பளம் மரணம். சாவாமையுள்ளவனை சாவு மேற்கொண்டது.

**59. சிருஷ்டிப்பு (Creation) :** எதுவுமின்றி ஒன்றை உண்டாக்குவது, ஒன்றுமில்லாதிருக்கையில் ஒன்றை உலகத்தில் பிரவேசிக்கச் செய்வது. உதாரணமாக தேவன் நீந்தும் ஜீவ ஜந்துக்களையும் பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்க கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. பின்பு தேவன் பூமியானது ஜாதிஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊறும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியாக பிரப்பிக்க கடவது என்றார் அது அப்படியே ஆயிற்று. (ஆதி.1:20,24) அதுதான் சிருஷ்டிப்பு ஒன்றுமில்லாத நிலையில் ஒன்றை சிருஷ்டிப்பது.

**உண்டாக்குதல் (Make) :** ஒன்றிலிருந்து ஒன்றை உருவாக்குவது. உதாரணமாக எனது கரங்களில் கொடுக்கப்பட்ட ஒரு படத்தைப் போன்று ஒரு சிலையை உருவாக்குவது. கைகளில் கொடுக்கப்பட்ட ஒரு உருவத்தைப் போன்று மற்றொரு உருவத்தை உண்டாக்குவதாகும். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்.(ஆதி.1:27) பின் பூமியின் மண்ணினாலே கர்த்தர் மனுஷனை உருவாக்கினார். (ஆதி.2:7)

**சாயல் (Reflection) :** பிரதிபிம்பம். கண்ணாடியில் ஒருவன் தன் பிரதிபிம்பத்தை பார்ப்பது போன்றது.

**ரூபம் :** அதே போன்று, ஒற்றுமை (Similarity) சாயலைப் போன்றது.

60. மனுஷன் தேவனுடைய ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தின் (வார்த்தை – Logos) சாயலாக சிருஷ்டிக்கப்பட்டான். பின் தேவனுடைய ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தின் ரூபத்தின்படி உண்டாக்கப்பட்டான். ஆதாவது மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரம், தேவ சாயலாகயிருந்தது. அவனுடைய ஜென்ம சரீரம் தேவ ரூபத்தின்படியிருந்தது. தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவ ஆத்துமாவானான். (ஆதி.2:7) அதாவது கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே தேவனுடைய ரூபத்தைப்போன்று உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவ ஆத்துமாவானான். அதாவது மனுஷன் தன் ஆவியின் சுபாவத்தை வெளிப்படுத்த, மாம்ச சரீரத்தில் ஜீவ ஆத்துமாவானான். ஆவியின் சுபாவம்தான் ஆத்துமா.

61. தேவனுடைய சாயலாக ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுக்கு மாம்சம், எலும்பு, இரத்தம் கிடையாது. இது ஒரு தியாபெனி சரீரம். (லூக்.24:39) ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த மனுஷனுக்கு தேவன் பூமிக்குரிய மேனியை கொடுத்து, அதாவது ஜென்ம சரீரதத்தை பூமியின் மண்ணினால் கொடுத்து, தம்முடைய ஜீவ சுவாசத்தை (Breath of Life) அவன் நாசியில் ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். ஆத்துமாவை உடையவனானான். மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி.2:7) (Man became a living soul) சாவாமையை பெற்றான். (He is got a soul of God in him wate makes immortal) ஆம் மனுஷனுக்கு சர்வவல்லவருடைய சுவாசம் (Breath of Life) உயிர் கொடுத்தது. (யோபு.33:4) அவனை உயிர்உள்ளவனாக்கியது (யோபு.32:8) அதாவது தேவனுடைய சாயலாக ஆவிக்குரிய சரீரத்தை பெற்ற மனுஷன், தேவரூபத்தின்படி பூமியின் மண்ணினால் தன் ஜென்ம சரீரத்தை, பூமிக்குரிய சரீரதத்தை பெற்று தேவனுடைய ஆவியின் சுபாவத்தை வெளிப்படுத்த, ஜீவாத்துமாவானான். எபிரேயர் மொழியில் மனிதனை குறிக்கும் சொல் அதாமா (Adamah) மண்ணிலிருந்து முதல் மனிதன் உருவாக்கப்பட்டதால் அவன் பெயர் ஆதாம் எனப்பட்டது. இது ஒரு காரணப்பெயராயிற்று. ஜீவசுவாசம் தேவனுடைய கிருபையினால் அவனுக்கு அருளப்பட்டது. தேவன் தாம் கொடுத்த ஜீவசுவாசத்தை திரும்ப பெற்றுக்கொள்ளும் போது பழைய படியும் அவன் மண்ணுக்கே திரும்ப வேண்டும். (சங்.104:9) மனிதனின் பிரதானமாக மூன்று கூறுகள் இருக்கின்றன. அவைகளால் அவன் ஆண்டு கொள்ளப்படுகிறான். அவையாவன சரீரம், அதில் ஆவி, ஆத்துமா. மனிதன் தன்னுடைய ஆவியைக்கொண்டு நல்லவன், கெட்டவன் என்று அழைக்கப்பட்டான். மனிதன் நல்லவன். (அப்.10:22, 22:19, மத்.12:35) உண்மையுள்ளவன் (நெகே.7:2) தேவனுடைய மனுஷன் (2தீமோ.3:16), புத்தியுள்ள மனுஷன் (மத்.7:24), பூரண மனுஷன்(யாக்.3:2) கிறிஸ்துவுக்குள்ளான மனுஷன் (2கொரி.12:2,3) தேவபக்தியுள்ளவன் (அப்.10:2), தேவனுக்கு பயந்தவன் (ஆதி.22:12) என அவனுடைய பண்புகளை, குணாதிசயங்களை, சுவாவங்களைக் கொண்டு அழைக்கப்படலானான். அதே வேளையில் பொல்லாத மனுஷன் (லூக்.6:45) புத்தியில்லாத மனுஷன் (மத்.7:26), பேலியாளின் மனுஷன் (1சாமு.2:12) பாவியான மனுஷன் (லூக்.19:7), சூதுள்ள மனுஷன் (சங்.5:6) மாறுபாடுள்ள மனுஷன் (சங்.18:26) தீவினைகளை செய்கிற மனுஷன் (சங்.37:1) கடினமான மனுஷன் (மத்.25:24) உக்கிரமுள்ள மனுஷன் (நீதி.22:24) துர்சிந்தையுடைய மனுஷன் (நீதி.12:2) என மனுஷன் அவனது தகாத செயல்பாடுகளை குணாதிசயங்களைக் கொண்டும் அழைக்கப்பட்டான்.

62. 1கொரி.2:11 லிருந்து 3:1 வரை நாம் தியானிக்கும் போது, அங்கு மூன்று வகையான மக்களை (Three classes of People) காண்கிறோம்.
(அ) ஜென்ம சுபாவ மனுஷன் (The Natural Man) இவன் ஜென்ம சுபாவத்திற்குரியவன்.
(ஆ) ஆவிக்குரியவன் (The Spiritual Man)
(இ) மாம்சத்திற்குரியவன் (The carnal Man)
நாம் மூன்று வகையான விசுவாசிகளை குறித்து அறிவோம். 1. விசுவாசி, 2. அவிசுவாசி, 3. பாவனை விசுவாசி. அதே போன்று இங்கு நாம் மூன்று வகையான மனிதர்களை காண்கிறோம்.

**63.ஜென்ம சுபாவ மனிதன்:**
(அ) இவன் பெற்றுள்ளது மனுஷனில் உள்ள ஆவி. (1கொரி.2:11)
(ஆ) அது உலகத்தின் ஆவி. (1கொரி.2:12) இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. (1யோ.5:19)
(இ) இவன் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசுகிறான். ((1கொரி.2:13)
(ஈ) இவன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். (1கொரி.2:14)

(உ) இவன் தேவனை அறியவில்லை. (கலா.4:8) உலகமானது தன் சுயஞானத்தினாலே தேவனை அறியாது. (1கொரி.1:28) ஆதலால் ஜென்ம சுபாவத்தைக் கொண்டு தேவனை அறிய முடியாது. அதனாசியு விசுவாச பிரமாணத்தைக் கொண்டு தேவனை அறிய முடியாது.
(ஊ) இவர்கள் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்கள். (எபே.2:1) இவர்கள் இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நடந்து கொள்பவர்கள். (எபே.2:2) பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற திரித்துவ வழிபாடு. திரித்துவ வழிபாடு உலகம் முழுவதும் அனைத்து மதத்தினர் மத்தியில் காணப்படும் ஒன்றாகும்.
(எ) இவர்கள் கீழ்படியாமையின் பிள்ளைகள். (எபே.2:2)
(ஏ) இவர்கள் மாம்சமும், மனசும் விரும்பினவைகளை செய்கிறவர்கள். (எபே.2:3) கிறிஸ்து பிறந்த நாள், மரித்த நாள், லெந்து நாள் போன்ற அநேக பண்டிகைகளை கொண்டாடுகிறார்கள்.
(ஐ) இவர்கள் எப்பொழுதும் சத்தியத்தை எதிர்த்து நிற்பவர்கள். (2தீமோ.3:8) ஒரே தேவன் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, ஒரே ஞானஸ்நானம் : கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்பதற்கு எதிர்த்து நிற்கிறார்கள்.
(ஒ) இவர்கள் தேவனுடைய ஆவியில்லாதவர்கள், ஆதலால் பரியாசக்காரரர்கள். (யூதா:18,19)
(ஓ) இவர்கள் சத்தியத்திற்கு விரோதமாக பொய் சொல்கிறவர்கள். (யாக்.3:13-16)
(ஔ) இவர்கள் உலகத்திற்குரியவர்கள், ஆதலால் உலகத்திற்குரியவைகளை பேசுவார்கள், உலகமும் இவர்களுக்கு செவி கொடுக்கும். (1யோ.4:5)
இவர்கள் பாவத்திலே பிறந்து, வளர்ந்து மடிகிறார்கள்.

**64. ஆவிக்குரியவன்:**
(அ) இவர்கள் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபிறப்பு அடைந்தவர்கள். (யோ.3:5)
(ஆ) இவர்கள் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டவர்கள். (எபே.4:24, கொலோ.3:10)
(இ) இந்த சுபாவத்தைக் கொண்டுதான் தேவனை அறியமுடியும். ஆதலால் இவர்கள் தேவனுடைய ஆவியை உடையவர்கள், தேவனை அறிந்தவர்கள். (1கொரி.2:11)
(ஈ) இவர்கள் இயேசுவின் திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்கள். (1பேது1:4)
(உ) இவர்கள் ஆவியின் கனிகளை உடையவர்கள். (கலா.5:22,23)
(ஊ) இவர்கள் பரிசுத்த ஆவியை போதிக்கிற வார்த்தைகளையே பேசுகிறவர்கள். (1கொரி.2:13)
(எ) பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியைக்கொண்டு பிரசங்கிக்கிறவர்கள். (1பேது.1:12)
(ஏ) இவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறவர்கள். (1கொரி.2:15)
(ஐ) இவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ச்சி செய்ய மாட்டார்கள். மாறாக ஆராய்ந்து பார்ப்பார்கள்.
(ஒ) இவர்கள் மற்றொருவரால் ஆராய்ந்து நிதானிக்கப்படாதவர்கள். (1கொரி.2:16)
இவர்கள்தான் உண்மையாகவே ஜலத்தினாலும், ஆவியினாலும், மறுபிறப்படைந்தவர்கள்.

**65. மாம்சத்திற்குரியவன்:**
(அ) இவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்தாலும், மாம்சத்தின்படி நடக்கிறவர்கள். (ரோ.8:1) பவுல் இவர்களை சகோதரர்கள் என அழைக்கிறான். அடுத்து நீங்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல என குற்றமும் சாட்டுகிறான். (1கொரி.3:1) முடிவாக இவர்களை மாம்சத்திற்குரியவர்கள் என்றே அழைக்கிறான். (1கொரி.3:1)
(ஆ) இவர்கள் படித்தவர்கள், பட்டங்கள் பல பெற்றவர்கள். நல்ல உத்தியோகங்களில் உள்ளவர்கள், ஆனால் தேவனுக்கென்று அவருடைய சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள். ஆதலால் ஆவிக்குரிய வெளிப்பாடு கொண்டவர்கள் அல்ல. இவர்கள் வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ள, புரிந்துக்கொள்ள முடியாது. அது இவர்களுக்கு ஒரு மறைபொருளாக இருக்கும். ஞானிகளும், கல்விமான்களுக்கும் சத்தியம் மறைக்கப்பட்டு இருக்கும். (மத்.11:25)
(இ) ஆதலால் இவர்கள் தேவனுக்கு பிரியமானவர்கள் அல்ல. (ரோ.8:8) இவர்கள் ஞானிகளும், கல்விமான்களுமாக இருந்தாலும் தங்களில் கிறிஸ்துவின் ஆவி இல்லாதவர்கள். (ரோ.8:9)
(ஈ) இவர்கள் ஜலத்தினால் பிறந்தவர்களாயிருந்தாலும், ஆவியினால் பிறக்கவில்லை.
(உ) இவர்கள் பால் குடிக்கிற குழந்தையை போன்றவர்கள். ஆதலால் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவர்கள். அதாவது தேவனுடைய வார்த்தையில் பழக்கமில்லாதவர்கள். எது சரி எது தவறு என்று இவர்களால் பகுத்தறிய முடியாது. (எபி.5:13,14)
(ஊ) ஆனாலும் தாங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறோம் என பெருமை பாராட்டிக்கொள்வார்கள். ஆனால் எதையும் அறிய வேண்டிய பிரகாரமாக இவர்கள் அறிந்துக்கொள்ளவில்லை. (1கொரி.8:2)

(எ) இவர்கள் ஆவியினால் வழிநடத்தப்பட்டார்கள். ஆனாலும் ஆவியின் அபிஷேகத்தை பெறவில்லை. ஆரம்பத்தில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டார்கள். அதேவேளையில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக அவர்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. பெந்தெகோஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியை பெற்றார்கள். மாம்சத்திற்குரிய இவர்கள் பேர் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

**66. ஆவி (Ruach) :** தேவனாகிய கர்த்தர் மாம்சமான யாவருடைய ஆவிக்கும் தேவன். (எண்.27:17, 16:22) அவருடைய ஆவி ஜீவனைக் கொடுக்கிறது. (யோ.6:63) நான் உங்களுக்குள் ஆவியை பிரவேசிக்கப் பண்ணுவேன். அப்பொழுது உயிரடைவீர்கள். (எசே.37:5) ஆக மானிட உடலுக்கு உயிர் கொடுப்பது ஆவி. ஆவிக்கு ஆழ்தத்துவம் உண்டு. ஆதலால் தான் பரிசுத்த ஆவியை – பரிசுத்த ஆவியானவரே என்று அழைக்கிறோம். மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்கு சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்து பார்க்கிறார். (நீதி.16:2) என் ஆத்துமா இராவிலே உம்மை வாஞ்சிக்கிறது; ஏனென்றால் எனக்குள் இருக்கிற என் ஆவியினால் அதிகாலையிலும் உம்மை தேடுகிறேன். (ஏசா.26:9) கர்த்தருடைய ஆவி மனிதர்கள் மேல் இறங்கினதால் அவர்கள் பெரிய, பலத்த கிரியைகளை செய்தார்கள். உதாரணமாக கர்த்தருடைய ஆவி ஒத்தானியேல் மேல் விழுந்தது. (நியாயாதி.3:10) கிதியோன் மேல் இறங்கினது. (நியாயாதி.6:34) சவுல் மேல் இறங்கினது. (1சாமு.16:6) கர்த்தருடைய ஆவி தாவிதீன் மேல் (1சாமு.16:13) முடிவாக நாம் ஆவியினாலே தேவனை தரிசிக்க வேண்டும். (யோ.4:24) ஆவியில் கபடமில்லாதிருக்கிறவர்கள் பாக்கியவான்கள் என கூறப்பட்டுள்ளது. (சங்.32:2) மனுஷன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டான். ஆதலால் அவன் தான் முன்பிருந்த பூமிக்கே திரும்புகிறான். ஆவி, அதை தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் திரும்புகிறது. (பிற.12:7) நாம் இங்கு இரு ஆவிகளைக்குறித்து 1கொரி.2:11, 12ல் காண்கிறோம். ஒன்று மனிதனில் உள்ள ஆவி, தேவனுடைய ஆவி, அது தேவனிலிருந்து புறப்படுகிற ஆவி. மனுஷனுடைய ஆவி ஒருவனை மாம்சகிரியைகளுக்குள் வழிநடத்தும். மாம்சத்தின் கிரியைகள் 1.விபச்சாரம், 2.வேசித்தனம், 3.அசுத்தம், 4.காம விகாரம், 5.விக்கிரகாராதனை 6.பில்லிசூனியம் 7.பகைகள், 8.விரோதங்கள், 9.வைராக்கியங்கள், 10.கோபங்கள், 11.சண்டைகள், 12.பிரிவினைகள், 13.மார்க்கபேதங்கள் 14.பொறாமைகள் 15.கொலைகள், 16.வெறிகள், 17.களியாட்டங்கள். இந்த கிரியைகள் ஒருவனிடத்தில் காணப்படுமானால் அவன் இன்னும் தேவசாயலான புதிய மனுஷனை தரித்துக் கொள்ளவில்லை. அவன் மாம்சத்திற்குரியவன். மனுஷருடைய ஆவியினால் வழிநடத்தப்படுகிறான். மாம்சத்தின்படி நடக்கிறவர்கள், மாம்சத்திற்குரியவைகளை சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம். மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. (ரோ.8:5-7) மாம்சத்திற்குட்பட்டவர்கள் தேவனுக்கு பிரியமாயிருக்கமாட்டார்கள். (ரோ.8:8) பொதுவாக கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் மத்தியில் மேற்கண்ட கிரியைகள் அனைத்தும் காணப்படுகின்றன. ஆதலால் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களே அல்ல, கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்களே அல்ல. மாறாக கிறிஸ்தவர்கள் என்ற போர்வையில் மனுஷனுடைய ஆவியினால் வழிநடத்தப்படும் பேர் கிறிஸ்தவர்கள். திரித்துவ ஸ்தாபன சபை மக்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எவ்விதத்திலும் சம்பந்தம் இல்லை.

67. எவ்வாறு மாம்சத்திற்கு ஐந்து புலன்கள் உண்டோ, அதேபோன்று ஆவிக்கும் ஐந்து புலன்கள் உண்டு. 1.கற்பனை (Imagination) 2.மனசாட்சி (Conscience) 3. ஞாபகம் (Memory) 4. யோசனை (Reason) 5.பாசம் (Affection) உங்களுடைய ஆவி தேவனுடைய ஆவியாக இருக்க வேண்டும். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். **கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல.** கிறிஸ்து உங்களில் இருந்தால் சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியின் நிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். (ரோ.8:9, 10) ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறார்கள். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சாமாதானமுமாகும். (ரோ.8:5,6) **தேவனுடைய ஆவி உங்களுக்குள் இருக்குமானாமால் அது உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும்.** (யோ.16:13, 1யோ.2:7) உங்கள் சரீரமானது தேவன் வாசம் செய்யும் ஆலயமாயிருக்கிறது. (1கொரி.13:16,17) தேவனுடைய படைப்பின் முழுமையை பார்க்கும்போது, அங்கும் ஐந்து நிலைப்பாடுகளை காண்கிறோம். (The Universe is in five terms) ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். (ஆதி.1:1,2) (1) ஆதி – Time - வேளை (2) வானம் – Space – இடம் (3) பூமி – Earth – Matter - மண் (4) தேவஆவி – Power – சிருஷ்டிப்பு (5) அசைவாடுதல் – Motion – ஜலத்தின்மேல் அசைவாடுதல்.

**68. தேவனுடைய ஆவி உங்களை தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையோடும் உறுதிப்படுத்தும்.** (யோ.6:63) கர்த்தருடைய ஆவி எங்கோ அங்கு விடுதலை உண்டு. (2கொரி.8:17) அங்கு வியாதிலிருந்து விடுதலை, மாம்சத்தின் இச்சைகளிலிருந்து விடுதலை, கண்களின் இச்சைகளிலிருந்து விடுதலை, ஜீவனத்தின் பெருமைகளிலிருந்து விடுதலை. உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோகும். தேவனுடைய ஆவி எங்கு உண்டோ அங்கு ஆவியின் கனிகளும் உண்டு. அங்கு அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசவாசம், சாந்தம், இச்சை அடக்கம் உண்டு. ஆவியின் கனிகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றும் இல்லை. (கலா.5:22-25) முடிவாக **தேவனுடைய ஆவியை எதிர்த்து நிற்க ஒருவனாலும் கூடாது.** (அப்.6:10) **தேவ ஆவி உடையவனை ஒருவனும் எதிர்த்து நிற்க கூடாது.** இங்கு ஒரு காரியத்தை குறித்து எழுத விரும்புகிறேன். உங்களுடைய மூளை உங்கள் ஞானம் அல்ல. உங்களுக்குள் இருக்கும் ஆவியே உங்கள் ஞானம். உங்கள் மூளை உயிரணுக்களையும் மற்றவைகளையும் கொண்டது. அதற்கு தன்னில்தானே ஞானம் கிடையாது. மூளைக்கு ஞானம் இருக்குமானால் நீங்கள் மரித்தாலும், உயிரோடுயிருந்தாலும் அது இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும். உங்கள் ஆத்துமா உங்களிலுள்ள ஆவியின் சுபாவம். அது சரீரத்தைக் கட்டுப்படுத்தும் ஆவியின் சுபாவம். மேலும் கவனியுங்கள் உங்களில் உள்ள ஆவிக்குள் சிறு ஆத்துமா. சரீரத்துக்கும், ஆத்துமாவுக்கும் நடுவே ஆவி. முதலாவது வட்டம் மனித உணர்ச்சிகளைக் கொண்டது. இரண்டாம் வட்டம் ஆவியின் உணர்ச்சிகள், அதாவது சுயநலம், விருப்பம் போன்றவைகள். பின் அதனுள் ஆத்துமா. அந்த ஆத்துமாதான் முன்குறிக்கப்பட்டுள்ளது. பெண்களை கவனியுங்கள். அவர்கள் தங்கள் தலைமயிரை கத்தரித்துக் கொள்கின்றனர். குட்டை கால்சட்டை அணிகின்றனர். லெக்கின்ஸ் என்னும் இருக்கமான மெல்லிய ஆடைகளை அணிந்து, தங்களை பிறரின் கவர்ச்சிக்குள்ளாக்கி, இச்சைகளுக்குட்படுத்துகின்றனர். முகங்களுக்கு வர்ணம் தீட்டிக்கொள்கின்றனர். அழகு சாதனங்களை பயன்படுத்துகிறார்கள். இருப்பினும் அவர்கள் சபைகூடுதலுக்கு ஒழுங்காக செல்கின்றனர். பைபிள் படிக்கின்றனர். இனிமையான பாடல்களை பாடுகின்றனர். ஆண்கள் மத்தியில் பெண்கள் பிரசங்கம் செய்கிறார்கள். இவை அனைத்தும் என்ன? அவர்கள் தங்களில் உள்ள ஆவியின் பேரில் கொண்டுள்ள அபிஷேகம். அது ஆத்துமாவின் மேல் கொண்டுள்ள அபிஷேகம் அல்ல. அவர்களுடைய ஆவியின் சுபாவம் தான் அவர்களுடைய ஆத்துமா. கவனியுங்கள் எனக்குள் இருக்கும் ஆவியினால் நான் அநீதிக்கு எதிர்த்துப் போராடுகிறேன், மாறுபாடான உபதேசங்களுக்கு எதிர்த்து நிற்கிறேன். கள்ளகபடமுள்ள வேலையாட்களை எதிர்த்து சபைக்கு அவர்களை அடையாளம் காட்டுகிறேன். சத்தியத்தை கூறுவதால், எழுதுவதால் அனைவருக்கும் சத்துருவாகியுள்ளேன். இது என்ன? இதுதான் என் ஆவியின் சுபாவம். அதுவே ஆத்துமா.

**69. ஆத்துமா (Soul):** உங்களில் உள்ள ஆவியின் தன்மைதான் ஆத்துமா. ஒருவனுடைய ஆவியின் கிரியைகளைக் கொண்டு அவனுடைய ஆத்துமாவை நிதானிக்கமுடியும். அதாவது உன்னுடைய ஆத்துமா தான் நீ யார் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு மனுஷனுடைய முழு குணத்தையும் ஆத்துமா என்கிற சொல் தெரிவிக்கிறது. ஒருவனுடைய ஆத்துமாவில் தான் தேவன் கிரியை செய்கிறார். ஆத்துமா தான் நம்மை மிருகங்களிலிருந்து வித்தியாசப்படுத்துகிறது. மிருகங்களுக்கு ஆத்துமா கிடையாது. பாருங்கள் மிருகங்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிவதில்லை. அவைகளுக்கு பாவத்தைக் குறித்து எதுவும் தெரியாது. ஏனென்றால் அதற்கு ஆத்துமா கிடையாது. ஆனால் ஜீவன் உண்டு. ஒருவன் தன்னுடைய ஆத்துமாவை தேவனுடன் இணையச்செய்தால் அவனிலுள்ள உலக சுபாவம் மரிக்கிறது. ஆத்துமாவை இரட்சிக்கவல்லது வார்த்தை. (யாக்.1:21) ஒரு மனுஷன் தன் ஆத்துமாவால் அறியப்படுகிறான். (1பேது.2:14, எசே.22:25, எபி.13:17) ஆத்துமாவுக்கு ஒரு சாலை தான் உண்டு. அதாவது விசுவாசம் (Faith) அல்லது அவிசுவாசம் (Doubt) அதாவது சந்தேகம். விசுவாசத்தின் பலன் தான் ஆத்தும இரட்சிப்பு. (1பேது.1:9, எபி.10:39) உங்கள் ஆத்துமாவில் உலகமும், அதின் ஆசை இச்சைகளும் இருக்குமானால் அது உலகத்தோடு அழியும். உலகத்தின் ஆசை, இச்சைகளிலிருந்து உன்னுடைய ஆத்துமா ஒருவேளை விட்டுவிலகுமானால் அது தேவனோடு இருக்கும். ஏனென்றால் ஆத்துமா நல்லதோ கெட்டதோ மரணத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஆத்துமா சாவாமையுடையது, அழியாது. எனென்றால் அது கர்த்தருடையாது. (எசே.18:4) ஒருவனுடைய ஆவியில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம். ஆனால் அதேவேளையில் ஆத்துமாவில் இருளும் இருக்கும். எப்படியெனில் உன்னில் சினிமா, டி.வி, உலகப்பிரகாரமான கிரியைகள், மாம்சத்தின் கிரியைகள், கண்களின் இச்சைகள், ஜீவனத்தின் பெருமைகள் அனைத்தும் உண்டு. அதே வேளையில் உன்னிடம் தேவபக்தியும் உண்டு. விசுவாசமும் உண்டு, ஜெபஜீவியமும் உண்டு. இவைகள் தான் பொதுவாக ஸ்தாபன சபை விசுவாசிகளின் மத்தியில் காணப்படுகிறது. பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது உங்கள் ஆவியை ஒரு வித்தியாசமான ஆத்துமாவாக

மாற்றுகிறது. அந்த ஆத்துமா அந்த ஆவியின் மேலான வித்தியாசமான சுபாவம் ஆகும். எனவே ஆத்துமா என்பது உங்கள் ஆவியின் சுபாவம். முன்பு நீங்கள் பகை, விரோதம், நீசத்தனம், பொல்லாப்பு போன்ற சுபாவம் கொண்டவர்களாயிருந்தீர்கள். பரிசுத்த ஆவி உங்களில் வரும்போது நீங்கள் அன்புள்ளவர்களானீர்கள், இனிமையும், தயவும் உடையவர்களானீர்கள். உங்கள் சுபாவத்தில் ஒரு வித்தியாசம், மாற்றம். பாருங்கள் ஆத்துமா உங்கள் ஆவியின் சுபாவம்.

70. சரீரத்தைக்காட்டிலும் ஆத்துமா விலையேறப்பெற்றது. அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த சரீரமோ இன்னும் சாத்தானுடைய பிடியில் மாட்டி அவனுக்கு சொந்தமாயுள்ளது. ஆனால் அந்த ஆத்துமாவோ இரட்சிக்கப்பட்டுள்ளதால் சாத்தான் அந்த ஆத்துமாவை தொடமுடியாது. அது தேவனுடைய விலையேற பெற்ற பொக்கிஷமாயுள்ளது. அந்த ஜீவன் இணையப்போகிறது. அதை தந்த தேவனிடத்திற்கு அது திரும்பி, மறுபடியும் அடுத்தக் காலத்தில் புதிய சரீரத்துடன் வெளிவரும். ஆதலால் அதை சாத்தான் தொட முடியாது. வியாதியோ அல்லது வேறு எதுவுமோ அதை தொட முடியாது. அது மகிமையுள்ள சரீரமாகும்.

71. அடுத்து மிருகங்களுக்கு ஆத்துமா கிடையாது. அதேவேளையில் ஆவி உண்டு. மிருகம் நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் வித்தியாசம் அறியாத ஒரு பிராணி. அது தான் நிர்வாணி என்று அறியாது. அது தன் பாவங்களை உணர்ந்துக்கொள்ள முடியாது. அதற்கு எதுவுமே தெரியாது. உயிர்வாழும் பிராணியாக இருந்தாலும், அது ஜீவஆத்துமா (Living Soul) அல்ல. மனிதனைத் தவிர வேறு எந்த மிருக வர்கத்திற்கும் ஆத்துமா கிடையாது. மனிதன் மிருக வர்கத்தை சேர்ந்தவன் என்பது உண்மையே. ஆனால் தேவன் அவனுக்குள் ஆத்துமாவை வைத்துள்ளார். அதுதான் அவனை மிருகங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. அவன் ஆத்துமாவை கொண்டிருப்பதினால்தான் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்துக்கொள்ள முடிந்தது. தேவன் அவனை தமது சொந்த ரூபத்தின்படியே சிருஷ்டித்தார். அதன் பிறகு தான் அவன் ஜீவ ஆத்துமாவானான்.

72.யேகோவா சாட்சிகள் நாம் சுவாசிக்கும் சுவாசமே ஆத்துமா என்கிறார்கள். அது தவறு. நீங்கள் சுவாசிக்கும் சுவாசம் ஆத்துமா அல்ல. சுவாசம் என்பது காற்று. இந்த காற்றை நீங்கள் உங்கள் நாசியின் வழியாக சுவாசிக்கிறீர்கள். இந்த காற்றில் உள்ள ஆக்ஜிசனை நீங்கள் தக்கவைத்துக்கொண்டு அதில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடை அதே நாசியின் வழியாக வெளியிடுகிறீர்கள். ஆதாமுக்கு அடுத்த காரியத்தில் தேவன் தம்முடைய நித்திய ஜீவனின் சுவாசத்தை ஊதினார். அப்போது அவன் ஜீவாத்துமாவானான். மரிக்கமுடியாத ஆத்துமா. ஆக தேவன் மனுஷனுடைய நாசியில் தம்முடைய நித்திய ஜீவனின் சுவாசத்தை ஊதினார். அவன் நித்திய ஜீவாத்துமாவானான். தேவன் அவனுடைய நாசியில் இயற்கை காற்றை ஊதவில்லை. தேவன் ஆதாமுக்குள் தம்முடைய நித்திய ஜீவனின் சுவாசத்தை ஊதினபோது, அவன் தேவனுடன் நித்தியமானவனானான். ஆதலால் தான் அவனுக்குள் தேவன் கொடுத்த வல்லமையிருந்தது. அவன் குட்டி தேவனாகவே இருந்தான். ஆனால் அவன் பரலோகத்திற்கு தேவனாயிராமல் பூலோகத்திற்கு மாத்திரமே தேவனாயிருந்தான். ஏனென்றால் அவன் பூமியின் மண்ணினாலே சிருஷ்டிக்கப்பட்டவனாயிருந்தான். நீங்கள் உலகத்தோற்றத்திற்கு முன்பே கிறிஸ்துவுக்குள் இருந்ததால் உங்கள் ஆத்துமாவும் உலகதோற்றத்திற்கு முன்பே கிறிஸ்துவுக்குள் இருந்தது.

73. மரணம் பாவத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. பாவம் என்று ஒன்று இருப்பதற்கு முன்பு மரணம் என்ற ஒன்று இல்லை. ஆதலால் மரணம் எங்கோ அங்கு பாவமும் உண்டு. அதேபோன்று பாவம் எங்கு உள்ளதோ அங்கு மரணமும் உண்டு. பாவத்தின் பலனே – சம்பளம் மரணம். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். (எசே.18:20) நம்முடைய தாய் நம்மை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள். நாம் பாவத்திலே பிறந்து, பாவத்திலே வாழ்ந்து மரணத்தை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். இதிலிருந்து மீள நாம் மனந்திரும்ப வேண்டும், பாவமன்னிப்பை பெற வேண்டும். இதற்காக கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஏனென்றால் இயேசுவே நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப்பட்டார், உயிர்தெழுந்தார். ஆக நாம் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்கும்போது, மறுபடியும் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொண்டு மரணத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாதவர்களாயிருக்கிறோம். மரணம் ஜீவனுடன் சம்பந்தம் பட முடியாது. ஜீவனும் மரணத்துடன் சம்பந்தப்படமுடியாது. இந்த உலகம் உங்கள் ஆத்துமாவில் இருக்குமானால் உலக சிந்தனைகள், செயல்கள், எண்ணங்கள் யாவும் இப்பிரபஞ்சத்திற்கடுத்ததாகவே இருக்கும். நீங்கள் இந்த உலகத்திற்கு மரித்தீர்களானால் உங்களோடு உங்கள் ஆத்துமாவும் மரிக்கும். நீங்கள் ஒரே நேரத்தில் தேவனையும் உலகத்தையும் சேவிக்க முடியாது. தேவனிடத்திலும் உலகத்திலும் ஒரே நேரத்தில் அன்புகூற முடியாது. நீங்கள்

மறுபடியும் பரிசுத்த ஆவியினால் பிறக்கும் போது உங்களில் ஒரு மாற்றம். நீங்கள் நித்திய ஜீவனை உடையவர்களாகிறீர்கள்.

74.ஒரு மனிதனுடைய முதல் மரணமானது நமக்கு பிரியமானவர்களிடத்திலிருந்து நம்மை பிரிக்கக்கூடியதாயிருக்கிறது. நாம் மரித்தாலும் தேவனுடைய சமூகத்திற்குள் செல்லுவோம். அவருடைய பிரசன்னத்தை விட்டு அகலமாட்டோம்.
ஆனால் ஒரு மனிதனுக்கு இரண்டாம் மரணம் என்று ஒன்று இருக்குமானால் அது நிச்சயமாக ஆத்துமாவின் மரணமாகத்தான் இருக்கும். ஆத்துமா அதன் செய்கைகளுக்காக ஒரு வேளை ஐந்து நிமிடமோ, ஐம்பது ஆண்டுகளோ அல்லது அதற்கு மேற்கொண்டோ நரகத்தில் வாதிக்கப்படக்கூடும். ஆனால் உலகத்தை ஜெயம் கொண்டவன். நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறபடியினால் இரண்டாம் மரணம் அவனை தொடுவது கிடையாது. நித்திய ஜீவன் என்பது அதுதான். பாவம் செய்கிற ஆத்துமாவே சாவும். சாவு என்றால் அது என்ன? முழுவதுமாக பிரிக்கப்படுதல், இனி இல்லாதிருத்தல், முற்றிலும் அறுப்புண்டு போகுதல். அது இனிமேல் இல்லை என்றுள்ள கட்டம் எப்பொழுது ஏற்படும்? அது எவ்வாறு இங்கு ஏற்பட்டதோ அதே நடைமுறையில் இனி என்றுமே இல்லை என்ற நேரம் வரும் வரைக்கும் போகும். அது எதிலிருந்து உண்டாக்கப்பட்டதோ, அங்கே அது திரும்பிச் செல்கிறது. சரீரம் முதலில் மரித்துவிடுகிறது. அடுத்து பாவம் செய்த ஆத்துமா மரிக்கிறது. அதன் பிறகு இல்லாமல் போய்விடுகிறது. ஏனென்றால் அது எங்கிருந்து உண்டாக்கப்பட்டதோ / எங்கிருந்து வந்ததோ அங்கே அது திரும்பவும் செல்கிறது. ஆத்துமாவுக்கு மரணம் கிடையாது. அது எங்கிருந்து உண்டானதோ அங்கே திரும்பச் செல்கிறது. சரீரம் எங்கிருந்து எடுக்கப்பட்டதோ அங்கே செல்கிறது. மண்ணினாலான சரீரம் மண்ணுக்கே செல்கிறது, கல்லறைக்கு செல்கிறது. ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு திரும்பிச் செல்கிறது. மனுஷனுடைய ஆவி உயர ஏறும். மிருகங்களின் ஆவி தாழ பூமியில் இறங்கும். (பிர.3:21) ஆத்துமா தன் ஸ்தானத்திற்கு செல்கிறது. அதாவது பாவம் செய்த ஆத்துமா அழுகையும், பற்கடிப்புமான ஐந்தாவது பிரமாணத்திற்கு செல்கிறது. பரிசுத்தவான்களுடைய ஆத்துமா, அவர்களுடைய இளைப்பாறும் ஸ்தலமாகிய ஆறாவது பிரமாணத்திற்கு செல்கிறது. தேவன் ஏழாவது பிரமாணத்தில் இருக்கிறார். நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது உங்களில் இருந்த உலகம் மரிக்கிறது. நீங்கள் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்து, புது சிருஷ்டியாகிறீர்கள். தேவனுடைய ஒரு பாகமாகிறீர்கள். அவருடைய நித்திய ஜீவனில் பங்கு பெறுகிறீர்கள். நீங்கள் மரணத்திலிருந்து விடுதலையாகி, நித்திய ஜீவனை, அழியாமையை பெற்றுக்கொள்கிறீர்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா சாகவில்லை. நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது நீங்கள் உங்கள் ஆவியின் தன்மையில் ஒரு மாற்றத்தை காண்கிறீர்கள். ஆனால் அதே ஆவிதான், ஆவியின் தன்மை மாறுகிறது.

**75. சரீரம் – மாம்சம் – Body :** நம்முடைய சரீரம் தேவனுடைய ரூபத்தின்படி உண்டாக்கப்பட்டது. இந்த சரீரம் நம்முடையது அல்ல. ஒருவேளை இது உங்களுடையது என நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது அப்படியல்ல. இந்த சரீரத்தை நாம் தேவனிடத்திலிருந்து பெற்றோம். தேவ சாயலாகவும், ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்டோம். எதற்காக? தேவன் இந்த சரீரத்தில் வந்த தங்க. தேவ ஆவி இந்த சரீரத்தில் தங்க. இதுகுறித்து நாம் 1கொரி.6:19 ல் உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறியாமல் இருக்கிறீர்களா என்றும், 1கொரி.3:16,17 ல் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா என்று வாசிக்கிறோம். பாருங்கள் நாம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாயிருக்கிறோம். ஆதலால் கர்த்தருடைய இந்த சரீரத்தை (1கொரி.6:13) நாம் மோக இச்சைகளுக்குட்படுத்த கூடாது. (1தெச.4:6) தேவனுடைய ஆவியையுடைய ஆதாம் மற்றும் ஏவாள் நிர்வாணிகளாகயிருந்தும் வெட்கப்படவில்லை. (ஆதி.2:25) என்று அவர்கள் தேவனுடைய பிரசன்னதை இழந்தார்களோ அன்று தான் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்தார்கள். மனுஷன் செம்மையானவனாகவே உண்டாக்கப்பட்டான். (பிர.7:29)

**76. நாம் மூன்று விதமான சரீரத்திற்குட்பட்டவர்கள்.** ஒன்று பூமிக்குரிய சரீரம் அதாவது ஜென்ம சரீரம். நாம் உயிர்வாழும் இந்த சரீரம் (Human Body). அடுத்து வானத்திற்குரிய சரீரம் (ஆவியினுடைய சரீரம் - Celestial Body) மூன்றாவது மகிமையின் சரீரம் (Glorified Body). இந்த சரீரத்தில் சரீரம், ஆவி, ஆத்துமா என்ற மூன்று மூலக்கூறுகள் உண்டு. உங்களுக்குள்ளே ஆத்துமா. ஆத்துமாவிற்கு வெளியே ஆவி. ஆத்துமா, ஆவி உங்கள் சரீரத்தில் குடிகொண்டிருக்கிறது. சரீரத்திற்கு ஐந்து புலன்கள் உண்டு. (1) பார்த்தல் – See – Eye (2)

ருசிபார்த்தல் – Taste – Tongue (3) உணருதல் – Feel – Skin (4)முகர்தல் – Smell – Nose (5).கேட்டல் – Hear – Ear.

77. தேவத்துவத்துக்கடுத்த திரித்துவ உபதேசத்தில் உள்ளவர்கள் இம்மைக்குரிய நன்மைகளுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை உபயோகிக்கிறார்கள். ஆனால் ஆத்தும இரட்சிப்புக்கு அந்த நாமத்தை உபயோகிக்கவிடாதபடிக்கு சாத்தான் அவர்களை தடை பண்ணுகிறான். ஆதலால் அவர்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்து போனார்கள். கவனியுங்கள் திரித்துவ ஸ்தாபன சபையினர் :

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிசாசுகளை துரத்துகிறார்கள்.
2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் குருடர்கள் பார்வையடைகிறார்கள்.
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் சப்பானிகள் நடக்கிறார்கள்.
4. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்.
5. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் செவிடர்கள் கேட்கிறார்கள்.
6. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் மரித்தோர் உயிர்தெழுகிறார்கள்.
7. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் வியாதியிலிருந்து விடுதலை பெறுகிறார்கள்.
8. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஊமையன் பேசுகிறான்.

இவ்வாறாக அற்புதங்கள், அடையாளங்கள் நடப்பதற்கு இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தையே உபயோகிக்கிறார்கள். பிதா, குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமத்தை உபயோகிப்பது இல்லை. ஏனென்றால் அப்படியொரு நாமம் இல்லை. அதினால் அற்புத அடையாளங்கள் நடப்பதுமில்லை. ஆத்தும இரட்சிப்பும் கிடையாது. மண்ணோடு மண்ணாக அழிந்துப்போகும் இந்த சரீர நன்மைகளுக்காக, நலன்களுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமம் தேவை. மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது இல்லை. மாறாக தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க போகும் ஆத்துமாவுக்கு, அதன் நன்மைகளுக்காக, நலன்களுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமம் தேவையில்லை என்கிறார்கள். இதுதான் திரித்துவ ஸ்தாபன சபைகளில் காணப்படும் கொடிதான வஞ்சகம். பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என்றொரு நாமம் இல்லை. அதினால் ஆத்தும இரட்சிப்பும் இல்லை. ஆதலால் எல்லாவற்றையும் சோதித்து பார்த்து நலமானதை பற்றிக்கொள்ளுங்கள். சத்திய ஆவி உங்களுக்குள் வாசம் செய்வாராகில் அவர் நிச்சயமாக உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்.

78. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டது. தேவன் தம்முடைய சித்தத்தின் படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுத்தார். இலவசமாய் பெற்றார்கள். இலவசமாய் கொடுத்தார்கள். அன்று நாகமான் சுகம் பெற்றதற்கு ஒரு காணிக்கையை எலிசாவுக்கு கொடுத்தான். எலிசாவோ அதை வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவர் ஜீவனைக் கொண்டு சொன்னான். (2ராஜா.5அதி) ஆனால் இன்று பேலியாளின் மக்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்கள் பணத்திற்காக அற்புதங்கள் தன் ஊழியத்தில் நடக்காதா, காணிக்கை நன்கொடைகள் கிடைக்காதா என முக்கி முக்கி உபவாசித்து ஜெபம் பண்ணுகிறார்கள். வியாதி எதுவாகயிருந்தாலும் சுகம் பெற்றவரிடம் ஒரு நல்ல தொகையை வசூலித்து விடுகிறார்கள். அப்போஸ்தலர்கள் காலத்தில் அற்புதங்கள் யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் நடைபெற்றன. இன்றும் அப்படியே அது நடைப்பெற்று வருகிறது. இதற்காக மாத்திரமே இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை உபயோகிக்கிறார்கள். இந்த சரீரம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது இல்லை. தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாத ஒன்றுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமம். ஏனென்றால் அதில் தான் வல்லமையுள்ளது. வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நாம் எதை செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே செய்யவேண்டும். (கொலோ.3:17) அப்போஸ்தலர்கள் அற்புதங்கள் அனைத்தையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே செய்தார்கள். (லூக்.10:17) அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தையே உபயோகித்தார்கள். (மாற்.9:39) இந்நாட்களிலும் அதுதான் நடைபெறுகிறது.

79. இப்பொழுது கவனியுங்கள். சரீர குணத்தை விட ஆத்தும குணம் மிகவும் அருமையானது. அதாவது ஆத்தும இரட்சிப்பு. இதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள். (அப்.2:38) நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தில் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. (அப்.4:12) இயேசு

கிறிஸ்துவின் கட்டளை இதுவே. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசேலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பிரசங்கிக்க பட வேண்டும். (லூக்.23:44) அவருடைய கட்டளைகளுக்கு அப்போஸ்தலர்கள் கீழ்படிந்தார்கள். திரித்துவ ஸ்தாபன சபைகள் கீழ்படிகிறதில்லை. ஆதலால் அவர்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்துவிட்டார்கள்.

80. ஆக பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமம் இல்லை. மாறாக பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்குரியவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் கர்த்தராகிய (பிதா) இயேசு (குமாரன்) கிறிஸ்து (பரிசுத்த ஆவி). பிசாசானவன், உலகமனைத்தையும் மோசம் போக்குகிறவன், சாத்தான் உங்கள் சரீர நன்மைகளை பெற சரீரத்தின் வியாதிகளிலிருந்து விடுதலைப் பெற, சரீரத்தில் மீட்பு பெற, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினை உபயோகிக்க அனுமதிக்கிறான். ஆனால் உங்கள் ஆத்தும இரட்சிப்பை பெற நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினை உபயோகிக்க அனுமதிப்பது இல்லை. ஏனென்றால் நீங்கள் இன்னும் அவனுடைய கட்டுக்குள்தான் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பை பெற, அவன் உங்களை அனுமதிக்கவே மாட்டான். ஆக திரித்துவ உபதேசத்தைக் கொண்ட உங்கள் தலைவர்கள், விசுவாசிகள் யாரும் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட வில்லை. அவர்கள் உங்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தவும் முடியாது. சாத்தான், திரித்துவ உபதேசத்தில் உள்ளவர்களை கொண்டு சமுத்திரத்தையும், பூமியையும், சுற்றித்திரிந்து ஜனங்களை திரித்துவ மார்க்கத்திற்குள்ளாக்கி பின் அவர்களை இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறான். இன்று திரித்துவ உபதேசத்தில் உள்ளவர்கள் அனைவரும் விசுவாசத்தில் உள்ள அனைவரும் நரகத்தின் மகனாகத்தான் இருக்கிறார்கள். இது சத்தியம். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். இயேசுவே வாரும் நிருபத்தின் மூலமாக உங்கள் இருதய கதவு தட்டப்படுகிறது. காதுள்ளவர்கள் சத்தத்தைக்கேட்டு வாசலை திறந்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் இருதயத்தை ஆட்கொள்ளுவார். அப்பொழுது நீங்களும் உங்கள் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். உங்கள் ஆத்துமா பிழைக்கும். ஆத்தும இரட்சிப்பு மிகவும் அருமையானது விலையேறப்பெற்றது.

81. முடிவாக உங்களில் ஒருவரும் கெட்டுபோகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி தேவன் உங்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2பேது.3:9) ஆகையினால்தான் உங்கள் ஆத்தும இரட்சிப்புக்காக தேவன் அக்கறைக் கொண்டுள்ளதால் இந்த இதழ் உங்கள் கரங்களில் வந்து சேர்ந்துள்ளது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார் என விசுவாசிக்கும் ஒருவன் தன்னுடைய அக்கிரமங்கள், மீறுதல்கள், பாவங்கள் அனைத்திற்கும் மனந்திரும்பி தன்னுடைய பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியை பெறவேண்டும். இதுவே ஆத்தும இரட்சிப்புக்கு உங்கள் டாக்டர் கொடுக்கும் மருந்துச்சீட்டு. இதை உதாசினப்படுத்தினால் உங்கள் உயிருக்கு ஆபத்து. இந்த எச்சரிக்கைக்கு செவி சாய்ப்பது, செவி சாய்க்க மறுப்பது உங்கள் சுயாதீனம். இந்த நிருபத்தை நீங்கள் வாசித்த பின்பும் உங்கள் திரித்துவ ஸ்தாபன சபைகளை நீங்கள் பற்றிக்கொண்டிருப்பீர்களானால் உங்களுக்கு ஐய்யோ! ஆனால் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள என் தேவனோ துன்மார்க்கன் சாகிகிறது எனக்கு எவ்வளவேணும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத்திரும்பி பிழைப்பது அல்லவோ எனக்கு பிரியம் என்று கூறுகிறார். (எசே.18:23) நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டு திரும்பி பிழைப்பதையே விரும்புகிறேன் என்று தம்முடைய ஜீவனைக்கொண்டு சொல்கிறார். (எசே.33:11) நீ திரித்துவத்தை விட்டு திரும்புவாயா?

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடும்கூட இருப்பதாக ஆமென்.

**நவம்பர் 2018.** **கிறிஸ்துவின் அன்பில்**

**சகோ.காலேப்யோசுவா**

**If Undelivered**

**Please Return to:**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**

**Clause No. 128 P.O. GuideRules**
**GRNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.**
**Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**This Printed Book, Yesuvae Vaarum Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006. Editor Caleb Joshua**